
சுவடி : 42
ஏடு : 11
மே 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 098.
தொடர்புக்கு :
**72992 14554**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# மக்களாட்சியின் மாண்புக்கும் தமிழர்களின் உரிமைக்கும் எதிராகச் செயல்படும் பன்வாரிலால் புரோகித் ஆளுநர் பதவியிலிருந்து விலகவேண்டும்



**ப**ன்வாரிலால் புரோகித் 2017 அக்டோபர் 6 அன்று தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்றார். ஆளுநர் மாநிலத்தின் செயல்தலைவர் (Executive head of the State) என்று சொல்லிக் கொண்டு ஆளுநருக்கு அரசமைப்புச் சட்டப்படி விதிக்கப்பட்டுள்ள அதிகார வரம்புகளையும்; இதுவரையில் பின்பற்றப்பட்டு வந்த மரபுகளையும் மீறுகின்ற வகையில் பன்வாரி வால் புரோகித் செயல்பட்டு வருகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டு அரசைவிட, குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட தனக்கு அதிக அதிகாரம் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கட்டமைக்கும் வகையில் ஆளுநர் அத்துமீறிச் செயல்பட்டு வருகிறார்.

ஆளுநராகப் பொறுப்பேற்றது முதல் மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல்துறைத் தலைவர் அடங்கிய மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தி வருகிறார். இதற்குமுன் தமிழ்நாட்டில் இருந்த எந்தவொரு ஆளுநரும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தியதில்லை. இந்திய அளவிலும் எந்தவொரு மாநிலத்திலும் ஆளுநர்கள் மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை நடத்தியதில்லை. பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் கூட ஆளுநர்கள் இதுபோன்ற கூட்டங்களை நடத்துவதில்லை. பன்வாரிலால் புரோகித் மாவட்டங்களில் அதிகாரிகள் கூட்டங்கள் நடத்துவதை அ.தி.மு.க., பா.ச.க. தவிர்த்து மற்ற கட்சிகள் கண்டித்து வருகின்றன.

அண்மையில் “தி இந்து” ஆங்கில நாளேட்டுக்கு ஆளுநர் அளித்த நேர் காணலில், “நீங்கள் தனியாக ஒரு அரசு நிர்வாகத்தை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறதே” என்ற வினாவுக்கு, “ஆளுநர் என்பவர் மாநில அரசின் செயல் தலைவர். சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் உடையவர் என்ற உண்மையைத் தெரியாதவர்கள் என் செயல் பாடுகளை விமர்சிக்கிறார்கள்” என்று விடை கூறியிருக்கிறார்.

இதற்காக தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலாளருக்கு இணை யான தகுதிகொண்ட பார்ப்பனரான இராசகோபால் என்பவரை ஆளுநர் அலுவலகச் செயலாளராக அமர்த்திக் கொண்டார்.

அப்படியானால், தமிழகச் சட்டமன்றத்தில் ஆளுநர் உரை என்ற பெயரில் பன்வாரிலால் புரோகித் படித்தது அவர் எழுதியதா? முதல மைச்சர் பணித்த அரசு அதிகாரிகால் எழுதப்பட்டு, முதலமைச்சர் பழநிசாமியால் ஒப்புதல் அளிக்கப் பட்ட அறிக்கையைத்தானே பன்வாரிலால் படித்தார்! மாநில அரசின் செயல்தலைவர் நான்தான் என்று சொல்லிக் கொள்ளும் பன்வாரிலால் ஆளுநர் உரையை அவரே ஏன் எழுதவில்லை? அவ்வாறு எழுதிப் படிப்பதற்குச் சட்டத்தில் இடம்



*கன்னடரான சூரப்பாவுக்குப் பணிநியமன ஆணை வழங்கும் ஆளுநர் பன்வாரிலால்*

இல்லை. இந்திய அரசின் முப்படைகளின் தலைவர் குடியரசுத் தலைவர் என்று சட்டத்தில் உள்ளது. அதனால் குடியரசுத் தலைவர் முப்படைத் தளபதிகளை அழைத்து, பாக்கித்தான் மீது படையெடுங்கள் என்று ஆணை யிட முடியுமா?

ஒன்றரை ஆண்டுகள் அசாம் மாநிலத்தின் ஆளுநராக இருந்த போது மாவட்டங்களுக்குச் சென்று அதிகாரிகள் கூட்டங்களைப் பன்வாரிலால் புரோகித் நடத்தியிருக்கிறார்; அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்; அங்கு அதை யாரும் எதிரிக்கவில்லையே என்று தமிழ்நாட்டில் பா.ச.க.வினர் கேட்கின்றனர். தமிழ்நாடு சுயமரியாதையும், தன்னாட்சி உரிமை வேட்கையும் கொண்டது என்பதால் ஆளுநரின் மரபு மீறிய செயல்பாடுகளைத் தமிழக மக்கள் எதிர்க்கிறார்கள்.

முதலமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது, பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களின் பங்கேற்பது, குடியரசு நாளில் கொடியேற்றுவது, சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரின் முதல்நாளில் உரை நிகழ்த்துவது, தேவைப்படும்போது, முதலமைச்சர் மற்ற அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், பிற துறைகளின் செயலாளர்கள் ஆகியோரை அழைத்து அரசின் செயல்பாடுகளைக் கேட்டறிந்து ஆலோசனை வழங்குவது (கட்டளையிட முடியாது) பொதுவான நிகழ்ச்சிகளில் பங்கேற்பது என ஆளுநரின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆனால் பன்வாரிலால் புரோகித் இதுவரையில் தமிழ்நாட்டில் எந்த ஆளுநரும் மேற்கொள்ளாத வகையில் மாவட்ட நிர்வாகிகள் கூட்டங்களை நடத்தி வருகிறார். அவை ஆய்வுக் கூட்டங்கள் அல்ல; அக்கூட்டங்களின் போது அதிகாரிகளுக்கு எந்தவகையான கட்டளையும் இடுவதில்லை; மத்திய-மாநில அரசுகளின் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது மட்டுமே கேட் டறிந்து கொள்ளப்படுகிறது. அதிகாரிகளைக் கடிவது இல்லை. அதிகாரிகள் ஊழல் செய்யக்கூடாது. ஊழல் பணம் குடும்பத்துக்குக் கேடு தரும். கடவுளிடம் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது என்ற ஆளுநரும் ஆளுநர் சார்பிலும் விளக்கமளிக்கப் படுகிறது.

அரசின் திட்டச் செயல்பாடுகளை அறிந்துகொள்ள முதலமைச்சரையோ, மற்ற அமைச்சர்களையோ, தலைமைச் செயலாளரையோ, துறைகளின் செயலாளர்களையோ அழைத்துக் கேட்டறிந்து கொள்வதே மரபாக இருந்து வந்தது. இந்த மரபுகளை ஆளுநர் மீறி நடக்கிறார். குடியரசுத் தலைவர் நடுவண் அரசின் திட்டச் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக அதிகாரிகளின் கூட்டத்தை நடத்த மோடி அரசு அனுமதிக்குமா?

முன்னாள் முதலமைச்சர் செயலலிதா மறைந்த பின் ஆட்சியில் இருக்கும் அ.தி.மு.க. அரசு, பதவியில் தொடர்ந்து நீடித்து இருப்பதற்காகவே, நடுவண் அரசுக்கு அடிபணிந்து கிடக்கிறது. அதனால் பன்வாரிலால் புரோகித் மாவட்டக் கூட்டங்கள் நடத்துவதை அமைச்சர்கள் ஆதரித்துப் பேசுகின்றனர். ‘‘முதலமைச்சர் பழநிசாமி நான் மாவட்ட அதிகாரிகள் கூட்டம் நடத்துவதை ஏற்றுக்கொண்டுள்ள போது, நான் செல்லும் இடங்களில் எல்லாம் எதிர்க்கட்சிகள் கருப்புக்கொடி காட்டுவது பற்றி நான் கவலைப்படவில்லை. இவ்வாறு கருப்புக்கொடி காட்டுவது ஆளுநரை அவமதிப்பதாகும். இது ஒரு குற்றச் செயலாகும். அவர்களைக் கைது செய்ய முடியும். ஆனால் அவர்களை நான் புறக்கணித்து விடுகிறேன்’’ என்று பன்வாரிலால் ஆணவத்துடன் பேசியிருக்கிறார். ஆளுநர் செல்லும் இடங்களில் எல்லாம் அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்கிற தி.மு.க.வின் நிலைப்பாடு சரியானதே ஆகும்.


தமிழ்நாட்டின் சமூக நீதிகோட்பாட்டுக்கும், தமிழர்களின் உரிமைக்கும் எதிரான வகையில் பன்வாரிலால் துணைவேந்தர்களை நியமித்துள்ளார். தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலைப் பல்கலைக்கழகத்துக்குக் கேரளத்தைச் சேர்ந்த பரிமளாதேவி என்பவரையும், அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்துக்கு ஆந்திரத்தைச்

சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரான சூரியநாராயண சாஸ்திரி என்பவரையும், இந்திய அளவில் பல்கலைக் கழங்களின் தரவரிசையில் நான்காம் இடத்தில் உள்ள சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துக்குக் கன்னட ரான எம்.கே.சூரப்பா என்பவரையும் துணைவேந் தர்களாக ஆளுநர் நியமித்துள்ளார்.

துணைவேந்தரை நியமிப்பதற்கான தெரிவு செய்யும் குழுவால் இறுதி செய்யப்படும் மூவர் கொண்ட பட்டியலில் யாரை நியமிப்பது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் செயலலிதா காலம் வரை முதலமைச்சரிடமே இருந்தது. இதற்கு ஆளுநர் ஒப்புதல் அளிப்பது வழக்கம். ஆனால் இப்போது, இறுதியாக யாரைத் துணைவேந்த ராக நியமிப்பது என்பது குறித்து தமிழக அரசிடம் கலந்தாலோசிக்காமல், பன்வாரிலாலே முடிவு செய்துள் ளார். தமிழக அரசு எந்த அளவுக்குச் சப்பாணியாக இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

கல்வியைக் காவிமயாக்கும் மோடி அரசின் கொள் கையை ஆளுநர் பன்வாரிலால் செயல்படுத்தியிருக் கிறார். தமிழர்களில் தகுதியானவர் எவரும் இல்லை என்று தமிழர்களை இழிவுபடுத்தும் தன்மையில் துணைவேந்தர்களின் நியமனங்கள் அமைந்திருப்ப தாகத் தமிழகத்தில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்துக்கான இறுதிப் பட்டியலில் சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் இயக்குநராக இருந்த பொன்னுசாமி என்கிற தமிழரின் பெயர் இடம் பெற்றிருந்தது. ஆளுநரின் தமிழர் இனவிரோத எண்ணத்தாலேயே, காவிரி ஆற்று நீருக்கான போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த போது, கன்னடரான சூரப்பாவைத் துணைவேந்த ராக நியமித்தது தமிழர் நெஞ்சில் வேலைப் பாய்ச்சியது போன்றதாகும். மோடி, ஆட்சிக்கு வந்த பின் நிறுவப்பட்ட 16 மத்தியப் பல் கலைக்கழங்களுக்கு நியமிக்கப்பட்ட துணைவேந்தர் களில் ஒருவர்கூட தமிழர் இல்லை. தமிழர்கள் இந்திய ஆளும்வர்க்கத்தால் திட்டமிட்டே புறக்கணிக்கப்படு கின்றனர்.

அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரியின் பேராசிரியர் நிர்மலாதேவி அக்கல்லூரியில் பயிலும் மாணவிகளை “மேலிடத்தில்” உள்ளவர்களுடன் பாலியல் உறவு கொள்வதற்காகத் தூண்டும் உரையாடலில் ஆளுநர் பெயரும் இடம் பெற்றிருந்தது. 16.4.18 அன்று நிர்மலா தேவி கைது செய்யப்பட்டார். மதுரை காமராசர் பல் கலைக்கழகத் துணைவேந்தர் அன்றே அய்ந்துபேர்



*துணைவேந்தர் செல்லதுரையை அருகில் வைத்துக் கொண்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசும் ஆளுநர் பன்வாரிலால்*

கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார். அடுத்த நாள் 17.4.18 அன்று ஆளுநர், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அதிகாரி சந்தானம் தலைமையில் தனிநபர் விசாரணைக் குழுவை அமைத்தார். குற்றச்சாட்டில் தன் பெயரும் இடம் பெற்றுள்ள நிலையில் பன்வாரிலால் விசாரணைக் குழுவை அமைத்தது எந்த வகையில் நியாயம்? துணை வேந்தர் அமைத்த குழு கலைக்கப் படுவதாகத் துணைவேந்தர் அறிவித்தார். தமிழ்நாடு அரசு நிர்மலாதேவி மீதான குற்றச்சாட்டைத் தமிழ்நாட்டு அரசின் புலனாய்வுத்துறை விசாரிக்க ஆணையிட்டது.

நிர்மலாதேவி கைது செய்யப்பட்ட அடுத்த நாளே ஆளுநர் மாளிகையில் செய்தியாளர் கூட்டத்தை ஆளுநர் கூட்டினார். ஆளுநர் மாளிகையில் இதுபோல் செய்தியாளர் கூட்டம் நடப்பது இதுவே முதல் தடவையாகும். அக் கூட்டத்தில் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் செல்லதுரை, பதிவாளர் சின்னய்யா ஆகியோரை உடன் வைத்துக் கொண்டே ஆளுநர் பேசியது முறை கேடானதாகும்.

வேந்தர் என்ற முறையில் பல்கலைக்கழகம் தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கும் அதிகாரம் தனக்கு மட்டுமே உண்டு என்றும் இதில் விசாரணைக் குழு அமைக்கும் அதிகாரம் தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை என்றும் ஆளுநர் கூறினார். மானங்கெட்ட தமிழ்நாட்டு அரசின் முதலமைச்சர் ஆளுநரின் அடாவடிப் பேச்சுக்கு இன்று வரை பதில் சொல்லவில்லை.

எல்லா வகையிலும் தமிழர்களின் உரிமைக்கும், நலனுக்கும், எதிராகச் செயல்படும். பன்வாரிலால் புரோகித்தை ஆளுநர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும்.

**01-05-2018** **- வே.ஆனைமுத்து**

# உச்சநீதிமன்றத்தின் வன்கொடுமை

க.முகிலன்

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆதர்ஷ்குமார் கோயல், உதய் உமேஷ் லலித் ஆகியோரைக் கொண்ட அமர்வு 20.3.18 அன்று 1989ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையான நோக்கத்தையே சிதைக்கும்படியான ஒரு தீர்ப்பை வழங்கியது. இத்தீர்ப்பை அம்பேத்கரிய-பெரியாரிய இயக்கங்களும், முற்போக்கு அமைப்புகளும் சில ஊடகங்களும் கண்டித்தன.


யாரும் எதிர்பாராத வகையில், எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், தலித் மக்கள் வடஇந்தியா முழுவதும் 2.4.2018 அன்று முழுஅடைப்பும், போராட்டங்களும் நடத்தினர். பல இடங்களில் வன்முறை நிகழ்வுகள் நடந்தன. வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டத்தில் மத்தியப் பிரதேசத்தில் ஆறு தலித்துகளும் உத்தரப்பிரதேசத்தில் இரண்டு பேரும், இராஜஸ்தானில் ஒருவரும் கொல்லப்பட்டனர். ஒரேநாளில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு, திடீரென தீப்பற்றியது போல் இந்தியா முழுவதும் முதன்மையான செய்தியானது. இத்தீர்ப்புக்குக் கடும் கண்டங்கள் எழுந்தன.

இத்தீர்ப்பை உள்ளூர வரவேற்கும் மனநிலையில் இருந்த இந்துத்துவ மோடி அரசு, இந்திய அளவில் தலித்துகள் வெகுண்டெழுந்து வீதிகளில் போராடியதால், வாக்கு வங்கி அரசியலால் உந்தப்பட்டு அடுத்த நாளே 3-4-18 அன்று உச்சநீதிமன்றத்தில் சீராய்வு விண்ணப்பம் அளித்தது. நீதிபதிகள் கோயலும் லலித்தும் உடனடியாக இடைக்காலத் தடைவிதிக்க மறுத்துவிட்டனர். இந்த வழக்கு விசாரணையின்போது நடுவண் அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் மணிந்தர்சிங், “வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நடுவண் அரசும் ஏற்றுக் கொள்கிறது; வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் முன்பிணை வழங்குவற்குத் தடையாக உள்ள 18ஆவது பிரிவை நீக்கலாம்” என்று உச்சநீதிமன்றத்தில் கூறியதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், நடுவண் அரசு இப்போது தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது ஏன்? என்று கேள்வி எழுப்பினர். பத்து நாள்கள் கழித்துதான் இந்தச் சீராய்வு விண்ணப்பத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளமுடியும் என்று கூறிவிட்டனர்.

### வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பிரிவில் “தீண்டாமையை” எந்த வடிவத்தில் கடைப்பிடிப்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்று எழுதப்பட்டுள்ளது. ஆயினும் சமூக நடைமுறை வாழ்வில் தீண்டாமை நீடிக்கிறது.

தீண்டாமையை ஒழிப்பதற்காக 1955இல் தீண்டாமைக் குற்றச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இதில் சில



*மத்தியப்பிரதேசம் மொரேனாவில் போராட்டத்தின்போது கல்வீச்சில் ஈடுபட்ட தலித்துகள். காவல்துறையால் 6 தலித்துகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

திருத்தங்கள் செய்யப்பட்டு 1976இல் “குடிமக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்” (Protection of Civil Rights Act) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் இச்சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, ஆதிக்கச் சாதியினர் பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மீது இழைத்தக் கொடுமைகளுக்கான தண்டையிலிருந்து தப்பித்துக் கொண்டனர். செல்வாக்கும் பணமும் கொண்ட மேல்சாதி இந்துக்கள் தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களை முறைகேடாகப் பயன்படுத்தினர் என்பதே உண்மையாகும்.

இந்த முறைகேடுகளுக்கு முடிவுகட்டும் தன்மையில் 1989ஆம் ஆண்டு பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் (Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities Act) இயற்றப்பட்டது. இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் 438ஆவது விதி முன்பிணை பெறுவதற்கான உரிமையை வழங்குகிறது. மேலும் அரசு ஊழியராக இருப்பவரைக் கைது செய்வதற்கு மேல் அதிகாரியின் முன்அனுமதியைப் பெற வேண்டும் என்று உள்ளது. ஆனால் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் 18ஆவது பிரிவு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 438ஆவது விதி இதற்குப் பொருந்தாது என்று கூறுகிறது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் 18ஆவது பிரிவு பட்டியல் சாதியினருக்கும் பழங்குடியினருக்கும் வழங்கியுள்ள பாதுகாப்பைத்தான் இப்போது உச்சநீதிமன்றம் நீக்கியுள்ளது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989இல் இயற்றப்பட்ட போதிலும் பார்ப்பன-மேல்சாதி உயர் அதிகார வர்க்கம் அச்சட்டத்திற்கான நெறிமுறைகளை உருவாக்காமல் ஆறு ஆண்டுகள் இழுத்தடித்தது. 1995 ஆம் ஆண்டில்தான் நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இச்சட்டம் நடப்புக்கு வந்தது. 2015இல் இச்சட்டம் மேலும் வலிமையாக்கப்பட்டது. வன்

கொடுமைகள் பட்டியல் மேலும் விரிவாக்கப்பட்டது. இதன்படி, இறந்த விலங்குகளை அகற்றுதல், பிணத்தைப் புதைக்க குழிவெட்டுதல், மனிதக் கழிவை அகற்றுதல் ஆகிய பணிகளைத் தலித்துகளோ, பழங்குடியினரோ செய்யுமாறு பணிப்பதும் வன்கொடுமையே என்று இச்சட்டம் சொல்கிறது.

1989ஆம் ஆண்டின் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், குற்றம் சாட்டப்பட்டவர் எளிதில் பிணையில் வெளிவராமல் சிறைக் காவலில் இருக்குமாறு செய்வதால், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர் அவரால் அச்சுறுத்தப்படுவதற்கான வாய்ப்பு குறைகிறது. ஆயினும் இந்துமத சாத்திரங்களால் கட்டமைக்கப்பட்ட சாதியப்படி நிலையில் கடைநிலையில், வறியவர்களாக, வலிமையற்றவர்களாக, உடைமையற்றவர்களாக, எந்த வகையான செல்வாக்கும் அதிகாரமும் இல்லாதவர்களாக இருக்கும் பட்டியல் சாதியினரும் பழங்குடியினரும் தங்கள் மீது இழைக்கப்படும் வன்கொடுமைகளில் 25 விழுக்காடு அளவிற்கே காவல்நிலையத்திலோ மற்ற அமைப்புகளிடமோ புகார் தெரிவிக்கின்றனர் என்று களஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோதிலும் அதிகாரவர்க்கம் தாழ்த்தப்பட்டவர்களை இழிவாகக் கருதும் மனப்போக்கினால், ஆதிக்கச் சாதியினர் இழைக்கும் குற்றங்களை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய மறுத்துவருகிறது. 2002ஆம் ஆண்டில் அரியானாவில் ஜஜ்ஜார் என்ற இடத்தில் மாட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்த அய்ந்து தலித் இளைஞர்களைச் சாதிவெறி பிடித்த கும்பல் அடித்துக் கொலை செய்தது. இந்த வழக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. தலித்துகளை அடித்தபோது அவர்கள் எந்தச் சாதி என்று தெரியாது என்று நீதிமன்றம் இதற்கு விளக்கமளித்தது. செத்தமாட்டின் தோலைத் தலித்துகள் தவிர வேறு எந்தச் சாதியினரும் உரிப்பதில்லை என்பது இந்துக்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும். 2006ஆம் ஆண்டு மகாராட்டி மாநிலத்தில் கயர்லாஞ் ஊரில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பய்யாலால் போட்மாங்கேவின் மனைவி, மகள், இரண்டு மகன்கள் ஆகியோரை நிர்வாணமாக வீதியில் நடக்கச் செய்து பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி, கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இந்தக் குற்றமும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. தலித்துக்களுக்கு எதிராகவே அரசு நிர்வாகம் செயல்படுகிறது என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள் இவை.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பின் பின்னணி என்ன?

மகாராட்டிர மாநிலத்தில் ‘காரத்’ மருந்தியல் கல்லூரியில் பணியாற்றிய பாஸ்கர் கெய்க்வாட் என்ற தலித் ஊழியர் பற்றி அவருக்கான இரகசியக் குறிப்பேட்டில் கல்லூரி முதல்வரும் பேராசிரியரும் அவரைப்பற்றி அவரின் எதிர்காலத்தைப் பாழாக்கும் வகையில் குறிப்புகளை எழுதினர். இவர்களுக்கு



*ஏப்ரல் 2 அன்று தலித்துகள் பெருங் கிளர்ச்சிக்குப்பின் மத்தியப் பிரதேசம் பொரேனா நகர வீதியில் காவல்துறை அணிவகுப்பு*

எதிராக வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய, தொழில்நுட்பக் கல்வி இயக்குநராக இருந்த சுபாஷ் காசிநாத் மகாஜன் என்பவரிடம் பாஸ்கர் கெய்க்வாட் அனுமதி கேட்டார். மகாஜன் அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார். அதனால் பாஸ்கர் கெய்க்வாட் மகாஜன் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்தார். தன்மீதான வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு கோரி மகாஜன் மும்பை உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். மும்பை உயர்நீதிமன்றம் மகாஜன் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது. அதன்பின் மகாஜன் உச்சநீதி மன்றத்தை நாடினர்.

இந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே.கோயலும் யு.யு.லலித்தும் 20.3.2018 அன்று தீர்ப்பு வழங்கினர். இத்தீர்ப்பின் முதன்மையான மூன்று கூறுகள்;

1. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு முன்பிணை வழங்கலாம்.
2. குற்றம் சாட்டப்பட்டவர் அரசு ஊழியராக இருந்தால் அவருக்குப் பணி நியமன ஆணை வழங்கிய அதிகாரியின் முன் அனுமதி பெற்ற பிறகே அவர்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும்.
3. அரசு அலுவலர் அல்லாத பொதுமனிதராக இருந்தால், மாவட்டக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளரின் (DSP) முன் அனுமதி பெற்ற பிறகே முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்யவேண்டும்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதால், பொய்யான வழக்குகள் தொடுப்பதால், அப்பாவிகள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே புதிய நெறிமுறைகளை-நிபந்தனைகளை வகுத்திருப்பதாக நீதிபதிகள் கோயலும் லலித்தும் விளக்கமளித்துள்ளனர். நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் முன்பிணை பெறுவதை மறுக்கும் 18ஆவது பிரிவு செல்லாததாக்கும் வகையில் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உச்சநீதி மன்றத்துக்கு இல்லை.

அதேபோல், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் அடிப் படையான நோக்கத்தையே சிதைக்கும் தன்மையில் புதிய நிபந்தனைகளை விதிக்கும் அதிகாரமும் உச்ச நீதிமன்றத் துக்கு இல்லை. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் மட்டுமின்றி, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட எந்தவொரு சட்டமாக இருந்தாலும், அச்சட்டத்தில் குறைபாடுகள், போதாமைகள் இருப்பதாக உச்சநீதிமன்றம் கருதினால், அதுகுறித்த தன் கருத்தை நாடாளுமன்றத்துக்குப் (இந்திய அரசுக்கு) பரிந் துரையாகத் தெரிவிக்கலாம். ஒரு சட்டத்தை மாற்றவும் திருத்தவும் மக்களால் அதிகாரம் வழங்கப்பட்ட நாடாளு மன்றத்துக்கு மட்டுமே உண்டு. இந்த அதிகாரம் உச்சநீதி மன்றத்துக்கு இல்லை. எனவே மகாஜன் வழக்கில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்பை மீறி இத்தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையே! இதைக் காரணம் காட்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தையே நீர்த்துப் போகச் செய்யக் கூடிய நிபந்தனைகளை விதித்திருப்பதை ஏற்க முடியாது. வரதட்சணைத் தடுப்புச் சட்டம், பெண்கள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போன்ற பல சட்டங்களும் சிலரால் முறைகேடாகப் பயன்படுத்தப்படு கின்றன. ஒரு சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற காரணத்தைக் கூறி அந்தச் சட்டத்தையே இரத்து செய்ய வேண்டும் என்று கோருவது ஆதிக்கவாதிகளின் குரலாக இருக்கிறது.

பட்டியல் சாதியினரும் பழங்குடியினரும் பொய்யான வழக்குகளைத் தொடுப்பதை முளையிலேயே கிள்ளி எறிவதற்காகவே புதிய நிபந்தனையை விதித்திருப்பதாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் கோயலும் லலித்தும் கூறுகின்றனர். ஒட்டுமொத்தமாகப் பட்டியல் சாதியினரையும் பழங்குடியின ரையும் நம்பத்தக்கவர் அல்லர்-பொய்யர் என்று முத்திரை குத்துவதுபோல் இந்த நிபந்தனை இருக்கிறது. தலித்துகளை இழிந்த பிறப்பினராகக் கருதும் சாதி இந்துக்களின் மன நிலையில் இத்தீர்ப்பு மேலும் தலித்துகள் மீதான வெறுப்பை வளர்க்காதா? இதுபற்றியெல்லாம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சிந்திக்கவில்லை. ஏனெனில் அவர்கள் பார்ப்பனர்கள். உச்சநீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளில் பாதிப்பேர் பார்ப் பனர்கள். இந்திய மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினராக உள்ள பார்ப்பனர்கள் இந்தியா சுதந்தரம் பெற்று 70 ஆண்டுகளுக்குப் பின்னும் உச்சநீதிமன்றத்தில் பாதிப்பேராக இருப்பது பார்ப்பன மேலாதிக்கம் இன்னும் குலையாமல் இருப்பதையே காட்டுகிறது.

மேதை அம்பேத்கர் 1937இல் பம்பாய் மாகாண சட்டமன்றத்தில் பேசியபோது, ''நீதிபதிகள் சாதியச் சார்புடன் தீர்ப்புகளை வழங்குகின்றனர். அதனால்தான் பெரும்பாலான தீர்ப்புகள் சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் எதிராகவே இருக்கின்றன. எனவே நீதித் துறையில் இட ஒதுக்கீடு வேண்டும்'' என்று கூறினார்.



*அகமதாபாத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்புக் கண்டனக் கூட்டத்தில் தலித் தலைவர் ஜிக்னேஷ் மேவானி*

**முன்அனுமதி-தலித்துகளுக்கு எதிரான ஆயுதம்**

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஒருவர் மீது புகார் அளிக்கப்பட்டால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக, அக்குற்றச்சாட்டில் அடிப்படை ஆதாரம் இருக்கிறதா என்று மூத்த மாவட்டக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆய்வு செய்யவேண்டும்; ஆதாரம் இருப்பதாக உறுதி செய்தால் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும். துணைக் கண்காணிப் பாளர் எழுத்து வடிவில் அறிக்கை அளிக்கவேண்டும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்குமுன் துணைக் கண் காணிப்பாளரின் அறிக்கையைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தரவேண்டும். முன் அனுமதி குறித்து உச்சநீதிமன்றத் தீர்ப்பு இவ்வாறு சொல்கிறது.

ஒரு குற்றச்சாட்டின் மீது விசாரணை செய்து அது உண்மையா? பொய்யா? என்று தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உரியதாகும். ஆனால் இந்த அதிகாரத்தை முன் அனுமதி என்ற பெயரால் காவல்துறையிடம் அளிப்பது சட்டத்திற்கு எதிரானதல்லவா? சாதிஆதிக்க உணர்வு மேலோங்கியிருக்கும் காவல்துறையிடம் முன்அனுமதி வழங்கும் பொறுப்பை ஒப்படைப்பது நண்டுகளுக்கு நரியைக் காவலாக வைப்பது போன்றதே ஆகும். குற்றம் சாட்டப் பட்டவருக்கு ஆதரவாக அறிக்கை அளிக்குமாறு அழுத்தம் கொடுப்பார்கள். இந்த நெருக்குதலைத்தாண்டி உண்மை யான அறிக்கையை அளிக்கக்கூடிய நேர்மையான, துணி வான அதிகாரிகள் காவல்துறையில் ஒருசிலரே இருக்கக் கூடும்.

தேசியக் குற்றப்பதிவு ஆணையத்தின் அறிக்கையின்படி 2006 முதல் 2016 வரையிலான காலத்தில் தலித்துகள் மீதான தாக்குதல் 51 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது 2006இல் 27,070 ஆக இருந்த தாக்குதல் 2016இல் 40,801 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் பழங்குடியினர்

மீதான குற்றங்களின் எண்ணிக்கை இதே காலத்தில் 5,790 என்பதிலிருந்து 6,568 ஆக உயர்ந்துள்ளது. இது 13 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 25 விழுக்காடாக உள்ள-உடலுழைப்பாளர்களாகவே வாழுகின்ற இந்தப் பெரும்மக்கள் திரள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதை உச்சநிதிமன்ற நீதிபதிகள் கருத்தில் கொள்ளாமல், பொய்வழக்கால் ''அப்பாவிகள்'' தண்டிக்கப்படக்கூடாது என்பதற்கு முதன்மை தந்திருப்பது அவர்களின் வர்க்க-சாதியச் சார்பையே காட்டுகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 94 விழுக்காடு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள நடைமுறையில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும், குற்ற வாளிக்குத் தண்டனைப் பெற்றுத்தர வேண்டும் என்பதில் முனைப்புடன் செயல்படாமல் காவல்துறையினரும் அரசு வழக்குரைஞர்களும் தங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதால் இவ்வழக்குகளில் தண்டனை வழங்கப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறது. தேசியக் குற்றப்பதிவு ஆணைய அறிக்கையில் 2016ஆம் ஆண்டில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பட்டியல் சாதியினர் தொடர்பான வழக்குகளில் 1.4 விழுக்காடு, பழங்குடியினர் தொடர்பான வழக்குகளில் 0.8 விழுக்காடு அளவுக்கு மட்டுமே தண்டனை வழங்கப் பட்டுள்ளது. எனவே உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே.கோயல், யு.யு.லலித் ஆகியோர் அளித்துள்ள தீர்ப்பில் முன்பிணை வழங்கலாம் என்பதும் மாவட்டக் காவல்துறை கண்காணிப் பாளரின் முன்அனுமதி தேவை என்பதும் பட்டியல் சாதியி னரும் பழங்குடியினரும் தங்கள் மீது இழைக்கப்பட்ட கொடு மைக்கு நீதிகேட்டு காவல்துறையையோ, நீதித்துறையையே, அரசு நிர்வாகத்தையோ அணுகவிடாமல் அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகளேயாகும். 1989ஆம் ஆண்டின் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை மறைமுகமாகச் செல்லாததாக்குகிறது இத்தீர்ப்பு.

மும்பையில் உள்ள டாடா சமூக அறிவியல் நிறுனத்தின் ஆய்வாளர் ஸ்தபிர் கோரா என்பவர் மும்பையிலிருந்து வெளிவரும் அரசியல், பொருளாதார வாரஏட்டில் (Economic and Political Weekly) 2018 ஏப்பிரல் 18 நாளிட்ட இதழில், ''வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது என்கிற பிழையான புரிதல்கள்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். குசராத்தில் 6 மாவட்டங் களில் வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங் கப்பட்ட 461 வழக்குகளைக் கள ஆய்வு செய்திருக்கிறார். இவற்றுள் 142 வழக்குகளில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 156(3)இன்படி 70.6 விழுக்காடு வழக்குகள் நீதிமன்றம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. 34.39 விழுக்காடு வழக்குகள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 4.3 விழுக்காடு வழக்குகள் மட்டுமே காவல்துறை கண் காணிப்பாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அக்கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

எனவே காவல்துறை கண்காணிப்பாளர் விசாரணை செய்து அறிக்கை அளித்த பிறகுதான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும் என்பது பட்டியல் சாதியினரையும் பழங்குடியினரையும் அலைக்கழிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்குவதுடன் வரம்பற்ற கால நீட்டிப்புக்கு வழிவகுக்கும். தற்போதுள்ள வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் இரண்டு மாதங்களுக்குள் குற்றப்பதிவு செய்ய வேண்டும் என்றும், இதற்கான சிறப்பு நீதிமன்றம் ஆறு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கவேண்டும் என்றும் இருக்கிற காலஅளவுகள் பின் பற்றப்பட முடியாதனவாகிவிடும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, உச்சநீதிமன்றத் தீர்ப்பு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை ஏட்டளவில் மட்டுமே இருக்கும்படி செய்துவிடும்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே.கோயல், யு.யு.லலித் ஆகிய இருவரும் இதே தன்மையில் 2017 சூலை 27 அன்று வரதட்சணைக் கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்கிலும் தீர்ப்பு வழங்கியுள்ளனர். அத்தீர்ப்பில் மனைவியர் தங்கள் கணவன், மாமனார்-மாமியார் மீது பொய்யான புகார்களை அளிக்கின்றனர் என்று கூறி உள்ளனர். இத்தகைய பொய்யான புகார்களைத் தடுப்பதற்கான வழி முறைகளைக் கூறியுள்ளனர். உள்ளூர் குடும்ப நலக்குழு அந்தப் புகார் குறித்து விசாரித்து அறிக்கை தரும்வரையில் குற்றம் சாட்டப்பட்ட கணவனைக் கைது செய்யக்கூடாது என்று ஆணையிட்டுள்ளனர். உள்ளூர் குடும்பநலக்குழு வானது சமூக செயற்பாட்டாளர்கள், குடும்பத் தலைவிகள், ஓய்வு பெற்றவர்கள் முதலியோரைக் கொண்டதாக இருக்கும். இக்குழுவைத் தேசிய சட்ட ஆணையம் அமைக்கும் என்று இரு நீதிபதிகளும் தீர்ப்பளித்தனர். இவ்வாறு தீர்ப்பளிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தின் 142 ஆவது பிரிவு உச்சநீதிமன்றத் துக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கியுள்ளது என்றும் நீதிபதிகள் கூறினர். அர்னேஷ்குமார் எதிர் பீகார் அரசு வழக்கில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் 498(ஏ) பிரிவின் கீழ் வழக்குகளை ''எந்திரத்தனமாகப் பதிவு செய்யக்கூடாது; இச்சட்டம் முறைகேடாகப் பயன்படுத் தப்படுகிறது'' என்று நீதிபதிகள் கூறினர்.

இத்தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பலர் வழக்குத் தொடுத்துள்ளனர். நடுவண் அரசின் சார்பில் இவ்வழக்கில் கருத்துரைத்த கூடுதல் தலைமை வழக்குரைஞர் பி.எஸ். நரசிம்மா ''குடும்பநலக் குழுக்களை அமைப்பதும் அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதும் நடைமுறையில் இயலாது என்று மாநில அரசுகள் மடல் எழுதியிருக்கின்றன'' என்று தெரிவித்தார்.

இந்த இரண்டு நீதிபதிகளுமே வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட வாழ்நிலையில் இருக்கும் பட்டியல் சாதியினர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோரின் கொடிய நிலையைக் கருத்தில் கொள்ளாமல் குற்றம்சாட்டப்பட்ட-

ஆதிக்க நிலையில் இருக்கும் தனி நபருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டு, நடைமுறைப்படுத்த முடியாத தீர்வுகளைக் கூறுகின்றனர். இத்தீர்வுகள் பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை, உரிமையை, நியாயம் கேட்டுப் போராடும் வாய்ப்பை மறுப்பதாக இருக்கின்றன என்பதால்தான் இவர்களின் இரு தீர்ப்புகளுக்கும் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

இந்த இரண்டு நீதிபதிகளுமே பாரதிய சனதாகக் கட்சி ஆட்சிக்கு வந்தபின் 2014ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர்கள். மூத்த வழக்குரைஞர் கோபால் சுப்பிரமணியத்தை உச்சநீதி மன்ற நீதிபதியாக நியமிக்க 'கொலிஜியம்' வழங்கிய பரிந்துரையை நிராகரித்து, இந்த இரண்டு நீதிபதிகளையும் மோடி ஆட்சி பரிந்துரைத்தது. நீதிபதி லலித் பா.ச.க. தலைவர் அமித்ஷா மீதான போலி என்கவுண்டர் வழக்கில் அமித்ஷாவுக்காக வாதாடியவர்.

நீதிபதிகள் கோயல், லலித் ஆகியோரின் தீர்ப்பில் அப்பாவிகள் பாதிக்கப்படக்கூடாது என்கிற வாதம் தவிர வேறு வலுவான காரணங்கள் சொல்லப்படவில்லை. பொய்யான புகாரின் பேரில் குற்றச்சாட்டுக்கு ஆளானவர் தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், பொய்ப்புகார் அளித்தவர்களைத் தண்டிப்பதற்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. **எனவே வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில், கொடுமை இழைத்தவர்களுக்கு அஞ்சாமல், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்டு, பட்டியல் சாதியினரும் பழங்குடியினரும் சட்டவழியில் போராடுவதற்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்குவது இம்மக்கள் மீது நிகழ்த்தும் வன்கொடுமைக்கு ஒப்பானதே ஆகும்.**

தலித்துகள் 2.4.18 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக வடஇந்திய மாநிலங்களில் தீவிரமான போராட்டத்தை நடத்தினார்கள். இதற்கு எதிர்வினையாக ஆதிக்கச் சாதியினர் 10.4.18 அன்று வடஇந்திய மாநிலங்களில் முழுஅடைப்புப் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தின் போது பட்டியல் சாதியினருக்கும், பழங்குடியினருக்கும் அரசு வேலைகளிலும் கல்வியிலும் தரப்பட்டுள்ள இடஒதுக்கீட்டை இரத்து செய்ய வேண்டும் என்று முழக்கமிட்டனர். காலங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியும் அதிகாரம் மறுக்கப்பட்டு வந்தது. அந்தநிலையை மீண்டும் நிலை நாட்டவேண்டும் என்பதே ஆதிக்கச் சாதியினரின் நோக்கமாகும்.

இத்தீர்ப்பில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் சாதி அமைப்பை நிலைநிறுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடாது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். இடஒதுக்கீடு தருவதால் தான் சாதி வளர்கிறது என்று கூறுவது போன்றதே இது! மேலும் இந்த நீதிபதிகள் அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களான சகோதரத்துவம், சமூக ஒற்றுமையை வளர்ப்பதாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இருக்க வேண்டும் என்று தீர்ப்பில் கருத்துரைத்துள்ளனர்.

அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரும் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களாக இருக்கவேண்டும் என்று கூறினார். 25.11.1949 அன்று அரசமைப்புச் சட்ட அவையில் ஆற்றிய தன் இறுதி உரையில், "இந்த அரசமைப்புச் சட்டம் அரசியலில் மட்டுமே சமத்துவத்தை வழங்கியுள்ளது; காலங்காலமாக சமுதாய, பொருளாதாரத் தளங்களில் சமத்துவமின்மை மறுக்கப்பட்டு வந்துள்ளது. இந்த முரண்பாடுகளை விரைவில் களைய வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சமத்துவமின்மையால் பாதக்கப்பட்டவர்கள் இந்தச் சனநாயக் கட்டமைப்பையே தகர்த்தெறிவார்கள்" என்று எச்சரித்தார். அதன் ஒரு முன்னோட்டமாகத்தான் 2.4.18 அன்று தலித்துகளின் மபொரும் கிளர்ச்சி நடந்தது.


உச்சநீதிமன்றம் 20.3.18 அன்று அளித்த தீர்ப்பைத் திரும்பப் பெறவேண்டும். இல்லாவிடில் நடுவண் அரசு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை அவசரச் சட்டமாகப் பிறப்பிக்க வேண்டும். இது அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் வைக்கப்பட்டு, பட்டியல் சாதியினர் பழங்குடியினரைப் பாதுகாக்கவேண்டும். ❖

## சிறுமூர் ச.தட்சணாமூர்த்தி மறைந்தார்

கலச இராமலிங்கம் வழியாக எனக்கு 1978ஆம் ஆண்டில் அறிமுகம் ஆகி இந்நாள் வரையிலும் சென்னையில் நம் பணிகளுக்கு ஆதரவு அளித்து வந்த ச.தட்சணாமூர்த்தி, 2018 ஏப்பிரல் 1ஆம் நாள் இரவு 10.15 மணிக்கு உடல் நலக்குறைவால் சென்னையில் மருத்துவமனையில் உயிர்நீத்தார். அவரது உடலுக்கு தோழர்கள் கலசம், ப.வடிவேலு, சி.பெரியசாமி ஆகியோர் அவரது இல்லம் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

இவர் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணிக்கு அடுத்துள்ள சிறுமூர் கிராமத்தில் பிறந்தார். வாணியம்பாடி இசுலாமியர் கல்லூரியில் படித்து பி.காம் பட்டம் பெற்றார். சென்னையில் தமிழக அரசின் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் மேலாளராகப் பணிசெய்தார். பின் வேலையை விட்டு விலகி மனை வணிகத்தில் ஈடுபட்டார். பின்னர் "சென்னை எஸ்டேட்ஸ் & பில்டர்ஸ் எனும் நிறுவனம் தொடங்கி வீடுகட்டி விற்பனை செய்யும் தொழிலைச் செய்து வந்தார். இவர் பெரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் பணிகளுக்கும், சிந்தனையாளன், ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பணிகளுக்கும் தொடர்ந்து மனமுவந்து ஆதரவு அளித்து வந்தார். இவரின் மறைவால் துயரத்துக் ஆளாகியுள்ள இவரின் மனைவியர், மகள், மகன் ஆகியோருக்கு மனங்கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**- வே.ஆனைமுத்து**



# கார்ல் மார்க்ஸ்
## 200ஆவது ஆண்டு
## தோளில் கைபோட்டு நடக்கும் தோழன்!

தோழர் தியாகு

பிரசிய நாட்டில் செருமன் மொழி பேசும் ரைன் மாகாணத்தில் திரையர் எனும் ஊரில் 1818 மே 5ஆம் நாள் யூதரும் வழக்கறிஞருமான ஹென்றிக் மார்க்சின் எளிய குடும்பத்தில் கார்ல் மார்க்ஸ் பிறந்த போது, வானில் விண்மீன்கள் தோன்றி தேவகுமாரனின் தோற்றத்தை அறிவித்தது போல் எதுவும் நிகழவில்லை. அன்னை ஹென்றியத் பிரெஸ்பர்க் அவரைப் பெற்றுப்போட்ட போது, உலகைக் குலுக்கப் போகும் புரட்சிகளின் அறி வாசான் உதித்து விட்டார் என்று மலைகள் அதிரவில்லை. அலைகள் எழுந்து அப்படியே நிற்கவில்லை.

மார்க்ஸ் திரையரில் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு முதலில் பான் நகரிலும் பிறகு பெர்லின் நகரிலும் உயர் கல்வி பயின்றார். சட்டமும் வரலாறும் மெய்யியலும் பயின்றார். 1841ஆம் ஆண்டு எபிக்கூரசின் மெய்யியல் பற்றிய ஆய்வுரைக்காக முனைவர் பட்டம் பெற்று பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்தார்.

அந்த நேரத்தில் மார்க்ஸ், ஹெகலியக் கருத்துமுதல் கொள்கை உடையவராக இருந்தார். பெர்லினில் இயங்கி வந்த இடது ஹெகலியர்களின் வட்டத்தில் புருனோ, போயர் முதாலனவர்களோடு மார்க்சும் ஒருவர். இவர்கள் ஹெகலின் மெய்யியலிலிருந்து இறைமறுப்பு உள்ளிட்ட புரட்சிகர முடிவுகளுக்கு சென்றனர்.

பட்டம் பெற்ற பின் பான் நகருக்குச் சென்ற மார்க்ஸ் கல்லூரிப் பேராசிரியராக ஆசைப்பட்டார். ஆனால் அரசின் பிற்போக்குக் கொள்கை அவரைப் பல்கலைக் கழகத்துக்குத் திரும்ப விடாமல் தடுத்து விட்டது. அத்தோடு மார்க்சும் கல்வித் துறையில் வாழ்க்கையைச் செலவிடும் எண்ணம் துறந்தார்.

ஹெகலியக் கருத்துகளில் ஈடுபாடு கொண்டிருந்த மார்க்சுக்கும் மற்றவர்களுக்கும் இறையியலைக் குற்றாய்வு செய்த பாயர்பாக்கின் சிந்தனைகள் ஊக்க மளித்தன. பாயர்பாக்கின் நூல்களால் கருத்தளவில் விடுதலை பெற்றவர்களில் பிரெடெரிக் எங்கெல்சும் ஒருவர். இடது ஹெகலியர்கள் இப்போது பாயர்பாக் கியர்கள் ஆகி விட்டதாக எங்கெல்ஸ் சொல்வார். ஹெக லிடமிருந்து இயங்கியலையும் பாயர்பாக்கிடமிருந்து பொருள்முதல் கொள்கையையும் மார்க்ஸ்-எங்கெல்ஸ் உள்வாங்கி ஒன்றிணைத்துச் செழுமைப்படுத்திக் கொண்டனர்.

கல்வித் துறைக்குள் நுழைய வாய்ப்பு மறுக்கப்பட்ட மார்க்சுக்கு இதழியல் துறையின் கதவு திறந்தது. கொலோன் நகரிலிருந்து வெளிவரும் ரைனிஷ் சைட்டங் இதழில் எழுத மார்க்ஸ் அழைக்கப்பட்டார். விரைவில் அவர் அவ்விதழின் ஆசிரியர் ஆனார். அவர் ஆசிரியப் பொறுப்பில் இருந்த போது அரசு அவ்விதழைக் கடும் தணிக்கைக்கு உட்படுத்தியது. விரைவில் தடையே செய்தது. ரைனிஷ் சைட்டங் இதழில் மார்க்ஸ் எழுதிய முக்கியக் கட்டுரைகளில் ஒன்று மொசேல் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடியாளர்கள் பற்றியது. இது போன்ற கட்டுரைகள் எழுதும் போது, மார்க்ஸ் பொருளியலில் தமக்குப் போதிய பழக்கம் இல்லாதிருப்பதை உணர்ந்தார்.

1843ஆம் ஆண்டு மார்க்ஸ் ஜென்னியை மணந்தார். அதே ஆண்டில் முற்போக்கு ஏடு ஒன்றின் வெளியீட்டுக் காக பாரிஸ் சென்றார். மார்க்சின் கருத்துகள் விரைந்து புரட்சிகரமாக மலர்ந்தன. அவர் நடப்பில் இருக்கும் ஒவ் வொன்றையும் கடுமையாகக் குற்றாய்வு செய்தார். மக்கள் பெருந்திரளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் அழைப்பு விடுத்தார்.

1844 செப்டம்பரில் பிரெடெரிக் எங்கெல்ஸ் பாரிஸ் வந்த போது மார்க்சைச் சந்தித்தார். அது முதல் அவர்கள் நெருங்கிய தோழர்கள் ஆனார்கள். அவர்களது வாழ்நாள் தோழமைதான் மாந்தக் குலத்தின் முன்னேற்றப் பாதையில் ஒரு புதிய ஒளிவிளக்கம் ஏற்றியது. எங்கெல்ஸ் எப்போதும் மார்க்சுக்குத் தம்மைக் கீழடக்கிக் கொண் டாலும், மார்க்சியம் என்பது மார்க்சின் பெயரால் அறியப் பட்டாலும், அது அவர்கள் இருவரின் கூட்டுப் படைப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

பாரிஸ் நகரத்தில் அப்போது வகைவகையான புரட்சியாளர்கள் நிறைந்திருந்தார்கள். பலவிதமான குமுகியக் (சோசலிச) கொள்கைகள் அலசப்பட்டன. அவற்றுள் முக்கியமானது பூருதானின் கொள்கை. குமுகியத்தை வறுமைக் கோட்பாடு என்று பூருதான் கூறி வந்ததை மறுத்து ''கோட்பாட்டு வறுமை'' என்ற நூலை மார்க்ஸ் எழுதினார். புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் குமுகியத்தை மார்க்சும் எங்கெல்சும் தெளிந்துரைத்தனர். அதுவே பிறவகைக் குமுகியங்களுக்கு மாறாகப் பொதுவியம் (கம்யூனிசம்) எனப் பெயர் பெற்றது.

பிரசிய அரசாங்கத்தின் வலியுறுத்தலால் 1845இல் மார்க்ஸ் பிரான்சிலிருந்து நாடுகடத்தப்பட்டு, பிரசல்ஸ் போய்ச் சேர்ந்தார். 1847இல் மார்க்சும் எங்கெல்சும் பொதுவியக் கழகம் (கம்யூனிஸ்டு லீக்) என்னும் கமுக்கப் பரப்புரை அமைப்பில் இணைந்தனர். அவர்கள் எழுதிய புகழார்ந்த சிறுநூல் பொதுவிய அறிக்கை (கம்யூனிஸ்டு அறிக்கை) 1848 பிப்ரவரியில் வெளிவந்தது. பொருள் முதற்கொள்கையின் அடிப்படையிலான புதிய உலகக் கண்ணோட்டத்தின் உருவரை என்றும், புதிய பொது வியக் குமுகத்தின் (பொதுவுடைமைச் சமூகத்தின்) படைப்பாளி என்றும் இந்த அறிக்கையை லெனின் போற்றினார். முதலியப் பெருமலையை உடைக்கப் பிறந்த சிற்றுளி என்று வரலாறு இந்நூலைக் குறித்து வைக்கும்.

1848 பிப்ரவரிப் புரட்சி வெடித்த போது மார்க்ஸ் பெல்ஜியத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார். அவர் முதலில் பாரிஸ் திரும்பி அங்கிருந்து கொலோன் சென்று நியூ ரைனிஷ் சைட்டங் இதழின் முதன்மை ஆசிரியராக இருந்து மீண்டும் அதனை வெளியிட்டார். 1848-49 காலத்திய புரட்சிகர நிகழ்வுகள் மார்க்ஸ்-எங்கெல்சின் புதிய கண்ணோட்டத்தை உறுதி செய்தன. மார்க்சுக்கு எதிராகப் பிற்போக்கு ஆட்சியாளர்கள் தொடர்ந்த வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார். அடுத்து அவர் ஜெர்மனி யிலிருந்து நாடுகடத்தப்பட்டார். முதலில் பாரிஸ் சென்று, 1849 சூன் ஆர்ப்பட்டத்துக்குப் பின் அங்கிருந்தும் வெளி யேற்றப்பட்டு இலண்டன் சென்று அங்கேயே இறுதி வரை வாழ்ந்து மறைந்தார். இலண்டனில் தமது வாழ்நாள் பெரும்படைப்பாகிய தஸ் கபிடல் (மூலமுதல்) நூலை அரிதின் முயன்று ஆக்கி முடித்தார்.

அரசியல் ஏதிலியாக மார்க்சும் அவர் குடும்பமும் அல்லலுற்று அலைக்கழிந்த துயரம் பெரிது. ஓயாமல் தன்னலம் கருதாமல் எங்கெல்ஸ் செய்த உதவிகளால் தான் மார்க்சால் மூலமுதலைப் படைக்க முடிந்தது. எங்கெல்ஸ் மட்டும் இல்லையென்றால் மார்க்ஸ் வறுமையின் சுமையால் அழிந்தே போயிருப்பார் என்பார் லெனின்.

கோட்பாட்டு ஆராய்ச்சியோடு நில்லாமல் நடைமுறைப் பணிகளிலும் மார்க்ஸ் ஈடுபட்டு வந்தார். 1864ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பன்னாட்டுத் தொழிலாளர் சங்கத் தின் (முதல் அகிலம் என்று சொல்லப்படுவது) மூளை யையும் இதயமுமாகத் திகழ்ந்தவர் கார்ல் மார்க்ஸ். 1871ஆம் ஆண்டு உலகின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய பாரிஸ் கொம்யூன் நிகழ்ந்தது. இதையடுத்து பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற நூலை மார்க்ஸ் எழுதினார். பல நாடுகளில் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் அமைக்கப்படுவதற்கு அவரும் எங்கெல்சும் உதவி னார்கள்.

ஓயாத கோட்பாட்டு ஆய்வும் பன்னாட்டுத் தொழிலாளர் சங்க நடைமுறைப் பணிகளும் சேர்ந்து கொள்ள, மார்க்ஸ் உடல்நலிவுற்றார். எவ்வளவு முயன்றும் மார்க்சால் மூலமுதலை நிறைவு செய்ய முடியவில்லை. மூலமுதல், இயல் ஒன்று (முதல் பாகம்) மட்டுமே செருமன் மொழியில் வெளிவந்தது. அவரது சீராண்மையுடன் பிரெஞ்சுப் பதிப்பும் உருசியப் பதிப்பும் வெளிவந்தன.

ஜென்னி மார்க்ஸ் 1881 திசம்பர் 2ஆம் நாள் மறைந்தார், கார்ல் மார்க்ஸ் 1883 மார்ச்சு 14ஆம் நாள் மறைந்தார் எங்கெல்ஸ் கூறியது போல், சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். மார்க்ஸ் இணையர் இலண்டன் ஹைகேட் கல்லறையில் மீளாத்துயில் கொண்டுள்ளனர். அவர்கள் பெற்ற மக்கள் செல்வத்தில் இலண்டன் வாழ்க் கையின் வறுமையாலும் நோயாலும் மாண்டவர்கள் போக எஞ்சிய மூன்று புதல்வியரும் ஆங்கிலேய, பிரெஞ்சு குமுகியர்களை (சோசலிஸ்டுகள்) மணந்தனர். எலினார் அவெலிங் மூலமுதல் இயல் ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க உதவினார்.

மனித குல வரலாறு எத்தனையோ மாமனிதர் களைக் கண்டுள்ளது. அவர்கள் வரலாற்று மனிதர் களாகப் போற்றப்படுகின்றார்கள். வரலாறு படைத்தவர் கள் என்றும் கூட புகழப்படுகிறார்கள். ஆனால் இவர்களும் கூட வரலாற்றின் கருவிகளே என்று நமக்குச் சொன்னவர் கார்ல் மார்க்ஸ். வரலாறு தனக்கென்று வார்த்துக் கொண்ட தலைசிறந்த கருவிகள் என்று சில மனிதர்களை இனங்கண்டு பட்டியலிட்டால், இயற்கை அறிவியலில் டார்வின் போல், இயற்பியலில் கலிலியோ, நியூட்டன், ஐன்ஸ்டைன் போல், குமுக அறிவியலில் (எங்கெல்சும் உள்ளடங்கிய) கார்ல் மார்க்ஸ் முதலிடம் பெறுவார் என்று நம்புகிறேன். மார்க்சும் கூட காலம் கண்டெடுத்த கவின்மிகு கருவிதான்! நம்மைச் சூழ்ந் துள்ள குமுகத்தை ஆய்வு செய்து அறிந்து கொள்ளும் கருவி மட்டுமல்ல, மாற்றியமைக்கும் கருவியும்தான்!


மார்க்ஸ் போற்றிய மாமனிதர்கள் அடிமைமுறைக்கு எதிராகப் போராடிய ஸ்பார்டகஸ் போன்றவர்கள்! அவர்களை முன்னொரு காலத்தில் வாழ்ந்து மறைந்த வர்களாகக் கருதாமல் உயிரோடு தன்னில் உள்வாங்கிக் கொண்டு வாழ்வித்தவர் மார்க்ஸ். நாமும் கூட கார்ல் மார்க்சை பீடத்தில் நிறுத்தி வணங்கத் தேவையில்லை. அவரை நம் உணர்விலும் அறிவிலும் உள்வாங்கி ஒரு தோழனாகத் தோளில் கைபோட்டு நடக்கலாம். பாயர்பாக் பற்றி எழுதும் போது, மார்க்ஸ் சொன்னார்: அறிஞர்கள் உலகை விளக்க மட்டுமே செய்துள்ளனர். உலகை மாற்றுவதே முகமையானது

மார்க்சியம் - மார்க்சும் எங்கெல்சும் வார்த்தளித்த படைக்கலன்! மாற்றத்தின் படைக்கலன்! மாற்றத்துக்கான போராட்டங்கள் உள்ள வரை மார்க்ஸ் வாழ்வார்! நமக்கிடையே உயிரோட்டமாக வாழ்வார்! மாந்தக் குல முன்னேற்றத்துக்கான அணிவகுப்பில் உடன்வரும் தோழன் கார்ல் மார்க்ஸ்!

(மே 5, மார்க்சு பிறந்தநாள்) ❖

# 21ஆம் நூற்றாண்டுக்கு மார்க்ஸ் என்ன சொல்கிறார்?

- யானிஸ் உரூஃபக்கீஸ்



ஒரு அரசியல் அறிக்கை வெற்றிபெற வேண்டுமென்றால் அது ஒரு கவிதையைப் போல நம் இதயத்துடன் பேச வேண்டும். அதே நேரத்தில் நம் மனதில் அசாதாரணமான புதிய படிமங்களையும் கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச் சுற்றி நிகழும் குழப்பம் நிறைந்த, வருத்தமளிக்கக்கூடிய, பரவசமான மாற்றங்களின் உண்மைக் காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளும் வகையில் நம் கண்களை அது திறக்க வேண்டும்.

கூடவே, நம் தற்போதைய சூழல் தன்னுள் கருக்கொண்டிருக்கும் சாத்தியங்களையும் அது வெளிக்காட்ட வேண்டும். இந்த உண்மைகளை நாமே அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விட்டதே என்று நம் இயலாமையை நினைத்து நம்மை வருத்தப்பட வைக்க வேண்டும். மிகவும் பிற்போக்கான கடந்த காலத்தையே திரும்பத் திரும்ப உற்பத்திசெய்வதில் நாமும் கொஞ்சம் உடந்தையாகத்தான் இருந்திருக்கிறோம் என்ற சங்கடமான உண்மையை நாம் உணர்வதற்குத் தடையாக இருக்கும் திரையை அது அகற்ற வேண்டும். இறுதியாக, அது பீத்தோவனின் சிம்பனியைப் போல சக்தி கொண்டிருக்க வேண்டும்: அதாவது பெரும் மக்கள் திரள் அனுபவித்துக்கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட வேண்டும்; தான் கொண்டிருக்கும் அசலான விடுதலைக்கான சாத்தியத்தை மனிதகுலம் உணர்வதற்கான உந்துதலை அது தர வேண்டும்.

46 லிவர்பூல் தெரு, லண்டன் என்ற முகவரியில் 1848 பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின் அளவுக்கு வேறு எந்த அறிக்கையும் மேற்குறிப்பிட்டவற்றை ஒருங்கே இதுவரை சாதித்ததில்லை. இரண்டு இளம் ஜெர்மானியர்கள் சேர்ந்து எழுதிய அறிக்கை அது. ஒருவர் கார்ல் மார்க்ஸ், 29 வயது தத்துவவாதி. இன்னொருவர் ஃப்ரெடெரிக் எங்கெல்ஸ், வயது 28, மான்செஸ்டர் ஆலைக்கு வாரிசுதாரர்.

### எழுத்து வன்மை

அரசியல் சித்தாந்தப் படைப்பு என்ற வகையில் இந்த அறிக்கைக்கு நிகராக வேறெதையும் சொல்ல முடியாது. இதன் பிரசித்திபெற்ற தொடக்க வரிகளுக்கு ஷேக்ஸ்பியரின் எழுத்துவன்மை உண்டு. (ஐரோப்பாவை ஒரு பேய் பீடித்திருக்கிறது, கம்யூனிஸம் எனும் பேய்). கொல்லப்பட்ட தன் அப்பாவின் ஆவியைச் சந்திக்கும் ஹாம்லெட்டின் நிலைக்கு வாசகரும் தள்ளப்படுகிறார்: ஏற்கெனவே இருக்கும் சமூக அமைப்போடு நான் ஒத்துப்போகவா? அல்லது, தற்போதைய சூழலுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி, அப்படி அதை எதிர்ப்பதன் மூலம், முற்றிலும் புதிதான, துணிவு மிகுந்த ஒரு உலகத்துக்கு வழிகாட்டவா? என்ற கேள்விகள் வாசகருக்கு எழும்.

மார்க்ஸ், எங்கெல்ஸின் காலகட்டத்தைச் சேர்ந்த வாசகர்களுக்கு இது ஒன்றும் ஐரோப்பாவின் அறிவுஜீவி வட்டங்களில் மட்டும் விவாதிக்கப்படும் பிரச்சினையாக இல்லை. அவர்களின் அறிக்கையானது செயலில் இறங்குவதற்கான ஓர் அறைகூவல், இந்தப் பேயின் மந்திரத்துக்குச் செவிசாய்ப்பதால் பெரும்பாலும் தண்டனைக்குள்ளாக வேண்டிவரும், சில சமயங்களில், நீண்ட சிறைவாசத்துக்கும் ஆளாக வேண்டிவரும். இன்றும் இதைப் போன்ற பிரச்சினை இளைஞர்களை எதிர்கொண்டிருக்கிறது: தன்னைத் தானே பிரதியெடுத்துக்கொள்ள முடியாததும் சிதைவுற்றுக்கொண்டிருப்பதுமான சமூக அமைப்பு; நிலைபெற்றுவிட்ட அந்த அமைப்பை ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துவதா, அல்லது ஒன்றாகச் சேர்ந்து வேலைபார்ப்பதற்கு, விளையாடுவதற்கு, வாழ்வதற்குப் புதிய வழிமுறைகளைத் தேடி, தனிப்பட்ட இழப்புகளுக்கு ஆளாகும்படி, இந்தச் சமூக அமைப்பை எதிர்ப்பதா? அரசியல் அரங்கிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் கிட்டத்தட்ட காணாமல் போய்விட்டன. என்றாலும், கம்யூனிஸ அறிக்கையின் ஆதார சக்தியாக இருக்கும் கம்யூனிஸத்தின் உத்வேகத்துக்கு முட்டுக்கட்டை போடுவது கடினம் என்பது திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

கண்ணுக்குத் தெரியும் எல்லையைத் தாண்டி சிந்திப்பதுதான் எந்தவொரு அறிக்கையின் இலக்காக இருக்கும். ஆனால், தங்கள் காலத்துக்கு 150 ஆண்டுகள் தாண்டி வரக்கூடிய யுகத்தைப் பற்றித் தெளிவாகச் சித்தரிப்பதிலும், தற்போது நாம் எதிர்கொண்டிருக்கும்

முரண்பாடுகளையும் தெரிவுகளையும் ஆய்வுசெய் வதிலும் மார்க்சும் எங்கெல்சும் அடைந்திருக்கும் வெற்றி நமக்கு வியப்பூட்டுவது. 1840-களின் பிற்பகுதி யில் முதலாளித்துவமானது தட்டுத்தடுமாறிக் கொண்டி ருந்தது; மேலும், அந்தந்த பிராந்தியங்களை மட்டும் சார்ந்ததாகவும், சிதறுண்டதாகவும், துணிவற்றதாகவும் இருந்தது. எனினும், மார்க்சும் எங்கெல்சும் தங்கள் பார்வையைத் தூரமாக வீசினார்கள்; உலகளாவிய தாகவும் நிதிச்சந்தை சார்ந்ததாகவும் இரும்புப்பிடி கொண்டதாகவும் பல்வேறு வகைகள் கொண்டதாகவும் இருக்கும் நம் காலத்திய முதலாளித்துவத்தை அவர்கள் முன்பே கண்டு சொன்னார்கள். அவர்கள் கண்டு சொன்ன மிருகம் 1991-க்குப் பிறகுதான் உயிர்பெற்று உலவ ஆரம்பித்தது. அதே தருணத்தில்தான் அமைப்பானது மார்க்ஸிஸத்தின் மரணத்தையும் வரலாற்றின் முடிவையும் அறிவித்துக்கொண்டிருந்தது.

**கணிப்பு தவறாகவில்லை**

கம்யூனிஸ்ட் அறிக்கையின் கணிப்பு தோற்றுப்போய் விட்டது என்று வெகுகாலமாக மிகைப்படுத்தப்பட்டு வந்தது. முதலீடானது எங்கெங்கும் தஞ்சம் புகும், எங்கெங்கும் நிலைகொள்ளும், எங்கெங்கும் தொடர்பு களை நிறுவும் என்ற கம்யூனிஸ்ட் அறிக்கையின் பிரதானமான கணிப்பை இடதுசாரி பொருளாதார அறிஞர்கள்கூட விமர்சித்தார்கள். மூன்றாம் உலக நாடுகளின் துயர நிலையை உதாரணமாகக் காட்டி ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய தனது கேந்திரங் களைத் தாண்டி கிளைபரப்பும் முன்பே முதலீடு தனது துடிப்பை இழந்துவிட்டது என்று அவர்கள் விவாதித் தார்கள்.

நடைமுறையில் அவர்கள் கூறியது சரிதான்: ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இயங்கும் ஐரோப்பிய, அமெரிக்க ஜப்பானிய பெருநிறுவனங்கள் அங்கே முதலாளித்துவத்தைப் பரப்புவதற்குப் பதிலாக அங்குள்ள வளங்களை உறிஞ்சிக்கொள்ளும் காலனிய பாத்திரத் தையே ஏற்றுக்கொண்டு செயல்படுகின்றன. இந்த நாடுகளில் முதலாளித்துவரீதியலான முன்னேற்றத்தை அந்த நிறுவனங்கள் ஏற்படுத்தவில்லை (எல்லா நாடுகளையும், சிறிதும் நாகரிக வளர்ச்சி அடையாத நாடுகளையும் உட்பட உள்ளடக்கும் என்ற அறிக்கையின் வரிகளை இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள்.) மாறாக, வளர்ச்சியின்மையின் வளர்ச்சியையே மூன்றாம் உலக நாடுகளில் அந்நிய முதலீடு உற்பத்தி செய்து கொண்டி ருக்கிறது என்று அவர்கள் வாதிட்டார்கள். முதல் என்பது மூலைமுடுக்கெல்லாம் பரவக்கூடிய திறன் கொண்டது என்று அதன் மீது கம்யூனிஸ்ட் அறிக்கை அதீத நம்பிக்கை வைத்தது என்று அவர்கள் கருதினார்கள். உலகச் சந்தையின் சுரண்டல் என்பது பொருள் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் ஒவ்வொரு நாட்டிலும் பல்கலாச்சாரத் தன்மையை (காஸ்மோபாலிட்டன்) வழங்கும் என்று கம்யூனிஸ்ட் அறிக்கை முன்வைத்த கணிப்பை மார்க்ஸிய சிந்தனை கொண்டவர்கள் உட்பட பெரும்பாலான பொரு ளாதார அறிஞர்கள் கேள்விக்கு உட்படுத்தினார்கள்.

தாமதமாக என்றாலும் இறுதியில் கம்யூனிஸ்ட் அறிக்கை முன்வைத்த கணிப்பு சரியானது என்றே நிரூபணமானது. அதன் கணிப்பு சரிதான் என்று நிரூபணமாவதற்கு சோவியத் யூனியனின் சிதைவும், இந்திய, சீனத் தொழிலாளர்கள் 200 கோடி பேர் முதலா ளித்துவத்தின் தொழிலாளர் சந்தைக்குக் கொண்டுவரப் பட்டதும் நிகழ வேண்டிவந்தது. உண்மையில், முதலீடு முழுமையாக உலகமயமாவதற்கு கம்யூனிஸ்ட் அறிக் கையை ஏற்றுக்கொண்டிருந்த அரசுகள் சுக்குநூறாக உடைக்கப்பட வேண்டும். வரலாற்றுக்கு இதைவிட சுவையான முரண் வேறேதும் கிடைக்குமா என்ன?

**அச்சுறுத்தும் தொழில்நுட்பம்**

இன்று, கம்யூனிஸ்ட் அறிக்கையைப் படிக்கும் எவரும் நம்முடையதைப் போன்ற ஒரு உலகத்தின் சித்தரிப்பையே கண்டு வியப்படைவார்கள்; அதாவது தொழில்நுட்பப் புதுமை யுகத்தின் விளிம்பில் அச்சத்துடன் தட்டுத்தடுமாறி நடந்துகொண்டிருக்கும் உலகம். இந்த அறிக்கையின் காலத்தில் நிலப்பிரபுத்துவ வாழ்க்கைக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியது நீராவி இயந்திரம்தான். இந்த இயந்திரகதியின் சக்கரத்துக்குள் குடியானவர்கள் சட்டென்று சிக்கிக்கொண்டார்கள்; சமூகத்தின் மீது நிலவுடைமையாளர்கள் கொண்டிருந்த அதிகாரத்தைப் புதுவிதமான எஜமானர்கள், தொழிற்சாலை முதலாளிகள், வணிகர்கள் அபகரித்துக்கொண்டார்கள். நம் காலத்திலோ செயற்கை அறிவு தொழில்நுட்பமும் தானியங்கித் தொழில்நுட்பமும் பெரும் அச்சுறுத்தல்களாக நமக்குத் தென்படுகின்றன; மாறாமல் இருப்பதும், துரிதமாக உறைந்துபோவதுமான உறவுகளை துடைத்தழித்து விடுவதாக இந்தத் தொழில்நுட்பங்கள் நமக்கு வாக்குறுதி தருகின்றன.

உற்பத்தி சாதனங்களில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் புரட்சிகர மாற்றங்கள்... ஒட்டுமொத்த சமூக உறவு களையும் மாற்றியமைக்கின்றன என்று அறிக்கை கூறுகிறது. இதனால், உற்பத்தி முறையில் தொடர்ந்து புதுப்புது மாற்றங்கள், எல்லா சமூகத் தரப்புகளிலும் தொடர்ச்சியான பிரச்சினைகள், நீடித்த குழப்பநிலை, பதற்றநிலை ஏற்படும் என்கிறது அறிக்கை.

மார்க்ஸையும் எங்கெல்ஸையும் பொறுத்தவரை இந்த இடையூறு என்பது கொண்டாடப்பட வேண்டியது. இயந்திரங்களுக்கு உரிமையாளர்களாக இருப்பவர்

களுக்கும் அவற்றை வடிவமைத்து, இயக்கி, அவற்றோடு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பெரும் பிளவுக்கு ஆதாரமாக இருக்கும் நம் மிச்சசொச்ச மனச்சாய்வுகளைக் கடாசியெறிவதற்கு மனிதகுலத் துக்குத் தேவைப்படும் இறுதி உந்துதலுக்கான வினை யூக்கியாக இந்த இடையூறுதான் செயல்படுகிறது. எதுவெல்லாம் திடமாக இருக்கிறதோ அதுவெல்லாம் உருகி ஆவியாகும், எதுவெல்லாம் புனிதமோ அது வெல்லாம் அவமதிப்புக்குள்ளாக்கப்படும் என்று தொழில் நுட்பத்தின் விளைவை அவர்கள் கம்யூனிஸ அறிக்கையில் எழுதினார்கள்; மேலும், மனிதன் இறுதியில் தீவிரமான மனநிலையுடன் தன் வாழ்க்கையின் உண்மையான நிலைமைகளையும், தன் இனத்தவருடனான உறவு களையும் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறான் என்று எழுதினார்கள். தொழில்நுட்ப மாற்றமானது நாம் கொண்டிருக்கும் முன்தீர்மானங்களையும் தவறான உறுதிப்பாடுகளையும் கலைத்துவிடுகிறது. அப்படிச் செய்வதன் மூலம், நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவுகள் எவ்வளவு பரிதாபகரமானவை என்ற உண்மையைக் காண வேண்டும் என்று நம்மை வலியுறுத்தி, அதை நோக்கி நம்மை உதைத்துத் தள்ளி, உரக்கச் சொல்கிறது.

### விரும்பத்தகாத விளைவுகள்

இன்று, இதே விதமான கருத்தை அச்சிலும் இணையத்திலும் உலகமயமாதலின் எதிர்ப்பாளர்கள் கோடிக் கணக்கான சொற்களில் வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம். மிகமிக மோசமான வறுமையிலிருந்து ஓரளவு மோசமான வறுமை என்ற நிலைக்கு பல நூறு கோடிக் கணக்கானோரைக் கொண்டுவந்ததற்காக உலகமயமாதலைக் கொண்டாடும் அதே வேளையில் மதிப்புக்குரிய மேற்கத்திய செய்தித்தாள்கள், ஹாலிவுட் நட்சத்திரங்கள், சிலிக்கான் பள்ளத்தாக்கு தொழில்முனை வோர், பேராயர்கள் ஏன் பெரும் பணக்கார நிதிநிறுவன முதலாளிகள்கூட, உலகமயமாதலின் விரும்பத்தகாத பின்விளைவுகளைப் பற்றி முறையீடுசெய்கின்றனர்: சகித்துக்கொள்ளவே முடியாத சமத்துவமின்மை, வெட்கக்கேடான பேராசை, பருவநிலை மாற்றம், நாடாளுமன்ற ஜனநாயகங்களை வங்கி நிறுவனங்களும் அதீதப் பணக்காரர்களும் கடத்திவைத்திருப்பது போன்ற வைதான் இந்த விரும்பத்தகாத பின்விளைவுகள்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் வாசகருக்கு இது எதுவுமே வியப்பளிக்காது. சமூகம் என்பதை ஒரு முழுமையாக வைத்துப் பார்க்கும்போது இரண்டு எதிரி முகாம்களாக, ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் நிற்கும் இருபெரும் வர்க்கங்களாக அது மேலும் மேலும் பிளவுபட்டுக்கொண்டே இருக்கிறது என்று அந்த அறிக்கை வாதிடுகிறது.

உற்பத்தி இயந்திரமயமாக்கப்பட்டதால் இயந்திர உரிமையாளர்களின் லாப விகிதம்தான் ஒரே நோக்கமாக மாறுகிறது; இதனால், சமூகமானது உழைப்பில் ஈடுபடாத பங்குதாரர்கள், உரிமையாளர்களாக இல்லாத கூலித் தொழிலாளர்கள் என்று இரு தரப்புகளாகப் பிளவுபடு கிறது. நடுத்தர வர்க்கத்தைப் பொறுத்தவரை அறைக்குள் இருக்கும் டைனசோர்தான், அது அழிந்துபோயே தீரும். அதே வேளையில், மற்ற அனைவரது வாழ்க்கையும் பாதுகாப்பற்ற கூலி-அடிமை முறை எனும் ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படும்போது அதீதப் பணக்காரர்கள் மேலும் மேலும் குற்றவுணர்வு கொண்டவர்களாகவும் மன அழுத்தம் கொண்டவர்களாகவும் மாறுகிறார்கள். உச்சபட்ச அதிகாரத்தைக் கொண்ட இந்தச் சிறுபான்மை யினர் இந்த அளவுக்குப் பிளவுபட்டிருக்கும் சமூகங்களை ஆள்வதற்குத் தகுதியற்றவர்களாக ஆகிவிடுவார்கள் என்று மார்க்சும் எங்கெல்சும் அப்போதே கணித் தார்கள். பாதுகாப்பு மிகுந்த உயர்தரக் குடியிருப்புப் பகுதி களுக்குள் தங்களை அடைத்துக்கொள்வதோடு மட்டு மல்லாமல் பதற்றத்தால் தாங்கள் பீடிக்கப்படுவதையும் தங்கள் செல்வச் செழிப்பைத் தங்களால் அனுபவிக்க முடியவில்லை என்பதையும் அவர்கள் கண்டுணர் வார்கள். அவர்களில் சிலர், அதாவது தங்களின் நீண்ட கால சுயநலன் அடிப்படையில் சிந்திக்கும் புத்திசாலிகள், மக்கள்நல அரசுதான் இருப்பதிலேயே சிறந்த ஆயுள் காப்பீட்டுத் திட்டம் என்பதைக் கண்டுகொள்வார்கள். எனினும், அவசியமான வரிகளைச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஓய்வின்றி உழைப்பது அவர்களது இயல்பு என்று அறிக்கை விளக்குகிறது.

தற்காலத்தில் நாம் கண்கூடாகக் காண்பது இதைத் தானே! பாதுகாப்புணர்வு அற்றவர்களாக, எப்போதும் அதிருப்தியுடன் இருக்கும் குழுவான அதீதப் பணக்காரர்கள் தொடர்ந்து போதை மறுவாழ்வு மையங்களுக்குச் செல்கிறார்கள், சாமியார்களையும் மனநல மருத்துவர் களையும் விடாமல் சந்தித்து ஆறுதலையும் ஆலோசனை களையும் பெறுகிறார்கள். இதற்கிடையில், மற்றவர்க ளெல்லாம் ஒரு வேளை உணவைப் பெறுவதற்காகவும், பள்ளி, கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்கும், ஒரு கடன் அட்டையிலிருந்து இன்னொரு கடன் அட்டைக்குத் தாவுவதற்கும் பொருளாதார மந்தநிலையை எதிர்கொள் வதற்கும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாமோ கவலையின்றி வாழ்பவர்கள்போலக் காட்டிக்கொள் கிறோம்; நமக்குப் பிடித்ததையே நாம் செய்து கொண்டிருக் கிறோம், செய்துகொண்டிருப்பது நமக்குப் பிடிக்கும் என்றும் கூறிக்கொள்கிறோம். எனினும் யதார்த்தத்தில், நாம் அழுது அழுது கண்கள் வீங்கித் தூங்கிப் போகிறோம். கொடைவள்ளல்களும் அமைப்புசார்பான அரசியல்வாதி களும் பொருளாதார அறிஞர்களும் இந்த சூழலுக்கு ஒரே மாதிரியாக எதிர்வினை புரிகிறார்கள். அறிகுறிகளைப்

பற்றி மட்டும் (அதாவது ஊதிய ஏற்றத்தாழ்வு) கடுமையாக விமர்சிக்கிறார்கள்; காரணங்களைக் காணத் தவறிவிடு கிறார்கள் (அதாவது இயந்திரங்கள், நிலம், ஆதார வளங்கள் போன்ற உடைமைகள் குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் குவிந்ததன் விளைவான சுரண்டலை). இன்று செயலற்றுப்போய் நிற்கிறோம் என்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்கிறதா என்ன?

**நம்பிக்கையின் ஆதாரம்**

மேம்பட்ட தொழில்நுட்பங்கள் அதிவேகத்தில் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் ஒருவருக்கொருவர் அறிவார்த்தமான, நாகரிகமான முறையில் நமக்குள் எப்படி உறவாட வேண்டும் என்பதை முடிவெடுத்தாக வேண்டிய தருணத்தை நெருங்கி யிருக்கிறோம். வேலைசெய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்துக்குப் பின்னாலும் அதன் காரணமாக ஏற்படும் ஒடுக்குமுறை நிறைந்த சமூகக் கட்டுப்பாடுகளுக்குப் பின்னாலும் இனியும் நாம் ஒளிந்துகொள்ள முடியாது. இந்த அலங்கோலத்துக்கு ஊடாகப் பார்க்கவும் அதிருப்தி யிலிருந்து தப்பித்து, ஒவ்வொருவருக்கும் சுதந்திரமான வளர்ச்சி என்பது எல்லோருக்குமான சுதந்திரமான வளர்ச்சி என்பதன் அடிப்படையாக இருக்கும் புதுவித சமூக ஏற்பாடுகளைச் சென்றடைவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைக் கண்டுகொள்ளவும் கம்யூனிஸ்ட் அறிக்கை 21-ம் நூற்றாண்டு வாசகர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்த இலக்கை எப்படி அடைவது என்பதற்கான வரைபடத்தை இந்த அறிக்கை கொண்டிருக்கவில்லை எனினும், நிராகரிக்கவே முடியாத வகையில் நம்பிக்கையின் ஆதாரமாக இந்த அறிக்கை விளங்குகிறது.

நம்மைப் பரவசப்படுத்தும், ஊக்கப்படுத்தும், வெட்கித் தலைகுனிய வைக்கும் ஆற்றலை இந்த அறிக்கை 1848-ல் வெளியானபோது கொண்டிருந்ததைப் போலவே தற்போதும் கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம், காலத்தின் வரலாறு அளவுக்கு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டங்களும் பழமையானவை என்பதால்தான். மார்க்சும் எங்கெல்சும் இதை துணிச்சலான ஒருசில வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்: இதுவரையிலான சமூகத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே.

சரி, இந்த அறிக்கையின் அடிப்படைதான் என்ன? நாம் ஒவ்வொருவரும், குறிப்பாக இன்றைய இளைஞர்கள் அனைவரும், வரலாறு அரசியல் போன்றவற்றின்மீது ஏன் அக்கறை செலுத்த வேண்டும்?

**மகிழ்ச்சியும் சுதந்திரமும்**

மார்க்சும் எங்கெல்சும் மிகவும் எளிமையான இந்தப் பதிலையே தங்கள் அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கிறார்கள்: அசலான மனித மகிழ்ச்சியும் அதற்குத் துணையாக இருக்கும் நியாயமான சுதந்திரமும். அவர்களைப் பொறுத்தவரை இவைதான் மிகவும் முக்கியமானவை. உற்பத்திசெய்பவர்களுக்கும் உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களுக்கும் இடையிலான பெரும் பிளவுதான் அவர்களின் அலசலுக்கு மிகவும் முக்கியமான மையம். முதலுக்கும் கூலி அடைப்படையி லான உடலுழைப்புக்கும் இடையிலான பிரச்சினைக்குரிய உறவு என்பது நமது வேலையை நாம் அனுபவித்துச் செய்வதிலிருந்தும், உற்பத்திசெய்யும் பொருட்களை அனுபவித்து உற்பத்திசெய்வதிலிருந்தும் நம்மைத் தடுக்கிறது. முதலாளிகளையும் தொழிலாளர்களையும், பணக்காரர்களையும் ஏழைகளையும் சிந்தனையற்ற பகடைக்காய்களாக மாற்றுகிறது. நமது சக்திக்கு அப்பாற் பட்ட சக்திகளால் இந்தப் பகடைக்காய்கள் அர்த்தமேயற்ற ஒரு இயந்திர வாழ்க்கையை நோக்கித் தள்ளப்படு கின்றன.

சரி, இவற்றையெல்லாம் எதிர்கொள்ள நமக்கு அரசியல் ஏன் தேவைப்படுகிறது? இதற்கு மார்க்ஸ், எங்கெல்ஸின் பதில் இதுதான்: இந்த முட்டாள்தனத்தை நாம் தனிநபர்களாக முடிவுக்குக் கொண்டுவர முடியாது; ஏனெனில், இந்த முட்டாள்தனத்துக்கு மாற்று மருந்தை உற்பத்திசெய்யும் எந்தச் சந்தையும் ஒருபோதும் உருவாகப்போவதில்லை. கூட்டான, ஜனநாயக அரசியல் செயல்பாடுதான் சுதந்திரத்துக்கும் மகிழ்ச்சிக்கும் நமக்கு இருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு. இதற்காக நாம் எத்தனை இரவுகள் வேண்டுமானாலும் கண்விழித்து உழைக்கலாம்.

- **யானிஸ் வருஃபக்கீஸ்,** பொருளாதார அறிஞர்,
கிரீஸ் நாட்டின் முன்னாள் நிதியமைச்சர். தி கார்டியன்,
சுருக்கமாகத் தமிழில்: ஆசை
நன்றி : 'தி இந்து' (தமிழ்) 1-5-2018


## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | போ.திருநாவுக்கரசு<br>(சுவிட்சர்லாந்து)<br>உணவு விடுதி மேலாண்மை பிரிவு |
| கல்வி தகுதி | : | D.H.M.C.T. |
| இனம் | : | வன்னியர் |
| பிறந்த தேதி | : | 02.02.1986 |
| தந்தை | : | சி.போர்மன்னன் |
| தாயார் | : | போ. புஷ்பவல்லி |
| எதிர்பார்ப்பு | : | ஏதாவது ஒரு பட்டம் படித்த பெண் தேவை |

குறிப்பு : (இவர் ஆசிரியர் திரு.ஆனைமுத்து அவர்களின் அண்ணார் பெயரன் ஆவார்)

தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் :
8489413299, 918754244079

# இராணுவத் தளவாடச் செலவுகள் இந்தியப் பொருளாதாரத்தை
# வளர்க்குமா? வீழ்த்துமா?

குட்டுவன்

பழங்காலப் போர்க் களங்களில் சத்தம் இல்லை. மனித ஓலம் தான் இருந்தது. புகை இருக்காது; காயங்களுக்கும் மரணங்களுக்கும் காரணங்கள் கண்ணுக்குப் புலப்படாமல் இல்லை. நெருங்கித்தாக்கும் வரை ஆயுதங்கள் தன்னை ஒன்றும் செய்யாது என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்திருந்தான் - பொருளாதார அறிஞர் ஆதம் சுமித் - நாடுகளின் செல்வம் நூலில் (In an ancient battle there was no noise but what arose from the human voice; there was no smoke, there was no invisible cause of wounds or death. Every man, till some mortal weapon actually did approach him, saw clearly that no such weapon was near him"- Adam Smith, The Wealth of Nations)

12 ஏப்ரல் 2018இல் இந்தியா மற்றும் பல நாடுகளின் போர்க்கப்பல்கள், வானூர்திகள், டாங்கிகள் இன்னபிற போர்த் தளவாடங்களின் கண்காட்சி கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள திருவிடந்தையில் நடை பெற்றது. பிரதமர் மோடி தரையைத் தொடாமல் வானிலே வலம்வந்து இக்கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காத ஒன்றிய அரசைத் தமிழகமே திரண்டு எதிர்த்ததன் காரணமாகச் சில நூறு பேர்கள் கூட இல்லாத கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். ''மோடியே திரும்பிப் போ'' என்கிற முழக்கம் சென்னை மாநகரின் வீதிகளில் நடைபெற்ற கருப்புகொடி ஆர்ப்பாட்டங்களில் விண்ணதிர எழுப்பப் பட்டது. கருப்பு பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

தமிழகத்திற்கு ஒன்றிய அரசு அளிக்க வேண்டிய நிதி ரூ.8000 கோடிக்கு மேலே நிலுவையில் உள்ளது. ஆனால் வறட்சி நிவாரணத்திற்குக் குறைந்த அளவான 300 கோடி ரூபாயை அளித்த ஒன்றிய அரசு இந்த மூன்று நாட்கள் கண்காட்சிக்கு 800 கோடியைச் செலவிட்டது வெட்கித் தலைக் குனிய வேண்டிய செயலாகும். தமிழ் நாட்டைத் தொடர்ந்து அவமானப்படுத்தும் போக்காகும்.

ஒன்றிய அரசின் இராணுவத் தளவாட உற்பத்தியும் ஏற்றுமதியும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று சிலர் வாதிடுகின்றனர். முதல் உலகப் போரின் போதுதான் புதிய புதிய இராணுவத் தளவாடங்களின் கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்பட்டன. அழிவைத் தரும் ஆயுதங்களுக்குப் பொதுச்செலவைப் பெருக்கும் நிலையும் தொடர்கிறது. அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கி மனிதப் பேரழிவிற்கு வித்திட்டன.

சான்றாக முதல் உலகப் போர் ஐரோப்பிய நாடுகளுக் கிடையேதான் நடைபெற்றது. இருப்பினும் முதல் உலகப்




*காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததைக் கண்டித்து 12.4.18 அன்று சென்னைக்கு வந்த மோடியைத் திரும்பிப்போ என்று நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம்*

போர் முடிவுற்றவுடன் 3.74 கோடி இராணுவ வீரர்களும் 1.3 கோடி மக்களும் மடிந்தனர். இதில் இந்தியர்களும் அடங்குவர். பெருந்தலைவர் காந்தியார் போருக்கு ஆதரவான நிலைப்பாட்டினை எடுத்தார். இந்தியர்களை இராணுவத்தில் சேரும்படி வலியுறுத்தினார். இப்போரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு அன்றைய அமெரிக்க நாணய மதிப்பில் 20.8 கோடி ஆகும்.

இந்தப் பொருளாதார இழப்பாலும் மானுட இறப்பாலும் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, ஆகிய நாடுகளின் பொருளாதாரம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியது. மக்கள் ஏழ்மையில் தள்ளப்பட்டனர். இதன் தொடர்பாக ஏராளமான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

அறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷா வீணான போர்க் கூச்சலை ''தேசியம்'' என்று அழைப்பது பித்தலாட்டம் என்று குறிப்பிட்டார். போர் வெறியர்கள் பெர்னாட்ஷாவிற்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டனர். அவரின் நாடகங்கள் நடைபெறவில்லை. இதன் காரணமாக பெர்னாட்ஷா பல மாதங்கள் வீட்டிலேயே இருந்தார். போர் முடிந்தவுடன் பெர்னாட்ஷா கூறிய கணிப்பு உண்மையானது. பெர்னாட்ஷாவின் நாடகங்கள் அரங்குகளில் பல ஆண்டுகள் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்டன.

உலகப் புகழ் பெற்ற மெய்யியல் அறிஞரான பெர்ட்ரண்ட் ரசல்-ஏகாதிபத்திய போர்களால் மக்களும் நாடுகளும் சீரழிகின்றன என்று கூறியதற்காக 6 மாதம் (1918) சிறை வைக்கப்பட்டார். போர்களால் எவ்வித பயனும் முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை என்று

பல கட்டுரைகள், நூல்களை எழுதினார். வாழ்நாள் முழுவதும் அணுஆயுதத்திற்கு எதிராகவும் இராணுவத் தளவாடங்கள் உற்பத்திக்கு எதிராகவும் போராடினார்.

முதல் உலகப் போர் கற்பித்த பாடங்களை மறந்து ஏகாதிபத்திய நாடுகள் மீண்டும் போரில் குதித்தன. இப்போர் உலக முழுவதும் பல தீய விளைவுகளை ஏற்படுத்தியது. 1939இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போரின் மொத்த செலவு அன்றைய அமெரிக்க நாணய மதிப்பில் ஒரு இலட்சம் கோடியாகும். ஏறக்குறைய 2.5 கோடி இராணுவ வீரர்களும் 2 கோடி மக்களும் உயிரிழந்தனர். இதைத் தவிர ஜப்பான் மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டுத் தாக்குதல் மிகவும் கொடுமை யானது. அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் ஜெர்மானிய ஹிட்லருக்கு எதிராகப் போரிட்டாலும் ஆசிய நாடான ஜப்பானில் மக்கள் மீது அணுகுண்டை வீசி ஏற்படுத்திய கொடூரங்கள் இன்றும் ஜப்பானில் நினைவு கூரப்படுகின்றன.

இக்கட்டுரையாசிரியர் 2010இல் ஹிரோஷிமா நகருக்குச் சென்று அங்குள்ள போர் நினைவுச் சின்னத்தைப் பார்த்து அதிர்ச்சியுற்றார். காரணம் அந்தக் கண்காட்சியில் அணுகுண்டு வீசியதனால் ஏதும் அறியாத மக்கள், மாணவர்கள், சிறுமிகள் எவ்வாறு பாதிப்படைந் தார்கள் என்பதைக் காட்சிப்படுத்தியுள்ளனர். உலக நாடுகளின் பல தலைவர்கள் தங்களுடைய மனிதநேயக் கருத்துகளை வலியுறுத்தும் குறிப்புகளை அங்கு வைத்துள்ள புத்தகத்தில் குறிப்பிட்டாலும் மானுட அழிவை ஏற்படுத்தும் கொடும் ஆயுத உற்பத்தியை இன்றளவும் நிறுத்தவில்லை. அணுகுண்டுகள், இரசாயன குண்டுகள் போரில் பயன்படுத்தக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பல பிரிவுகள் சுட்டிக் காட்டினாலும் இதையெல்லாம் புறந்தள்ளி இன்றைக்கு சிரியாவில் ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா குண்டு மழை பொழிகின்றன. எனவேதான் இராணுவத் தளவாட உற்பத்தியைக் கொலைத் தொழில் என்றே பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையில் இடம் பெற்றிருக்கும், அமெரிக்கா ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகிய நாடுகள்தான் உலகில் அதிக அளவில் ஆயுதத் தளவாடங்களை உற்பத்திச் செய்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. இவர்கள் எவ்வாறு உலக அமைதியை விரும்புவார்கள் என்று பல அறிஞர்கள் வினா எழுப்பி வருகின்றனர்.

நோபல் பரிசு பெற்ற அமர்தியா சென் தனது வாதிடும் இந்தியன் (Argumentative Indian - 2005) என்ற நூலில் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையில் இடம் பெற்றுள்ள இந்த 5 நாடுகளை மரண வணிகர்கள் (Merchants of Death) என்று குறித்துள்ளார். எந்த நாடு



*போர்த்தளவாட கண்காட்சி நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திரமோடி*

இராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்கிறதோ அந்த நாடும் மரண வணிகர்கள் பட்டியலில் இணைந்து விடுகிறது. இராணுவத் தளவாடங்கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குத் தரும் வேலைவாய்ப்பு இறுதியில் அழிவைத் தரும் வேலைவாய்ப்பாக மாறிவிடுகிறது.

இரஷ்யாவின் பீட்ஸ்பர்க் நகரில் இட்லர் ராணுவம் சோவியத் ஒன்றியத்திற்கு ஏற்படுத்திய அழிவை இன்றும் காணலாம். குறிப்பாக ராணுவத் தளவாட தொழிற் சாலைகள் இரவோடு இரவாக இடம் மாற்றம் செய்யப் பட்டதை ரஷ்யப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் ஆண்ட்ரூஸ் 2007இல் இரஷ்யப் பயணத்தின் போது எங்களிடம் விளக்கினார். எனவே இராணுவத் தொழில் கள் எந்த இடத்தில் அமைந்தாலும் பேராபத்தை உரு வாக்கும் என்ற உண்மையை நேரில் காண முடிந்தது.

பொருளாதார நூல்களில் உள்ள கோட்பாடுகளில் நாட்டின் உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் வித்திடும் தொழில்களைப் பிரிக்கும் போது வேளாண்துறை, தொழில்துறை, பணித்துறை எனப் பகுக்கப்படுகின்றன.

மேலும் தொழில் துறையில் உற்பத்தியாகும் பொருட்களை அடையாளப்படுத்துவதற்காக 1.மூலதன பொருட்கள் உற்பத்தித் துறை (Capital goods sector) 2. நுகர்வுப் பொருட்கள் உற்பத்தித் துறை (Consumer goods sector) என்று பிரிக்கப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளில் உற்பத்தியாகும் பொருட்களைத் தேவைக்கு ஏற்ப பெருக்குவதும் குறைப்பதும் பொருளாதாரத்தில் ஆக்கப்பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தும். சான்றாக வேளாண் துறைக்குப் பயன்படும் டிராக்டர் இயந்திரம் மூலதனப் பொருள் உற்பத்தி வகையில் சேர்க்கப்படுகிறது. காரணம் இந்த இயந்திரத்தை விளைநிலங்களில் எங்குப் பயன்படுத்தினாலும் உணவு உற்பத்தித் திறன் பெருகும் உற்பத்தியானது பன்மடங்காக வளரும்.

மக்கள் இன்றியமையாத நுகர்விற்குத் தேவைப் படும் பொருட்கள், ஆடம்பரத் தேவைக்காகப் பயன்படும்



பொருட்கள் எனப் பகுப்பாய்வு செய்யலாம். மகிழுந்து, இரு சக்கர வாகனங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவை நுகர்வோர் பொருட்கள் உற்பத்தித் துறையில் சேர்க்கப் படுகின்றன. இத்துறையிலும் சிலரின் தேவைக்காக அதிகளவில் உற்பத்தியைப் பெருக்கினால் பொருளாதாரம் பாதிப்பிற்கு உள்ளாகும். மகிழுந்துகள், இருசக்கர வாகனங்களால் வெளியிடப்படும் புகை புது தில்லியைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. பெரு நகரங்களில் இவற்றால் நுரையீரல் நோய் இல்லதாதவர்களே இல்லை என்ற சூழல் பெருகி வருகிறது.

உணவுத் தின்பண்டங்கள்; சமையல் எண்ணெய், மருந்து பொருட்கள் ஆகியன மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களாகும். ஆனால் வாசனைத் திரவி யங்கள், அழகு சாதனப் பொருட்கள், வைரம் தங்க நகை உற்பத்தி ஆகியன பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வ விளைவை ஏற்படுத்தாது. மாறாக, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஆதாரங்களை முடக்கி விடும். எனவே மக்களின் வாழ்வாதாரங்களை மட்டும் உறுதி செய்யும் நுகர்ப் பொருட்களைப் பேணிப்பாது காப்பது, தேவையற்ற பொருட்களைக் கட்டுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சியை நிலையான தன்மையில் எடுத்துச் செல்ல உதவும்.

மூலதனப் பொருட்களின் உற்பத்தியும் பெரும்பான்மை மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்கள் உற்பத்தியும் தேவைக்கு ஏற்ப உரிய முறையில் வளர்ந் தால் நாட்டினுடைய வளம் பன்மடங்காகப் பெருகும். இத்தகைய வளர்ச்சியை முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் காண முடியாது. இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி இறுதியில் பெரும் பாதிப்பை மானுடத்திற்கு ஏற்படுத்துகிறது என்பதை உலகப்போர்களும் இன்று நடக்கும் வட்டாரப் போர்களும் உறுதி செய்கின்றன. இக் கூற்றை முற்றிலும் உணர்ந்த இந்தியாவின் முதல் பிரதமர் நேரு, முதல் தொழிற் கொள்கையை 6 ஏப்ரல் 1948இல் வடிவமைத்தார். தொழில் உற்பத்தித் துறை நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

**முதல்வகை**

1.ஆயுதத் தொழிற்சாலைகள்; 2.அணுசக்தி எரி பொருள்; 3. தொடர்வண்டி ஆகியன அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கும்.

**இரண்டு**

அடிப்படைத் தொழில்கள் - நிலக்கரி, இரும்பு, சுரங்கம், கப்பல் கட்டுதல், வானூர்தி உற்பத்தி செய்தல், தகவல் தொடர்புத் துறை, கனிமத் தொழில்.

**மூன்று**

அரசின் கட்டுப்பாட்டோடு செயல்படும் தொழில்கள்

**நான்கு**
**தனியார் தொழில்கள்**

நேரு உருவாக்கிய தொழிற்கொள்கைகளால்தான் இந்தியாவின் தொழில் கட்டமைப்புப் பெருகியது. அவர் காலத்தில்தான் பொதுத் துறை நிறுவனங்கள் உருவாக் கப்பட்டன.

1991க்குப் பிறகு நேரு பின்பற்றிய தொழிற்கொள்கை முழுவதுமாக மாற்றப்பட்டது. தனியார் துறைக்கு முன் னுரிமை அளிக்கப்பட்டது. நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் ஆயுதத் தொழிற்சாலைகள்கூட தனியார் முதலீட்டோடு இயங்கும் என்று மாற்றப்பட்டது. இதில் பா.ஜ.க., காங்கிரசு தேசியர்களுக்கு வேறுபாடே இல்லை என்பதுதான் கொடுமையிலும் கொடுமையானது.

1995இல் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தலைமையிலான குழு ஆயுதத் தொழில்களை உள்நாட்டுத் தொழில்நுட்பத்தோடு தொடங்கி விரிவாக்கம் செய்ய பல பரிந்துரைகளை வழங்கியது. ஏறக்குறைய 70 விழுக்காடு ஆயுத உற்பத்தித் தொழில்களில் இந்தியத் தொழில்நுட்பத்தையே பயன்படுத்தி வளர்த்தெடுக்கலாம் என்று அப்துல்கலாம் குறிப்பிட்டார். ஆனால் இந்தப் பரிந்துரைகளை எல்லாம் புறந்தள்ளிவிட்டு வெளிநாட்டு தனியார் நேரடி மூலதனத்தை (FDI) 26 விழுக்காட்டி லிருந்து 49 விழுக்காடு அளவிற்கு மோடி அரசு உயர்த் தியது. மேலும் இந்தியாவிற்குப் பயன்படக்கூடிய தொழில் நுட்பமாக இருந்தால் தனியார் நேரடி மூலதனத்தை 74 விழுக்காடு அளவிற்கு உயர்த்தலாம் என்று தற்போது மோடி அரசு முடிவு செய்துள்ளது. இத்துணைப் பரிந்து ரைகளுக்குப் பிறகும் இந்தியாவில் உற்பத்திச் செய்யப் படும் ஆயுதத் தளவாடங்கள் வெளிநாட்டு ஏற்றுமதித் தொகையில் ஒரு விழுக்காட்டிற்கும் கீழேதான் உள்ளன.

மேலும் 2015க்குப் பிறகு தொடர்ந்து ஆயுத ஏற்றுமதி குறைந்து வருகிறது. இசுரேல் சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகள் ஏற்றுமதிச் செய்யும் அளவைவிட இந்தியாவின் ஏற்றுமதி குறைந்துள்ளது. இந்தியாவினுடைய இராணுவத் தளவாடங்களின் இறக்குமதிப் பெருமளவில் அதிகரித்து

வருகிறது. 2017 புள்ளிவிவரப்படி இராணுவத் தளவாடங் களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

மேலும் இராணுவத்திற்குத் தேவையான விமா னங்கள், இலகு வானூர்திகள் வாங்குவதற்கு அதானி, அனில் அம்பானி போன்றோர் நடத்தும் தனியார் நிறு வனங்களோடு அரசு கூட்டு சேர்கிறது. இதில் பல ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடந்ததாக அண்மையில் காங்கிரசுத் தலைவர் ராகுல் குற்றம் சாட்டியுள்ளார். ஆயுத இறக்கு மதியிலும் வெளிநாட்டு இராணுவத் தளவாடங்களின் பாகங்களை வாங்கி லார்சன் டியுப்ரோ, டாடா போன்ற தனியார் நிறுவனங்களைக் கொண்டு அவற்றை வடிவமைப்பதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இராணுவ தளவாடத் தொழில் களிலும் தனியார் கொள்ளையடிக்க அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இத்தகையச் சூழலில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஒரு நிலையான பாதையில் செல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் உற்பத்திச் செய் யப்படும் இராணுவத் தளவாடங்களும் வெளிநாடுகளி லுருந்து இறக்குமதி செய்யப்பட்டு தனியார் துறையின் இலாபத்திற்கு விட்டுக்கொடுக்கப்படும் இராணுவத் தளவாடங்களும் இந்தியாவின் தொழில் துறையை எவ்வகையிலும் வளர்க்கப் போவதில்லை. மேலும் இந்தியாவின் பாதுகாப்பே கேள்விக்குறியாகிறது. சில வாரங்களுக்கு முன்பு மும்பாயிலிருந்து வெளிவரும் அரசியல் பொருளாதார ஏடு - EPW-Tank Nationalism - டாங்கிகள் தேசியம் என்று கேலியாகக் குறிப்பிட்டது. இப்போது புரிகிறதா? யார் தேசியவாதி? யார் தேசவிரோதி?

இந்தப் போக்கினை முற்றிலுமாக உணர்ந்த காந்தியார் இந்தியாவில் முக்கியமான மாநகரங்கள், நகரங் களிலிருந்து வேறுபட்டு நிற்கும் 7 இலட்சம் கிராமங்கள் பொருளாதார, சமூக, ஒழுக்க தார்மீக அடிப்படையில் விடுதலைப் பெற வேண்டும். இந்திய ஜனநாயக இலக்கு களை அடைவதற்கும் இராணுவத்திலிருந்து ஜனநாயக அமைப்பாக மாறுவதற்கும் போராட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று குறிப்பிட்டார். காந்தி பசனை பாடும் காங்கிரசுக்காரர்களும் காந்தியைச் சுட்டவர்களும் இக்கருத்தை உணர்வார்களா?

ஏற்கெனவே தகவல் தொழில்நுட்பக் கட்டமைப் பிலிருந்து பல புள்ளி விவரங்களும் இரகசியங்களும் வெளிநாடுகளுக்குச் சில தொழில்நுட்ப வல்லமை பெற்ற திருடர்களால் கடத்தப்படும் போது, இராணுவ இரக சியங்கள் மட்டும் கடத்தப்படமாட்டாது என்பதற்கு என்ன உறுதி? ❖

## புதுச்சேரியில் மாமேதை அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 128 ஆவது பிறந்தநாள் மற்றும் மே நாள் பொதுக்கூட்டம்



புதுச்சேரி மாநில மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் சார்பில், மாமேதை அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் 128 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் மே நாள் பொதுக்கூட்டம் புதுச்சேரி சாரம், அவ்வை திடலில் 30.4.2018 திங்கள் கிழமை மாலை 6 மணிக்கு புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. செயலாளர் பொறிஞர் இரா.திருநாவுக் கரசு தலைமையில் நடைபெற்றது. வழக்குரைஞர் ரூபாவதி அனைவரையும் வரவேற்று உரையாற்றி னார். அனைத்து தலித்-பழங்குடியினர் இயக்கங்கள் போராட்டக்குழு அமைப்பின் தோழர் புண்ணிய கோடி, பீம்சேனா தோழர் அலங்காரவேலு தன்னுரி மைக் கழகத்தலைவர் தூ.சடகோபன், பார்ப்பனிய பயரங்கவாத எதிர்ப்பு இயக்கத் தோழர் இரா.மங்கையர் செல்வன், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் சி.மூர்த்தி, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் வீர.மோகன், ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத் தோழர் லெனின், பெரியார் திராவிடர் விடுதலைக் கழக ஒருங்கிணைப்பாளர் கோகுல் காந்திநாத், ஒதுக்கீடு மறுக்கப்பட்டோர் கூட்டமைப்பின் தலைவர் பே.வீரமணி, மாணவர் கூட்டமைப்பின் நிறுவனர் சீ.சு.சாமிநாதன், மா.பெ.பொ.க.துணைப்பொதுச் செயலாளர் சி.பெரியசாமி மா.பெ.பொ.க. புதுச்சேரி மாநிலச் செயலாளர் இரா.திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர். புதுச்சேரி மா.பெ.பொ.க. துணைச் செயலாளர் சீனு.சந்திரசேகரன் நன்றி நவின்றார். பல்வேறு கட்சிகள், இயக்கங்கள் சார்ந்த தோழர்களும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி இரவு 10.30 மணிக்கு நிறைவுற்றது.



# வ.உ.சி.யும் சமூக நீதியும்

இராமியா

**க**ப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்று வ.உ.சிதம்பரனாரைப் பற்றிக் கல்விக் கூடங்களில் நமக்குப் பாடம் சொல்லித் தந்து இருக்கிறார்கள். அவர் ஒரு தொழிற்சங்கவாதி என்று பள்ளிகளில் சொல்லித் தருவது இல்லை. ஆனால் பொதுவுடைமை இயக்கங்களின் பரப்புரைகள் மூலம் அச்செய்தி ஓரளவிற்குத் தெரிகிறது. ஆனால் அவர் சமூக நீதிக்காக விட்டுக் கொடுக்காத போராட் டத்தை முன்னெடுத்தவர் என்ற செய்தி அடர்ந்த இருளுக் குள் திட்டமிட்டே மறைத்து வைக்கப்பட்டு உள்ளது.

இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் நடந்து கொண்டு இருக்கையில் மகாத்மா ஃபுலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் மற்றும் பிற தலைவர்களின் தலைமையில் சமூக நீதிப் போராட்டங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன. அப்படிப்பட்ட போராட்டங்களில் ஒன்றுதான் சேலம் நகரில் 5.11.1927 அன்று வ.உ.சி. தலைமையில் நடந்த ஒரு மாநாடு. இம்மாநாட்டில் தலைமை உரையை ஆற்று கையில் நாட்டு மக்களிடையே பிளவுகளும் பகைமை களும் இருப்பதற்குக் காரணமே கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லா மையே (அதாவது பார்ப்பனர்கள் மேல் நிலை வேலை களில் கொடூரமான அளவில் நிரம்பி வழிவது தான்) என்று பின்வரும் சொற்களில் வ.உ.சி. தெளிவாக விளக்குகிறார்:

“உலகத்திலும் அதன் ஒரு பாகமாகிய நம் தேசத் திலும், சரியான ஒன்றையோ, தப்பான ஒன்றையோ ஆதாரமாகக் கொண்டு சாதி வேற்றுமைகளும், அவற் றைப் பற்றிய உயர்வு தாழ்வுகளும் எக்காலத்திலும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும். அவற்றை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுதலும், அவற்றை ஒழிப்பதற்கு 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' தடை என்று சொல்லுதலும் ஆழ்ந்து ஆலோசியாமல் மேலெழுந்தவாரியாகச் சொல்லுதலாம். நாம் வேண்டுவது நம் தேசத்தவருள் நித்தியமாக நிலவும் ஒற்றுமையே. அவ்வொற்றுமைக்கு சாதி வேற்றுமை ஒழிவும், அது பற்றிய உயர்வு தாழ்வு ஒழிவும் அவசியம் என்று சிலர் செல்லி வருகிறபடியால் அவ்விரண்டு ஒழிவையும் நம்மில் சிலர் விரும்பு கின்றனர். அவற்றின் ஒழிவு அவசியம் என்று சிலர் கூறுவதற்குக் காரணம், தற்காலம் நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான சாதி வேற்றுமைகளும் அவற்றைப் பற்றிய உயர்வு தாழ்வுகளுமே.

ஆனால் உயர்வு தாழ்வு இல்லாத ஒரே சாதியா ருள்ளும், ஒரே குடும்பத்தினருள்ளும், ஒற்றுமையின் மையும், பகைமையும் கொலை முதலியனவும் நிகழக் காண்கிறேம், இதன்றியும் தம் சாதி உயர்வென்றும், பிறர் சாதி தாழ்வென்றும் கருதும் இரு வேறு சாதியார் சிலர் ஒற்றுமைப்பட்டு அந்தியந்த நண்பர்காளக வாழ்கின்ற தையும் காண்கின்றோம். இக்காட்சியால் நம் தேசத்தாருள் நிலவும் ஒற்றுமையின்மை, பகைமை முதலியவற்றிற்கு முக்கியமான காரணம் சாதி வேற்றுமையும், அது பற்றிய உயர்வு தாழ்வும் அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கத்தக்கது. ஆயின், நம் தேசத்தாருள் நிலவும் ஒற்றுமையின்மை, முதலியவற்றிற்கு முக்கிய மான காரணம் தான் யாதே? எனின் நம் தேசத்து இராஜாங்க உத்தியோகங்களிலும், சட்டசபை முதலிய ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களிலும், காங்கிரஸ் மகாசபை முதலிய பொது ஸ்தாபன உத்தியோகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாமையே”.

இவ்வாறு கூறிய வ.உ.சி. அதைப் பொருத்தமான எடுத்துக்காட்டுடனும் விளக்குகிறார்.

“ஒரு குடும்பத்தில் சகோதரர்கள் பத்துப் பேர்கள் இருக்கிறார்கள். குடும்பத்துக்கு ஆயிரம் ஏக்கர் நன்செய் புன்செய்களும், கர்ணம் உத்தியோகம் ஒன்றும் கிராம முனுசீபு உத்தியோகம் ஒன்றும் இருக்கின்றன. சகோதரர் பதின்மரில் வயதிலும் கல்வியிலும் முதிர்ந்த இருவர், கர்ணம் உத்தியோகத்தை ஒருவரும், கிராம முனிசீபு உத்தியோகத்தை மற்றொருவருமாகக் கொண்டு அவற்றின் சம்பளங்களைப் பெற்றும் குடும்ப நிலங்களை எல்லாம் மற்றைச் சகோதரர்கள் எண்மரைக் கொண்டு பயிரிடுவித்து விளைபொருள்களை அடைந்தும், அவற்றைத் தம் இஷ்டப்படி தமது மனைவி மக்களின் சுகவாழ்க்கைக்கு உபயோகித்துக் கொண்டும் மற்றைச் சகோதரர்கள் எண்மரும் அவர்கள் மனைவி மக்களும் அன்னவஸ்திரத்திற்குத் திண்டாடும்படி விட்டுக் கொண்டும் இருக்கின்றனர். வயதிலும் கல்வியிலும் முதிர்ந்த அவ்விரு சகோதரரும் கர்ணம், கிராம முனிசீபு உத்தியோக அதிகாரம், சம்பளம், செல்வாக்கு, குடும்ப நிலங்களின் ஊதியம் முதலியவற்றை அனுபவிக்கின்றதையும், தாமும் தமது மனைவி மக்களும் அன்னவஸ்திரத்திற்குத் திண்டாடுகின்றதையும், மற்றைச் சகோதரர்கள் எண் மரும் கவனித்தார்கள்.

உடனே அவர்கள் எண்மரும் முந்திய இருவரையும் பார்த்துக் 'கர்ணம் கிராம முனிசீபு உத்தியோகங்கள் குடும்பத்துக்குப் பெதுவான உத்தியோகங்கள்; ஆயிரம் ஏக்கர் நன்செய் புன்செய்களும் குடும்பத்துக்குப்

பொதுவான நிலங்கள். அவ்விரு உத்தியோகங்களையும் நிலங்களையும் சமமாகப் பத்துப் பங்கு வைத்துப் பிரித்து அநுபவிப்பேம்' என்று கூறுகின்றனர். முந்திய சகோதரர் இருவரும் மற்றச் சகோதரர் எண்மரையும் பார்த்து 'நமது உத்தியோகங்களையும் சொத்துக்களையும் நாம் பிரிவினை செய்து கொண்டால், நமக்கு ஒற்றுமை யின்மை ஏற்பட்டு விடும். கர்ணம் உத்தியோகத்தையும் கிராம முனிசீபு உத்தியோகத்தையும், வகிக்க நீங்கள் தகுதி இல்லாதவர்கள். அன்றியும் இரண்டு உத்தியோகங் களைப் பத்துப் பேர்கள் பகிர்ந்து கொள்வதெப்படி? உத்தியோக அதிகாரமும் செல்வாக்கும் இல்லாதவர்கள் சொத்துக்களைச் சரியாகப் பரிபாலித்தல் முடியாது. ஆதலால் நம் குடும்ப உத்தியோகங்களையும் சொத்துக் களையும் பிரிக்க வேண்டா' என்று சொல்லுகின்றனர்.

மற்றை எண்மரும் 'நாங்கள் ஒவ்வொருவரும் கர்ணம் உத்தியோகத்தையும் கிராம முனிசீபு உத்தியோகத் தையும் வகித்துப் பார்த்தால் தானே நாங்கள் அவற் றிற்குத் தகுதி உடையவராவோம். இரண்டு உத்தியோகங் களைப் பத்துப் பங்கு வைப்பதெப்படி என்றால் ஒவ்வொருவர் ஒவ்வொரு வருஷமாக அவ்வுத்தியோகங் களைப் பார்த்து அவற்றின் சம்பளம், அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றை அடைவோம். நன்செய் புன்செய்களைச் சமபாகமாகப் பிரித்துக் கொள்வேம்' என்று கூறுகிறனர்.

கனவான்களே! உத்தியோகங்களையும் குடும்பச் சொத்துக்களையும் சமமாகப் பிரித்துக் கொள்வதால் அச்சகோதரர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமா? அல்லது உத்தியோகங்களையும், சொத்துக்களையும் பிரித்துக் கொள்ளாமல் முந்திய சகோதரர் இருவரும் மாத்திரம் அவற்றின் ஊதியங்களை அடைந்து அநுபவிப்பதால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமா? அவ்வுத்தியோகங் களையும் சொத்துக்களையும் சமபாகமாப் பிரித்துக் கொள்வதே அச்சகோதரர் பதின்மருள்ளும் ஒற்றுமை நிலவுவதற்கு வழி என்பதும், அவை பிரிக்கப்படா திருத்தல் அச்சகோதரர் பதின்மருள்ளும் ஒற்றுமையின் மையும் பகைமையும் வளர்வதற்கு வழி என்பதும் பள்ளிச் சிறார்க்கும் தெள்ளென விளங்கத்தக்கவை''.

இவ்வாறு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலமாக மட்டுமே நாட்டின் சாதிக் கொடுமைகளுக்கு முடிவு கட்ட முடியும் என்று வ.உ.சி. தெளிவாக விளக்கி இருக்கிறார்,

அறிவாளிகள் ஒரே மாதிரியாகச் சிந்திக்கின்றனர் (Wisemen think alike) என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. வ.உ.சியும் அம்பேத்கரும் ஒரே மாதிரியாகவே சிந்தித்து இருக்கின்றனர்.

அண்ணல் அம்பேத்கர் போராடிப் பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கான 'தனி வாக்காளர் தொகுதி முறைப்படி, நாடாளுமன்றம், சட்டமன்றம் முதலிய அரசியல் அதிகார மையங்களுக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் மட்டுமே வாக்களித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். அம்பேத்கரின் இச்சீரிய எண்ணம் செயல்பட்டு இருந்தால் இந்நேரம் இந்தியாவில் தீண்டாமையும், சாதிய ஒடுக்கு முறையும் பழங்கதை ஆகிப் போய் இருக்கும். ஆனால் வர்ணாசிரம அதர்மம் நிலைத்து இருக்க வேண்டும் என்று தீவிரமாக விரும்பிய காந்தியார் தன் உயிரைப் பணயம் வைத்து அதைத் தடுத்தார். அம்பேத்கர் கேட்ட தனி வாக்காளர் தொகுதிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக அளிக்கவும் ஆயத்தமாக இருந்த காந்தியார், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது மட்டும் அனைவருமாக இருக்க வேண்டுமே ஒழிய தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அம்சம் இருக்கக் கூடாது என்று அதைக் கடுமையாக எதிர்த்தார்; அதற்காகத் தன் உயிரையும் விடச் சித்தமாய் இருந்தார்; தன் நோக்கத்தில் வெற்றியும் அடைந்தார்.

அதனால் தான் பாப்பா பட்டி, கீரிப் பட்டி, நாட்டார் மங்கலம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட மறு கணமே பதவி விலகல் கடிதம் அளிக்கும் அடிமைகள் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சாதிக் கொடுமைகள் ஒழிந்தே தீர வேண்டும் என்ற அம்பேத்கரின் தொலைநோக்குத் திட்டத்திற்கும், வர்ணாசிரம அதர்மம் உயிர்ப்புடன் இருந்தே ஆக வேண்டும் என்ற காந்தியாரின் தொலைநோக்குத் திட்டத்திற்கும் இந்நிகழ்வுகள் சான்றாக உள்ளன.

அம்பேத்கர் 1932இல் முன் வைத்துப் போராடிய கருத்தை வ.உ.சி. 1927இலேயே முன் வைத்து இருக்கிறார். அவர் தலைமை தாங்கிய மாநாட்டில் பின் வருமாறு கூறினார்:

''வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அந்தந்த வகுப்பினர்களே உடையவர் களாய் இருத்தல் வேண்டும். ஆனால், சிலர் அப்பிரதி நிதிகளும் கலப்புத் தொகுதிகளால் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வகுப்புவாரித் தொகுதிகள் ஏற்படுத்தப்படுமானால் சாதி வேற்றுமைகள் இன்னும் வளருமென்றும் கூறுகின்றனர். வகுப்புவாரித் தொகுதிகள் ஏற்படுத்துவதனால் சாதி வேற்றுமைகள் வளரப் போவதில்லை. அவை வளர்ந்தாலும் அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு சாதியாய் இருந் தாலும் கூட, அதனால் நம் தேசத்திற்குக் கேடு ஒன்றும் உண்டாகப் பேவதில்லை. நாம் வேண்டுவதெல்லாம் ஒற்றுமை ஒன்றே. வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதற்கு வகுப்புவாரித் தொகுதியாக வாக்காளர்கள் (வோட்டர்கள்) ஏற்படுத்தப்படவில்லையானால் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பொய்ப் பேச்சாகிப் பழையபடி நமக்குள் ஒற்றுமையின்மையும், பகைமையும், சண்டையும் தான் வளர்ந்து கொண்டு இருக்கும். நமக்குள் ஒற்றுமையை உண்டாக்கி வளர்ப்பதற்கு

வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வகுப்புவாரி வோட்டர்த் தொகுதிகள் இன்றியமை யாதவை. ஆதலால் வகுப்புவாரிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அந்தந்த வகுப்பில் உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்பாலரையும், பெண்பால ரையும் வாக்காளர்களாக ஏற்படுத்துவதற்கு வேண்டுவன செய்யும்படிக்கும் தேசாபிமானச் சகோதரர்களை யெல்லாம் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்''.

வ.உ.சி.யின் எண்ணமும் அம்பேத்காரின் எண்ண மும் அச்சு அசலாக ஒத்து இருப்பது வியப்புக்குரியது அல்ல. இருவருமே இந்தியச் சமூகத்தில் உள்ள ஒடுக்குமுறைக்கு எதிராக நியாயமும் நீதியும் கிடைக்க வேண்டும் என்று உண்மையாகப் பாடுபட்டவர்கள்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறு வதற்கு முதன்மை கொடுக்க வேண்டுமா அல்லது சமூக நீதிக்கு முதன்மை கொடுக்க வேண்டுமா என்ற வினா விற்கு, (சாதி ஒழிப்பு வீரராக விளம்பரப் படுத்தப்படும் பாரதியார் உட்பட) பார்ப்பனர்கள் அனைவரும் கட்சி வேறுபாடு இல்லாமல் ஆங்கிலேயர்களை வெளியேற்று வதே முதன்மையான வேலை என்று வரிந்து கட்டிக் கொண்டு கூறினர். காந்தியாரும் தேசிய நீரோட்டம் என்ற மயக்கத்தில் இருந்த பலரும் அதையே கூறினர். பெரியாரும் அம்பேத்கரும் சமூக அநீதியான வர்ணாசிரம அதர்மம்தான் கொடுமையின் உச்சம் என்று கூறியது அனைவரும் அறிந்த செய்தியே. ஆனால் வ.உ.சி.யும் இதையே தெளிவாகக் கூறி இருக்கிறார் என்பது இருட் டடிப்பு செய்யப்பட்டு உள்ளது.

''நமது தேசத்தின் வட மாகாணங்களில் ஹிந்துக் களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஏற்பட்டுள்ள பகைமை யையும் சண்டையையும் நீக்கி ஒற்றமையை ஏற்படுத்த வேண்டும் என்று நமது மாகாணத்தில் உள்ள சிலர் பேசிக் கொண்டிருக்கின்றனர். என்ன வெட்கக் கேடு! நமது மாகாணத்தில் நம்முடன் வசித்து வரும் பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கும் ஏற்பட்டிருக்கிற ஒற்றுமை யின்மையையும் பகைமை யையும் நீக்கி அவ்விரு வகுப்பினர்களுக்குள்ளும் ஒற்றுமை உண்டு பண்ண மாட்டாதார் பஞ்சாபு மாகாணத்தில் உள்ள முகம்மதியர் களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஏற்பட்டுள்ள பகைமை யையும் சண்டைளையும் நீக்கி அவ்விரு வகுப்பின ருள்ளும் ஒற்றுமையை உண்டாக்கப் போகின்றனராம்! இது புதுமையினும் புதுமை.

பிராமணருக்கும் பிராமணரல்லாதாரும் ஏற்பட்டுள்ள சண்டைகளை உண்டு பண்ணுகின்றவர் இராஜாங் கத்தாரே என்றும், சுதேச மன்னர்கள் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளில் சாதிச் சண்டைகள் இல்லை என்றும் நம் தேசத்துக்குச் சுய அரசாட்சி வந்துவிட்டால் சாதிச் சண்டைகள் எல்லாம் நீங்கிவிடும் என்றும் சிலர் செல்லுகின்றனர். இந்த மூன்றும் முழுப் பொய். பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டைகளுக்குக் காரணம் ஒன்றுமே இல்லையெனின் இராஜாங்கத் தாராலே, மற்றவராலோ அவர்களுக்குள் சண்டையை உண்டு பண்ண முடியாது. சுதேச மன்னர்கள் அரசாட்சிக் குட்பட்ட நாடுகளிலும் சாதிச் சண்டைகள் இல்லாமல் இல்லை. அவற்றிலும் தென்னாடுகளில் பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டைகள் இருக்கின்றன. சுய அரசாட்சிக்கு முதல் வழி நமது தேசத்தினர்கள் எல்லாம் ஒற்றுமைப்படுதல். உண்மை அவ்வாறிருக்க, சுய அரசாட்சி வந்து விட்டால் நமது தேசத்தினர்களுள் ஒற்றுமை உண்டாய்விடும் என்று செல்வது நீந்தக் கற்றுக் கொண்டால் நீரில் இறங்கலாம் என்பது போலாம். ஒருவன் நீரில் இறங்காமல் நீந்தக் கற்றுக் கொள்ளப் போவதில்லை. அது போல நம் தேசத்தார்களெல்லாம் ஒற்றுமைப்படாமல் நாம் சுய அரசாட்சி அடையப் பேவதில்லை''.

இவ்வாறு உரைத்ததன் மூலம் நாட்டின் விடுதலை என்பது சமூக நீதியின் செயலாக்கத்திற்குப் பின்னர் தான் சாத்தியம் என்று வ.உ.சி. உணர்த்தி இருக்கிறார்.

மேலும் பார்ப்பனர்கள் அரசதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பிற வருணத்தாரை / சாதியினரை அடக்கி வைத்து இருப்பதை மாற்ற, பார்ப்பனர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் போராடித் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும். இதைத் தந்தை பெரியார் தெளிவாக நமக்கு உணர்த்தி இருக்கிறார். இதையே வ.உ.சி.யும் தனது உரையில் பின்வருமாறு கூறி உள்ளார்.

''தாங்கள் மேலான சாதியார்கள் என்று கொண்ட கொள்கை அழியாதிருக்கும் பொருட்டு பிராமணர்கள் மற்றை சாதியார்களுக்கு விதித்த அபராதத் தண்டனை. அத்தண்டனையை மாற்றிக் கொள்வதற்குரிய அதிகாரம் பிராமணல்லாதார் கையிலேயே இருக்கிறதைக் கண்டு பிடித்து நம் திருவாளர் ஈ.வே.இராமசாமி நாயக்கர் அவர்கள் பிரமணரல்லாதவர்களுக்குக் கூறி அதனை உபயோகிக்கும்படி செய்து கொண்டு வருகிறார்கள். அவ்வதிகாரத்தைப் பிராமணரல்லாதார்கள் ஊக்கத்துடன் உறுதியாகச் செலுத்தி தங்கள் அபராதத் தண்டனையை மாற்றிக் கெள்வார்கள் என்று நம்புகிறேன்''.

'சாதியைச் சந்திக்காமல் புரட்சியைச் சந்திக்க முடியாது' என்று அண்ணல் அம்பேத்கர் கூறிய அதே நோக்கு நிலையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் செயல்படுத்தப் படாமல் இந்தியாவிற்கு உண்மையான சுதந்திரம் சாத்தியம் இல்லை என்று வ.உ.சி. தெளிவாகக் கூறி இருக்கிறார்.

இராஜாங்க உத்தியோகங்களும், ஸ்தலஸ்தாபன உத்தியோகங்களும், பொது ஸ்தாபன உத்தியோகங் களும், நம் தேசத்தில் உள்ள ஒவ்வொரு சாதியார்க்கும்

அந்தந்த சாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டாலன்றி, நம் தேசத்தாருள் ஒற்றுமை உண்டாகப் போவதே இல்லை என்பதும், நமக்குள் ஒற்றுமை உண்டாகாமல் நாம் சுய அரசாட்சி அடையப் போவதே இல்லை என்பதும் மனித அறிவுடைய எவருக்கும் தெளிவாக விளங்கத்தக்கவை. இவ்வுண் மையை மாறாகப் பேசுகின்றவர் யாவராயினும் மனித அறிவில்லாதவர், அல்லது 'பகலை இரவென்று கூறும் பாதகர்' என்று நாம் கொள்ளக்கடவோம். பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களும் ஒத்துழைப்பின் அவ்விரு வகுப்பினருள்ளும் இப்போது நிலவும் பகைமையை விரைவில் ஒழித்து, ஒற்றுமையை எளிதில் ஏற்படுத்தி விடலாம். இவ்வொற்றுமையை உண்டு பண்ணு வதற்காக பிராமணரல்லாதார்களுடன் ஒத்துழைக்கப் பிராமணர்கள் முன் வரவில்லையானால் மேல் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்னும் தலைப்பின் கீழ் யான் கூறியபடி இப்பொழுது பிராமணர்கள் வகித்துக் கொண்டிருக்கிற உத்தியோகங்களில் பிராமண சாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்களுக்குரிய உத்தியோகங்களைத் தவிர மற்றைய உத்தியோ கங்களை எல்லாம் இராஜாங்கத்தார் காலி செய்வித்து மற்றை சாதியார்களுக்கு அவரவர் எண்ணிக்கை விகிதப்படி கொடுக்க வேண்டும் என்று பிராமணரல்லாதார் சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றி அச்சட்டத்தை ஊர்ஜிதத்துக்குக் கொண்டு வரும்படி இராஜாங்கத்தாரை வற்புறுத்த வேண்டும்''.

மேற்கண்ட உரையில் இருந்து சமூக நீதியின் பால் வ.உ.சி. எவ்வளவு தீவிரமாக இருந்திருக்கிறார் என்று புரியும். நம் போராட்டக் குரல்கள் எல்லாம் இனி வாய்ப்புகள் எல்லாம் விகிதாச்சார அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதாகவே உள்ளன. ஏற்கெனவே பார்ப்பனர்கள் கபளீகரம் செய்துள்ளதை மன்னித்து விடும் போக்கிலேயே நம் எண்ணங்கள் உள்ளன. ஆனால் வ.உ.சி.யே பார்ப்பனர்கள் ஏற்கனவே கபளீகரம் செய்துள்ள வாய்ப்புகளைப் பறித்து அவற்றை ஒடுக்கப் பட்ட வகுப்பு மக்களிடையே விநியோகம் செய்ய வேண்டும் என்று கூறும் அளவிற்குச் சமூக நீதிக் கோட்பாட்டின்பால் தீவிரமாக இருந்திருக்கிறார். வ.உ.சி.யின் சமூக நீதிக் கொள்கையை இருட்டடிப்பு செய்து வைத்து இருப்பது மிகப் பெரிய கொடுமை.

வ.உ.சி. கப்பலோட்டினார்; செக்கிழுத்தார் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவருடைய சமூக நீதிக் கொள்கையை மிக வலுவாக மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும்.

*(சேலம் மாநாட்டில் வ.உ.சி ஆற்றிய தலைமை உரை முழுமையும் வ.உ.சி நூலகம் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர்களால் 'அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப் பட்டு உள்ளது)*

❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | பி.எஸ்.விக்னேஷ்குமார் |
| படிப்பு | : | பி.டெக்., (இ.சி.இ) |
| வேலை | : | I.B.M., பெங்களூர் |
| சம்பளம் | : | 85,000 (மாதம்) |
| பிறந்த இடம் | : | வேலூர் |
| உயரம் | : | 6.2 அடி |
| சாதி | : | அகமுடையர் (சாதி தடையில்லை) |
| தம்பி | : | கார்த்திஷ்குமார் (திருமணமாகாதவர்) |
| அப்பா | : | பி. சீனிவாசன். ஆர்.டி.ஓ. (மறைவு) |
| அம்மா | : | ஆனந்தி (ஆசிரியர்) |
| முகவரி | : | எண்.28, 831<br>கன்னையா நாயுடு காலனி<br>சித்தூர் |
| அலைபேசி | : | 9441088542 |

## மதம் மக்களுக்கு அபின்

''மனிதன் என்று சொல்கையில் மனிதனின் உலகம், அரசு, சமுதாயம் என்பதாகும். இந்த அரசு, இந்த சமுதாயம் சமயத்தை தலைகீழாக்கப்பட்ட உலக உணர்வை உருவாக்குகிறது. அதற்குக் காரணம் அவையே தலைகீழான உலகமாக இருப்பதுதான்... சமயம் என்பது இந்தத் தலைகீழ் உலகம் பற்றிய பொதுவான கோட்பாடு; அதனுடைய அறிவுக்களஞ் சியத் தொகுப்பு; ஜனரஞ்சக வடிவங்களினூடாக வெளிப்படும் அதன் தர்க்க நெறிவிளக்கம்; அதன் ஆன்மீகத்தின் உச்சம்;அதன் உற்சாசம், அதற்கான தார்மீக ஒப்புதல், அதனை முழுமையாகச் செய்வது; அதனை நியாயப்படுத்தவும் தேற்றவும் உதவும் உலகு தழுவிய விளக்கம்; சமயம் என்பது மனித சாரத்தை அதிக கற்பனை எய்துவதாகும்; ஏனென்றால் மனித சாரத்தை யதார்த்தத்தில் எய்த முடிவதில்லை.

சமயத்தில் வெளிப்படுத்தப்படும் அவலம் ஒரு பக்கம் உண்மையிலேயே நிலவும் அவலத்தின் வெளிப்பாடாகும்; மற்றொரு பக்கம் இந்த உண்மை யான அவலத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரலுமாகும். சமயம் என்பது ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சு; இதயமற்ற உலகிற்கு ஓர் இதயக்கனிவு; சத்தற்ற வாழ்வில் ஒரு சத்து; அது மக்களுக்கு வாய்த்த ஒரு அபின்''.

- **காரல் மார்ச்சு,** ''மதம் பற்றி'' எனும் நூல்

# மக்களைப் பலிவாங்கிவிட்ட மோசடி மோடியின் மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்புத் திட்டம்

- இரா.பச்சமலை

மோடியின் மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக்கு மேலான நிலையில் இத்திட்டத்தால் மக்கள் எவ்வகையிலும் எவ்வித நற்பயனையும் அடையவில்லை என்பதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களைக் காவு வாங்கிடக் காவிக்கயவர் கூட்டத்தால் தீட்டப்பட்ட தீயதிட்டம் இது. பல இலக்கம் பேரின் வாழ்வாதாரமான சிறு தொழில் களையும் அவர்கள் வாழ்வையும் நிலைகுலையச் செய்துவிட்டது. இதன் பலனாகக் கள்ளப்பணத்தாள்கள் அழியும். கறுப்புப் பணம் ஒழிக்கப்படும். கள்ள, கறுப்புப் பணப் புழக்கத்தால் நாட்டு எல்லையில் நடைபெற்று வந்த வன்முறை பயங்கவாதச் செயல்கள் அற்றுப் போகும். கையூட்டுக்கள் களையப்படும் என்ற மோடி, அருண்சேட்லி கூட்டத்தின் கூற்றுக்கள் முற்றிலும் வெற்றுக் கூச்சல், பொய் என்றாகிவிட்டன. இதை ரிசர்வ் வங்கி தரும். பல்வேறு புள்ளிவிவரங்கள் மட்டுமின்றி காவிக் கூட்டத்தின் கூட்டாளி சிவசேனாவும், ஏன் இவர்களின் பொருளாதார மேதாவிகள் எனப்படும் யசுவந்சின்கா, அருண் சோரி, சுப்பிரமணியன்சாமி, குருமூர்த்தி போன்றோர் இத்திட்டம் திடுமென அவசர அவசரமாகச் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. முற்றிலும் மக்களுக்கு எதிராகவே சென்றுவிட்டது மட்டு மின்றி நாட்டின் பொருளாதாரத்தைச் சிதைக்கவும் சீர்குலைக்கவும் வழிகோலிவிட்டது என்ற அவர்தம் கருத்துகள் இது தீயதிட்டம் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

இது அடிப்படையில் அரசமைப்புச் சட்டம் 21ஆம் விதியில் வழங்கப்பட்டுள்ள வாழ்வுரிமையை மறுத்து நூற்றைம்பதுக்கும் மேற்பட்டோரைக் காவு வாங்கி விட்டது. அவ்வகையில் இது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான ஓர் அரச பயங்கரவாத வன்கொடுமைத் திட்டம் என்றுதான் சொல்லமுடியும். விதி 21 சட்டப்படியாக நிறுவப்பட்ட வரைமுறையின்றி எவரொருவரின் வாழ் வையும், அவரின் தனிப்பட்ட விடுதலை உணர்வு உரிமையையும் பறிக்கக்கூடாது. (Art 21 of the Constitution of India says “No person shall be deprived of his Life and Personal Liberty except according to procedure established by Law) உண்மையில் அரசுத் திட்டத்தால் நிகழ்ந்துவிட்ட உயிர்ப் பலிகளுக்கு மய்ய அரசைக் குற்றவாளியாகக் கருதி உச்சநீதிமன்றம்; உயர்நீதி மன்றங்கள், தேசிய மனித உரிமை ஆணையம் தம்மூப்பாக வழக்கு தொடர்ந் திருக்க வேண்டும்.

மோடி ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் 8.11.16 நள்ளிரவிலிருந்து செல்லுபடியாகாது என அறிவித்து விட்டு ‘இவ்வறிப்பால் கள்ளப் பணமும் கறுப்புப் பணமும் களையப்படும் என்ற நிறைமனதுடன் ஏழை-எளிய மக்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள், ஏனையோர் அப்பணத்தாள்களை மாற்றிட வங்கி வாயில்களில் கால்கடுக்க நாள் கணக்காக நின்று கொண்டிருக்கிறார்கள்’ என மனமறியப் பொய்யுரை களைப் பொழிந்தார். இதையே அருண் சேட்லியும் பிற நடுவணரசு அமைச்சர்களும் பின்பாட்டுக் பாடி வந்தனர். ஆனால் நடந்ததென்னவோ இதற்குத் தலை கீழாக ஏழை-எளிய பாட்டாளி, தொழிலாளி, விவசாய மக்கள் அன்றாட வாழ்க்கைச் செலவினங்களுக்குத் தங்களிடமிருந்த ஒரிரு மிகுமதிப்புத் பணத்தாள்களைப் பயன்படுத்த முடியாமலும், அதனை வங்கிகளில் கொடுத்து மாற்றாகச் செல்லும் பணத்தாள்களைப் பெற முடியாமலும் வங்கிகளில் இருந்த தங்கள் பணத்தைப் பெறுவதற்காக வங்கிகளிலும், ஏ.டி.எம். களிலும் பல மணி நேரம் காத்திருந்து தேவையான பணம் பெற முடியாமல் எல்லையற்ற இன்னல்களில் உழன்றனர். பலர் இன்னுயிரையும் இழந்தனர்.

இவற்றையெல்லாம் அச்சு, ஒலி. ஒளி ஊடகங்கள் வெளியிட்டு வந்ததைக் கவனமில்லாதோர் போல் பா.ச.க. காவிக்கூட்டம் கபடநாடகம் நடத்தினர். மோடிக்கு வெளிநாட்டுப் பயணம் அதிகம் என்பதால் கவனிக்க வில்லை போலும்.

இதில் என்ன வேதனையென்னவென்றால், இத் திட்டத்தின் கேடுகள் பலவாறாகப் பேச, எழுத்தப்பட்ட போதிலும், இதனால் நூற்றுக்கும் மேலான மக்கள் காவு வாங்கப்பட்டது பற்றி இடதுசாரிகள், காங்கிரசு, தி.மு.க. போன்ற அரசியல் கட்சிகள், முற்போக்கு அமைப்பு கள் எனப் பலராலும், ஊடகங்களாலும் மேம்போக் காத்தான் அவ்வப்போது பேசு பொருளானதேயன்றி கடுமையான எதிர்வினையாற்றிடவில்லை என்பதுடன் உயிரிழந்தோரின் உற்றோருக்கு உரிய இழப்பீடு வழங்க வலியுறுத்த நடுவணரசுக்கு நெருக்கடி தந்து அதைத் பெற்றுத் தந்திடவும் தவறிவிட்டார்கள். இனி யேனும் இதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். இதில் இன்னும் பெருங்கொடுமை என்னவென்றால் இவ்வளவு மக்கள் பலிகொடுக்கப்பட்ட பின்னரும் இத்திட்டத்தை அறிவித்தபோது இதனால் மக்கள் சில இன்னல் அடைய

நேரிடும். நூறு நாள்களுக்குள் நிலைமை சீரடையும் என்றெல்லாம் ஏற்கெனவே சொல்லிவிட்டேன் என மோடியும், காவிக் கூட்டமும் சற்றும் மனிதப் பற்றின்றி, ஈவு இரக்கமின்றி சப்பைக்கட்டு விளக்கம் வைத்து வருகின்றனர். இதிலிருந்து இவர்கள் எவ்வளவு கொடுங் கயவர்கள் என்பதை உறுதி செய்துவிட்டனர்.

கடும்புயல், சூறாவளி, பெருவெள்ளம், பெருமழை, இடி, மின்னல் போன்ற இயற்கைப் பேரிடர்களால் முன்னறிவிப்புகள் முன்னேற்பாடுகள் செய்யப்படாததின் விளைவால் ஏற்பட்டு விடுகின்ற உயிரிழப்புகள் போன்று நடுவணரசின் இத்திட்டத்தின் செயல்பாட்டால் நூற்றுக்கும் மேலான மக்கள் பலிவாங்கப்பட்டதற்கு சில இன்னல் நேரிடலாம் எனச் சொல்லிவிட்டோம் என விளக்கமளிக்க முற்படும் கொடுஞ்செயல் உலக வரலாறு காணாத அரசு பயங்காரவாதச் செயல் என்றுதான் சொல்லவேண்டும்.

இதற்கு நடுவணரசு முழுப்பொறுப்பேற்றுக் கொண்டு உயிரிழப்புக்கு நாடாளுமன்றத்தில் இரங்கல் தீர்மானம் இயற்றி மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன் பலியா னோர் குடும்பத்தினர்க்கு தக்க இழப்பீடு உடனே அளித்திட ஆவன செய்யவேண்டும்.

இத்திட்டத்திற்கான இவர்கள் சொல்லுகின்ற நோக் கங்கள் உண்மைத் தன்மை உடையதா என்று ஐயுற வேண்டியுள்ளது. ஆனால் நாடுமுழுக்க நாட்டின் ஒட்டு மொத்த வெகுமக்களுக்கும் கொடுமையை இழைத்து விட்டு நாட்டின் கவனத்தையே இதில் குவிய வைத்து இதுபற்றியே பேசவைத்து திசை திருப்பிவிட்டு வேறெதுவோ சூதான, மறைவான, கமுக்கமான திட்டங்கள் எதையும் நிறைவேற்றி கொண்டனரோ என்ற அய்யமும் எழாமலில்லை.

இவர்கள் சொன்னதுதான் உண்மையான நோக்கம் என்றால் நடுவணரசு கீழ்க்காணும் செயல்களை முன்னெடுத்திருக்க வேண்டும்.

மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்பு என்று சொல்லிவிட்டு ரூ.2000/- பணத்தாள் அச்சடித்திருக்கக் கூடாது. இது இவர்கள் சொல்வதற்கு நேர்எதிர்மறை யான விளைவுகளையே ஏற்படுத்தும். ரூ.2000 பணத் தாள் பெருமளவு கையூட்டுக்கு, கள்ளப் பணத்திற்கு, கறுப்புப் பணத்திற்கு அவற்றைப் பதுக்கி வைப்பதற்கு எளிதான வழியாகிவிடும். காட்டாக ரூ.2000/- தாள்கள் வெளிடப்பட்டதிற்கு முன்னும் பின்னும் கர்நாடகாவில் ரூ.500 கோடிச் செலவில் பா.ச.க. தலைவர் தனது மகள் திருமணம் எவ்வித அரசு நடவடிக்கையின்றி நடத்தியமை தமிழ்நாடு ராமமோகனராவ் பல கோடி ரூ.2000/- தாள்கள் பதுக்கி வைத்தமை, பொதுப் பணித்துறையின் ஒப்பந்தப் பணி மேற்கொள்வோரான சேகர்ரெட்டி பலநூறு கோடிக்கு ரூ.2000/- தாள்கள் பதுக்கி வைத்தமை, ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் ரூ.2000 தாள்கள் வெள்ளம் போல் பாய்தோடி யுள்ளமை போன்ற பல நிகழ்வுகள் நடந்துள்ளன. இத்திட்டம் பதுக்கலுக்கு, கையூட்டுக்கு, கள்ளக்கறுப்புப் பணத்திற்கானது என்பதற்கான கணக்கீடு. ஒரு கோடி ரூபாய்க்கு ரூ.2000 கட்டு 50 கட்டுக்கள் போதும் (2,000,00 x 50 = ஒரு கோடி) ஆனால் இது 100 ரூபாயில் ஆயிரம் 100 ரூபாய் கட்டுகள் வேண்டும். எனவே ரூ.2000 பணத்தாள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியது.

பழைய ரூ.1000 தாள்களைச் செல்லாதவையாக ஆக்கப்பட்டிருந்ததை அடுத்து ரூ.200 பணத்தாள் அச்சிடப்படாமல் மாற்றாக புதிய ரூ.500 தாள்களைப் போன்றே புதிய ரூ.1000 தாள்களை அச்சிட்டுப் புழக் கத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்புத் திட்டம் நடைமுறைக்கு வரு வதற்கு மிகவும் முன்கூட்டியே முறையாகத் திட்டமிட்டு புதிய ரூ.500 தாள்களைப் பெருமளவில் அச்சிட்டு புழக்கத்திற்குவிட்டிருக்க வேண்டும். உடன் பணம் பெறும் கருவிகளைப் புதிய பணத்தாள்களைப் பெறத்தக்க வகையில் முன்கூட்டியே மாற்றியமைத்திருக்க வேண்டும். இதனுடன் ரூ.100 தாள்கள், ரூ.50 தாள்களை பல இலக்கம் கோடி ரூபாய் மதிப்பில் பெருமளவுக்கு முன்பே அச்சிடுவதற்குத் திட்டமிட்டு அச்சிட்டு வெளிக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

எழை-எளிய மக்களுக்குப் பொருளாதார முன்னேற் றத்திற்குப் பணத்தாள் வழியில் உண்மையில் செயல் படுவதென அரசு எண்ணுமெனில் மேற்கொள்ள வேண்டியப் பணிகள். இரண்டு டிரில்லியன் டாலர் அதாவது ரூ.135 இலக்கம் கோடியளவிலான நம் நாட்டைப் போன்று 9 மடங்கு பெரிய பொருளாதார மாக மட்டுமின்றி தனிமனித சராசரி உள்நாட்டு உற் பத்தி மதிப்பு (உ.நா.உ.ம) 9 மடங்கு அளவுள்ள அமெரிக்கா, அதேபோன்று நம் அளவிலான பொருளாதாரமாகவும் மட்டுமின்றி தனிமனித சராசரி உ.நா.உ.ம. 8 மடங் குக்கு மேலுள்ள சப்பான் மற்ற பல அய்ரோப்பிய நாடுகள் போன்ற வளர்ந்த நாடுகள் கூட மிகுமதிப்பு பணத்தாள்களின் அளவை வெறும் 100 என்ற அளவி லேயே வைத்திருக்கும்போது இந்தியாவும் படிப்படியாக மிகுமதிப்பு பணத்தாள் ரூ.100 என்ற அளவிலே வைத்துக் கொண்டு ரூ.500, ரூ.1000, ரூ.2000 இனி வரவிருக்கும் ரூ.200 போன்ற பணத்தாள்களை ஒழித்துக்கட்டவேண்டும். குறைவான மதிப்புப் பணத்தாள் களான ரூ.50, ரூ.20, ரூ.10, ரூ.5 ஆகியவற்றை பல இலக்கம் கோடிகளில் அச்சிட்டு புழக்கத்தில் விடவேண்டும்.

மேலும் டாலரின் பணவீக்கம் ஒரு விழுக்காட்டாளவிலேயே கட்டுக்குள் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தியாவில் பணவீக்கம் கட்டவிழ்த்துவிடப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதை விரிவாக பின்பு தனியே விவாதிப்போம். அதனால்தான் 1947இல் ஒரு டாலருக்கு இணையான மதிப்பு ஒரு ரூபாய் என்ற அளவில் இருந்தது. இப்போது 70 ஆண்டு சுதந்தர இந்திய ரூபாய் மதிப்பு ஆண்டுக்கு ஒரு மடங்கு என 70 மடங்கு வரை கிடுகிடுவெனச் சரிந்து வருகின்றது. இதே தன்மையில் தான் இந்திய ரூபாயின் மதிப்பு சப்பானின் 'யென்', சீனாவின் 'யான்' கனடாவின் 'டாலர்' போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் கடும் சரிவையே தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது. இதற்கு ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தின் இடைவெளி இந்தியாவுக்கு எதிராக இருக்கிறது என்பதுடன் அந்த நாடுகளின் ஆக மிகுமதிப்பு பணத்தாள்கள் குறைந்த மதிப்பு அளவிலேயே வைக்கப்பட்டுள்ளதும் ஆகும்.

பணத்தாளில்லா இணைய வணிகப் பரிமாற்றம் இதற்குக் காரணியாக அமைந்துள்ளது. அந்த இலக்கை எட்ட நினைக்கும் இந்தியா எதிர்மறையாக ஆக மிகு மதிப்பு பணத்தால் ரூ.1000 என்று இருந்ததை இரண்டு மடங்கு உயர்த்தி இப்போது ரூ.2000/- பணத்தாளாக புழக்கத்தில் கொண்டு வந்துள்ளது. இதை எந்த வகையில் அறிவுடைமை பொருளாதாரம் எனக் கொள்ள முடியும். ஒன்றுமட்டும் உறுதி, இது பணவீக்கத்தையும், கையூட்டுக் கலாச்சாரத்தையும், கள்ளப் பணப்பெருக்கத்தையும் கறுப்புப் பணப் பதுக்கலையும் கட்டுங்கடங்காத அளவுக்கு ஊக்குவிக்கும் என்பதற்குக் காட்டு இந்த மிகுமதிப்பு பணத்தாள் மதிப்பிழப்பு நடைமுறைக்கு வந்த சில நாள்களில் நிகழ்ந்த அவலங்கள் சமூகத்தின் பொது ஒழுக்க நெறிகளைச் சீர்குலைத்தன.

* கோவில் உண்டியல்கள் கொள்ளை உண்டியல்களாக ஆக்கப்பட்டன.
* வங்கிப் பணியாளர்கள் சிலர் கள்ள நோட்டுக் கயவர்களுடன் கைகோத்துக் கொண்டு புதிய பணத்தாள்களைப் பல கோடிகளில் பதுக்கி வைத்து கையூட்டுப் பெற்று அவர்களுக்குக் கொடுத்தனர்.
* எளிய மக்களின் ஏழ்மையைப் பயன்படுத்தி அவர்களைத் தரகர்களாக்கி பணமுதலைகள் பழைய பணத்தாள்களை மாற்றிக் கொண்டனர்.
* தன்நிதிக் கல்லூரிகள் மாணவர்களைக் கள்ளப் பணமாற்றத்திற்குப் பயன்படுத்திப் பகடைக் காய்களாக்கிக் குற்றச்செயல் புரிய வைத்தனர்.
* பெரும் ஆலை நிறுவனங்கள் தம் தொழிலாளர்களைப் பலிகடாக்களாக்கி பல ஆயிரம் கோடி மதிப்பிலான மதிப்பிலுள்ள பணத்தாள்களைப் புதிய புதிய பணத்தாள்களாக மாற்றிக் கொண்டனர்.
* எளிய மக்களுக்கு அரசு வங்கிக் கணக்குத் தொடங்கி அதனைப் பண முதலைகளின் புகலிடங்களாக மாற்றி கொள்ள வழிகோலப்பட்டது.

இவர்களுக்கும் இவர்கள் போன்று வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்போருக்கும் வேளாண், நெசவு, ஆலைகள், நிறுவனங்கள், பலவகை அரசு நிறுவனங்கள் போன்றவற்றில் உழைப்பை நல்கி உருக்கொலைக்கப்பட்ட தொழிலாளி, பாட்டாளி மக்கள் ஒன்று திரண்டு தக்க பாடத்தையும், தண்டனையையும் அளித்திடுவர். காலம் கனிய சற்று காலமாகலாம். இந்தக் கொடுங்கோன்மைகள் காலவரையின்றி தொடரமுடியாது என்பதை அரசு எந்திரங்களும் உணர்ந்து மக்களைப் போராட்டத்திற்கும், வன்முறைக்கும், புரட்சி வெடிப்பதற்கும் தூண்டிவிடாத வகையில் தம் செயல்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் வகுத்துக் கொள்ளுமாறு பாடம் கற்றுக் கொள்வார்கள் என்று நம்பலாம்.

இதில் மிகவும் விந்தையானதும் வேடிக்கையானதும் என்னவெனில் இத்திட்டத்தின் வாயிலாகக் கறுப்புப் பணம் பதுக்கலைக் கருவறுப்போம் என்று கொக்கரித்தார் மோசடி மோடி. இந்த இந்திய அரசு நடுவண் புலனாய்வுத் துறை (CBI-Central Bureau of Investigation) நடுவண் புலனாய்வு முகமை (CIA-Central Intelligent Agency) நடுவண் கூர் நோக்கு ஆணையம் (CVC-Central Vigilence Commission) எனவும் 29 மாநிலங்களிலும் உள்ள, புலனாய்வு நிறுவனங்களும் நாட்டில் எவனெவன் கொள்ளைக்காரன், மோசடிப் பேர்வழிகள், பதுக்கல் பேர்வழிகள் என்று அறியாமல் கைசூப்பிக் கொண்டிருக்கிறார்களா? இவர்களால் எளிதில் அக்கொடுங்கோலர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து அவர்களிடம் குவிந்து கிடக்கும் கறுப்புப் பணத்தைக் கைப்பற்ற முடியும். ஆனால் அவர்களைக் கடும் தண்டனைக் குள்ளாக்கி நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துக் கொண்டு, இணையான பொருளாதாரத்தைத் தங்களின் கறுப்புப்பணப் பேரரசை நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டும் காணாதது போல் விட்டுவிட்டு அவர்களையெல்லாம் இத்திட்டத்தின் வழி தப்பவிட்டுவிட்டு, ஏழை எளிய பாட்டாளி உழைக்கும் மக்களாக உள்ள நாட்டின் 80-90 விழுக்காடு மக்களைக் கொடுந்துயருக்கும் இன்னலுக்கும் உள்ளாக்கி நூற்றுக்கும் மேற்பட்டோரை உயிர்ப்பலி வாங்கிடத்தான் இந்த மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்புத் திட்டத்தை மனமறிந்து செயல்படுத்திவிட்டது மோடியின் நடுவண் அரசு. எனவே இத்திட்டம் மொத்தத்தில் வெகுமக்

களுக்கு எதிரானது என்பது மட்டுமல்ல அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது இதை உச்சநீதிமன்றம் கோடிட் டும் காட்டியதோடு நிறுத்திக்கொண்டு இதை இரத்து செய்யாமல்விட்டது பெரும் அவலம்.

இவையெல்லாமின்றி நாட்டில் நிலவும் பணப்புழக் கத்தைக் கண்காணிக்க வேண்டிய ரிசர்வ் வங்கி 500, 1000, 5000 கோடி ரூபாய் என அரசுடைமை யாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெரும் அளவு கடன் களை வாங்கியுள்ளோர் வங்கிகளை ஏய்த்துவிட்டு மொத்தம் 10 இலக்கம் கோடிவரையில் வராக் கடான ஆக்கிவிட்டுள்ளதை வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது. இவ்வாறு பெருங்கடன் வாங்கியோர் யார் யார் என்று தெரிந்திருக்கும் அரசு இவர்களில் யார் யார் வாங்கிய கடனை முறையாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை எல்லாம் கண்காணிக்காமல் அக்கயவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து நாட்டின் செல்வம் கொள்ளை போவதெல்லாம் தடுத்திருக்கமுடியும்.

ஆனால் இக்கயவர்களுடன் கள்ள உறவு கொண்டு பல கோடிகளில் கையூட்டுகளைப் பெற்றுக் கொண்டு மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து கொண்டு அவர் கள் தத்தம் குடும்பங்களுடன் நாட்டைவிட்டே, ஓடவிட்டு விட்டனர். நாட்டின் 80-90 விழுக்காடு மக்களை அவர்களின் அடிப்படைத் தேவையான செலவினங் களை மேற்கொள்ளக்கூட அவர்கள் பணத்தையே அவர்களுக்குக் கிடைக்காதவாறு இத்திட்டத்தைக் கொண்டு வந்து சீர்குலைத்து, சின்னாபின்னப்படுத்தி, அவர் களில் நூற்றுக்கும் மேற்பட்டோரைக் குலையுண்ட கொடுங்கோன்மை அரசு கறுப்புப் பணத்தைப் பிடிப்போம். கள்ளப்பணத்தை ஒழிப்போம் என்று கள்ள ஓலமிட்டு நாடகமாடிக் கொண்டிருக்கிறது. இன்றும் நகைப்புக் குரியது பல இலக்கம் பேரின் வங்கிக் கணக்குகளில் முறைகேடுகளைக் கண்டுபிடித்துவிட்டோம் என்கின்ற னரன்றி அவற்றில் இறுதி நடவடிக்கை எடுத்து முடிக்க பலப்பல ஆண்டுகளாகும் என்றும் சொல்கிறது. என்ன பயன்? அதன்பின் அவர்கள் நீதிமன்றத்தை நாடுவர். வழக்குகள் முடிய பல பத்தாண்டுகளும் ஆகலாம். என்ன கொடுமையிது.

நடைமுறைப்படத்தப்பட்ட சில கிழமைகளில் நாடே கொலைக்களமாக ஆக்கப்பட்டு எக்குற்றமும் புரியாமல் வங்கிப் பணியாளர்கள், எளிய நடுநிலை மக்கள் 100 பேருக்கு மேல் தம் இன்னுயிரை இழக்கச் செய்து பலிவாங்கிவிட்டு அவர்களின் குடும்பங்களையும் கொடுந்துயரில் ஆழ்த்திவிட்டு இந்த அரசு இன்னும் அதிகார மமதையில் கொக்கரித்துக் கொண்டேதான் இருக்கின்றது. ❖

## வாணியம்பாடி ஆலங்காயத்தில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 128ஆம் பிறந்தநாள் பொதுக்கூட்டம்




வேலூர் மாவட்டம் வாணியம்பாடி ஆலங்காயத்தில் புரட்சிக்கவிஞர் கலை இலக்கியமன்றம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி இணைந்து நடத்திய புரட்சியாளர் அம்பேத்கர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் 128ஆவது பிறந்தநாள் பொதுக் கூட்டமும் புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வாணியம்பாடி கிளையின் தொடக்கவிழாவும் 29.4.18 மாலை 6.30 மணிக்கு ஆலங்காயம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளர் புலவர் அ.சகாதேவன் தலைமையில் நடைபெற்றது. புலவர் க.புலேந்திரன், ஆ.வேலாயுதம், ஸ்ரீதரன் (தி.மு.க.), ச.வேலரசு, மு.சுப்பிரமணியன் ஆசிரியர், கே.வி.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மா.பெ.பொ.க. வாணியம்பாடி நகரச் செயலாளர் நா.மதனகவி அனைவரையும் வரவேற்றார். புலவர் அ.சகாதேவன் தலைமை உரையாற்றினார். வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி.சங்கர், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தோழர் தா.வேலு, ஆலங்காயத்தில் அம்பேத்கரிய-பெரியாரிய கொள்கைகளை வளர்த்தெடுத்த மூத்த தோழரும் நல்லாசிரியர் விருது பெற்றவருமான தோழர் குப்பன், பாலாறு பாதுகாப்பு இயக்கத் தலைவர் ஏ.சி.வெங்கடேசன், தமிழக மக்கள் முன்னணித் தோழர் செவ்வேள், மா.பெ.பொ.க. தொழிலாளர் அணிச் செயலாளர் சா.குப்பன், வேலூர் பேராசிரியர் இர.நடராசன், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி, தலை மைக்குழு உறுப்பினர் க.முகிலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். வேலூர் மாநகரச் செயலாளர் மீ.தில்லிபாபு நன்றி கூறினார்.

தி.மு.க., அ.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள், முற்போக்கு இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள் மேதை அம்பேத்கர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கினர். பதாகைகளும், குழல் விளக்குகளும், மா.பெ.பொ.க. கொடிகளும் அணி செய்த இந்த விழாவில் திரளாக மக்கள் கலந்துகொண்டு ஆர்வமுடன் உரைகளைக் கேட்டனர். வேலூர் நகரத்திலிருந்து மா.பெ.பொ.க. தோழர்கள் தனி ஊர்தியில் வந்து இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# அணுக்கழிவுகளைப் பாதுகாப்பாகச் சேமிக்கும் வரையில் கூடங்குளத்தில் உற்பத்தியை நிறுத்து!

க.முகிலன்

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக சுப.உதய குமார் தலைமையில் ஓராண்டிற்கு மேல் மக்கள் தொடர்ந்த போராட்டம நடத்தினார்கள். மார்க்சியப் பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சியின் சார்பில் தோழர்கள் வே.ஆனைமுத்து, இரா.பச்சமலை, க.முகிலன் ஆகியோர் சென்னையிலிருந்து கூடங் குளம் சென்று ஒரநாள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

கூடங்குளத்தில் அணுமின் நிலையத்தில் அலகு 1, அலகு 2 ஆகியவை கடந்த அய்ந்து ஆண்டுகளாக இயங்கி வரு கின்றன. இவை இரஷ்ய நாட்டின் தொழில்நுட்பம், மற்றும் கருவிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. 3ஆம் 3ஆம் அலகுகள் கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 5ஆம், 6ஆம் அலகுகளையும் கூடங்குளத்திலேயே அமைக்க இரஷ்யா வுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

சப்பானில் புகுஷிமாவில் சுனாமியின்போது ஏற்பட்ட அணுமின் நிலையத்தின் கதிர்வீச்சால் கொடிய விளைவுகள் ஏற்பட்டன. அதுபோல் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஏற்படக்கூடிய விபத்தால் தென் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் மக்களுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் பெருமளவில் பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கூடங்குளத்தில் இரண்டு அலகு களுக்கு மேல் அமைக்கக்கூடாது என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

கூடங்குளத்தின் முதலாவது, இரண்டாவது அலகுகள் செயல்படத் தொடங்கியபோதே, பயன்படுத்தப்பட்ட அணுக்கழிவு களை (Spent Nuclear Fuel) அணுமின் நிலையத்திலிருந்து தொலைவில் பாதுகாப்பாகச் சேமிக்க (Away from Reactor) ஏற்பாடு செய்யவில்லை. இது மிகவும் ஆபத்தானது என்று அணுஉலை எதிர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர்.

இந்திய அணுமின் உற்பத்திக் கழகம் 2013 அன்று உச்சநீதிமன்றத்தில் 2018 சூலை மாதத்திற்குள் தொலைவில் அணுக்கழிவுகளைச் சேமிக்க ஏற்பாடு செய்வோம் என்று உறுதியளித்தது. ஆனால் 2018 பிப்பிரவரி மாதம் இந்திய அணுமின் உற்பத்திக் கழகம் 2018 சூலையிலிருந்து மேலும் அய்ந்து ஆண்டுகளுக்கு நீட்டிப்புக் கோரி உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்துள்ளது. அந்த விண்ணப்பத்தில் இரஷ்ய தொழிலுநுட்ப முறையில் எரிக்கப்பட்ட அணுக்கழிவுகளை நீண்டகாலம் சேமித்து வைப்பதற்கான முன் அனுபவம் இல்லாததால், உரிய காலத்திற்குள் இந்தப் பணியை முடிக்க முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது. முதல் இரண்டு உலை களின் அணுக்கழிவுகளை எவ்வாறு பாதுகாப்பாகச் சேமிப்பது என்பத தெரியாதபோது, 3ஆம், 4ஆம் அலகுகளை அமைப் பதும், 5ஆம் 6ஆம் அலகுகளுக்குத் தொடக்க வேலை மேற் கொள்வதும் இந்திய அரசு கூடங்குளத்தைச் சுற்றிலும் உள்ள



பல மாவட்ட மக்களின் பாதுகாப்பைப் பற்றி கவலைப்பட வில்லை என்பதையே காட்டுகிறது.

பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் ஜி.சுந்தர ராசன் இதுகுறித்து வழக்குத் தொடுத்திருந்தார். இந்த அணு மின் உற்பத்திக் கழகம் 2018 சூலைமுதல் மேலும் அய்ந்து அண்டுகளுக்குக் காலநீட்டிப்புக் கோரியிருப்பதை அனுமதிக் கக்கூடாது என்று சுந்தரராசன் உச்ச நீதிமன்றத்தில் விண் ணப்பம் கொடுத்துள்ளார். அந்த விண்ணப்பத்தில் "தொலை வில் அணுக்கழிவைச் சேமிப்பதற்காக கட்டமைப்பை உரு வாக்க 2013இல் இந்திய அணுமின் உற்பத்திக் கழகம் ஒருகுழுவை அமைத்தது. அதன்பின் இதற்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. 2017இல்தான் இதற்கான வேலையைத் தொடங்கி உள்ளது. மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிவிட்டது" என்று சுந்தரராசன் தெரிவித் துள்ளார். மேலும் இரஷ்ய வல்லுநர்களுடன் இதற்கான பேச்சு வார்த்தையையும் தொடங்கவில்லை என்று கூறியிருக்கிறார்.

2013 முதல் கூடங்குளம் அணுஉலை பராமரிப்புக்காக 40 தடவைகள் அதன இயக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. சாதார ணமாக உலகில் பராமரிப்புக்காக நிறுத்தப்படும் அணுஉலை 45-60 நாள்களில் மீண்டும் இயங்கத் தொடங்கும். கூடங் குளம் முதலாவது அணுஉலை நாங்கு மாதங்களுக்குப் பிறகே இயக்கப்படுகிறது. இது மிகவும் ஆபத்தான நிலைமை யாகும்.

எனவே தொலைவில் உள்ள இடத்தில் அணுக்கழிவு களைச் சேமித்து வைப்பதற்கான உரிய ஏற்பாட்டைச் செய்து முடிக்கும் வரையில் கூடங்குளம் இரண்டு அலகுகளின் உற்பத்தியை நிறுத்தி வைக்க வேண்டும். நியூட்டிரினோ, ஸ்டர்லடைட், காவிரிப் படுகையில் மீதேன் எரிவாயு, பெட் ரோலியம் எடுத்தல் என்று தமிழர்களின் பாதுகாப்பும், வாழ் வாதாரங்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் சூழலில் கூடங்குளம் நிலையான ஆபத்தாக நிற்கிறது.

**கட்டுரைத் தொடர்-58**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1944இல் திராவிடர் கழகம் பெயர் மாற்றம் செய்யப்பட்டப் பிறகு, 1945 செப்டம்பர் 24, 25இல் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும். இம்மாநாட்டில் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைத் தீவிரப் படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருஞ்சட்டைத் தொண்டர்படை உருவாக்கப்பட்டது. நீதிக்கட்சியின் தராசு பொறித்த கொடி இந்த மாநாட்டில் இறுதியாக ஏற்றப்பட்டதோடு முடிவுக்கு வந்தது. திராவிடர் கழகத்துக்குப் புதிய கொடி உருவாக்கப்பட்டது.

1945இல் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததையொட்டி 1946இல் இந்தியா முழுவதும் தேர்தல் நடத்தப்பட்டது. திராவிடர் கழகம் இந்த தேர்தலைப் புறக்கணித்து திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைப் தீவிரப்படுத்தியது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரகாசம் சென்னை மாகாண முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரகாசம் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் பெரியாரின் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் கொள்கைகள்தான் காரணமென்றும் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அது உண் மையல்ல என்பதை வரலாறு காட்டுகிறது. அந்தத் தேர்தல் நிலவரத்தைப் பற்றி சுருக்கமாக இங்கே காணலாம்.

வழக்குரைஞர் பா.குப்பன் பெரியார் மீது சுமத்தும் மற்றொரு குற்றச்சாட்டு "தமிழ்ப் பார்ப்பனர்களிடம் சினப் பாய்ச்சல்; தெலுங்குப் பிராமணர்களிடம் இனப்பாசம்!" தமிழ் இனப்பகை பெரியார் ஈ.வெ.ரா. (பக் 53) என்று எழுதியுள்ளார். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் பா.குப்பன் தமிழ்ப் பார்ப்பனர் தெலுங்குப் பார்ப்பனர் என்று வரையறை செய்தார் என்பது அவருக்கே வெளிச்சம். பழந்தமிழகத்தில் பார்ப்பனர் என்ற சாதியே கிடையாது. தொல்காப்பியர் காலத்தில் கட்டத்தில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியப் பார்ப்பனர்கள் தமிழகத்தில் வந்துள்ளனர். தொல்காப்பியத்திலேயே வடமொழிச் சொற்களைச் சேர்ப்பதற்கான விதிகளை அவர் உருவாக்கியதிலிருந்தே இதனை நாம் உணர முடிகிறது. பெரியாரியல்வாதிகளும், மார்க்சிய வாதிகளும், உண்மையான தேசிய இன விடுதலையில் அக்கறை உள்ளவர்களும் தலைவர்களின் அரசியல் நடவடிக்கைகளை வைத்தே அவர்களின் அரசியலை மதிப்பீடு செய்ய வேண்டும். அதுதான் முறை. ஆனால் பிறப் பின் அடிப்படையில் பார்ப்பனர்கள் தங்களை உயர்ந்தவர்களாகச் சாத்திரங்களிலும், சட்டங்களிலும் எழுதி வைத்துக்கொண்டும் அதில் அவர்கள் கட்டுப்பாடாகவும் உறுதியாகவும் இருந்துக் கொண்டு மற்ற சமூகத்தினரின் மீது ஆதிக்கம் செலுத்தியதாலேயே திராவிடர் இயக்கத்தால் அவர்கள் எதிர்க்கப்பட்டார்கள்.



இராஜாஜியின் அரசியல் தலைமையைக் காப்பதற்காக ம.பொ.சியால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதே தெலுங்கர் ஆதிக்கம் என்பதெல்லாம். அடுத்தது தெலுங்கர் டி.பிரகாசம் முதல்வராக வந்ததற்குப் பார்ப்பனரல்லாதார் கொள்கையே காரணம் என்கிறார்.

1937 தேர்தலிலேயே பிரகாசம் முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டார். அவர் ஆந்திரப் பகுதியில் காங்கிரஸ் கட்சிக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ80,000த்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டு விட்டார். அதனால் அவரை முதல்வர் வேட்பாளருக்குக் காந்தி பரிந்துரைக்கவில்லை. எனினும் 1937இல் இராஜாஜி அமைச்சரவையில் பிரகாசம் வருவாய்த்துறை அமைச்சராக இரண்டாமிடத்தில் இருந்தார்.

1946 தேர்தலைத் திராவிடர் கழகம் முற்றிலுமாகப் புறக்கணித்தது. திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையிலேயே அதிதீவிரம் காட்டியது. பிரகாசத்தைப் பெரியார் ஆதரித்தார் என்பதெல்லாம் பச்சைப் பொய்.

1946 தேர்தலிலும் இராஜாஜியே முதல்வராக ஆசைப்பட்டார். காந்தியும் 1946 ஜனவரி மாதம் 'அரிஜன்' இதழில் இராஜாஜியை விட்டால் முதல்வர் வேட்பாளருக்கு வேறு தகுதியான நபர் யாரும் இல்லை. எனக்கு அதிகாரமிருந்தால் இன்றே இராஜாஜியை முதல்வர் பொறுப்பில் அமர்த்திவிடுவேன். என்ன செய்வது அந்த அதிகாரம் மாகாண காங்கிரஸ் கமிட்டியிடம் உள்ளது என்று கட்டுரை எழுதினார்.

ஆனால் 1942இல் பாக்கிஸ்தான் பிரிவினைக் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை என்றக் காரணத்தைக் கூறி இராஜாஜி காங்கிரசை விட்டு வெளியேறி விட்டார். மறுபடியும் 1945 சூன் மாதத்தில் திரும்ப வந்து காங்கிரசில் சேர்ந்து கொண்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்துக் கொள்ளாத இராஜாஜியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ள முடியாது எனப் பல காங்கிரசார் காந்திக்குக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பினர். காங்கிரஸ் மேலிடம், தமிழ்நாடு

காங்கிரஸ் தலைவர் காமராசர், ஆந்திர காங்கிரஸ் தலைவர் டி. பிரகாசம், கேரள காங்கிரஸ் தலைவர் மாதவ மேனன் ஆகியோரைத் தில்லிக்கு வர வழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது சென்னை மாகணத்தில் மொத்தம் 215 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தன. பலமான எதிர்கட்சி எதுவுமில்லாததால் காங்கிரஸ் 163 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. தடை நீக்கம் செய்யப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் முதன் முதலாகத் தேர்தலைச் சந்தித்தனர். 2 இடங்களில் வெற்றி பெற்றனர். காந்தியின் தலையீட்டின் பேரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இராஜாஜி முதல்வராக வருவதற்கு 38 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவளித்தனர். இதனால் இராஜாஜி முதல்வர் வேட்பாளர் பட்டியலில் இருந்து விலகினார்.

ஆந்திர காங்கிரஸ் தலைவர் பிரகாசம் முதல்வர் பதவிக் குப் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் பக்தவச்சலத்தின் தாய்மாமன் முத்துரங்க முதலியாரைக் காமராசர் நிறுத்தினார். ஆந்திரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 77 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே.

வாக்கெடுப்பில் இராஜாஜி குழுவினர் டாக்டர் சுப்பராயன் தலைமையில் 38 பேர் நடுநிலை வகித்தனர். மா.பொ.சி யின் எனது போராட்டம் நூலில் 33 பேர் என்று உள்ளது. அது அச்சுப் பிழையாக இருக்கலாம்.

பிரகாசத்துக்கு 82 வாக்குகளும் முத்துரங்க முதலியாருக்கு 64 வாக்குகளும் கிடைத்தன 13 வாக்கு வித்தியாசத்தில் முத்துரங்க முதலியார் தோல்வியுற்றார். இராஜாஜி குழுவினர் நடுநிலை வகித்தற்குக் கூறிய காரணம் மிகவும் முதன்மையானது. **1937 தேர்தலின் போதே ஆந்திர காங்கிரசாருடன் ஒரு உடன் படிக்கைச் செய்து கொண்டோம். அடுத்த தேர்தலில் முதல்வர் பதவி ஆந்திராவைச் சேர்ந்தவருக்குக் கொடுக்க வேண்டும் என்று, ஆகவே நடுநிலை வகிக்கிறோம்** என்றார்கள். சான்று (Wikipedia 1946 Madras Presidency Election Result) ஆக, பிரகாசம் முதல் அமைச்சராக வருவதற்கு இராஜாஜிதான் காரணமே யொழிய பெரியாரோ அல்லது காங்கிரசிலிருந்த பார்ப்பனரல்லாதார் உணர்வோ காரணமல்ல.

இந்த வரலாற்றை ம.பொ.சி அப்படியே திருப்பிப் போட்டார். ‘‘இராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராக வேண்டுமென்று 1946இல் நான் விரும்பினேன். அதற்காக கோஷ்டி சேர்ந்து பாடுபட்டேன். சகோதர காங்கிரஸ் காரர்களிடம் கல்லடியும் சொல்லடியும் பட்டேன். அன்று இராஜாஜியிடம் எனக்கிருந்த பக்தி இன்றும் உண்டு’’.... (ம.பொ.சி எனது போராட்டம் பக் 585) இந்தப் புத்தகம் 1974 இல் வெளியிடப்பட்டது.

1971இல் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் அனந்தநாயகியிடம் தோல்வியுற்ற மா.பொ.சியை 1972 இல் தி.மு.க தலைவர் மு. கருணாநிதி சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமித்து அதே ஆண்டில் மேலவைத் துணைத்தலைவராகவும் நியமித்து, அரசாங்க மகிழுந்தும் அரசாங்க பங்களாவும் கொடுத்ததால் குளிரூட்டும் அறையில் இருந்து கொண்டு இரண்டு ஆண்டுகளில் எழுதி 1974 இல் இந்நூல் வெளியிடப்பட்டது. வி.வி.கிரி என்கிற ஆந்திரப் பார்ப்பனர்தான் இந்த நூலை வெளியிட்டார்.

மேலும் ம.பொ.சி. கூறுகிறார். ‘‘இந்த நேரத்தில், இராஜாஜி டில்லி மாநகரில் தம்முடைய மகள் திருமதி லட்சுமி தேவியின் இல்லத்தில் இருந்தார். அதனால் எனது கருத்தை அவருக்கு எடுத்துரைக்கவும் இயலாத வனாக இருந்தேன். ஆனால் எப்படியோ தனது கோஷ்டி யினர் நடுநிலை வகிப்பதென்ற எண்ணம் இயற்கை யாகவே இராஜாஜிக்குத் தோன்றியது. இந்த நிலையே திரு முத்துரங்க முதலியாருக்கு வெற்றியளித்து விடு மென்று அவர் கருதினாரோ என்னவோ.’’ ம.பொ.சி (எனது போராட்டம் பக்கம் 364) அப்படியே வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டி எழுதிவிட்டார் ம.பொ.சி. முத்துரங்க முதலியார் வெற்றி பெற வேண்டுமென்று இராஜாஜி குழு நினைத்திருந்தால் அவருக்கு வாக்களித்திருக்கலாமே.

தன்னை முதலமைச்சர் பதவிக்கு வரவிடாமல் தடுத்த காமராசர் குழு வேட்பாளர் முத்துரங்க முதலியார் தோற்க வேண்டும் என்று இராஜாஜி கருதியிருக்க வேண்டும். அல்லது தமிழ்த்தேசியர் பார்வையில் கூற வேண்டு மானால் தனது இனமான தெலுங்குப் பார்ப்பனர் பிரகாசம் முதலமைச்சராக வரவேண்டுமென்று அவர் உள்ளூர நினைத்திருக்க வேண்டும்

**இராஜாஜி தெலுங்குப் பார்ப்பனரே**

இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை அவருடைய பேரன் ராஜ்மோகன் காந்தி எழுதியுள்ளார். கல்கி ராஜேந்திரன் தமிழாக்கம் செய்து 1000 பக்கங்களில் வானதி பதிப்பகம் 2010 இல் வெளியிட்டுள்ளது.

‘‘இராஜாஜியின் முன்னோர் திருப்பதிக்கு அருகே வசித்து வந்ததாகத் தெரிகிறது. இந்த தெலுங்குப் பகுதியிலிருந்து மைசூர் மன்னர்களின் ஆட்சியிலிருந்த பல காட் பீடபூமியில் பன்னப் பள்ளி கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். (பக்கம்5)

இராஜாஜியின் தந்தையார் பெயர் ‘வேங்கடார்யா’. சக்ரவர்த்தி என்பது அவர் குடும்பப் பெயர். ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளியில் அவர் முனிசிப்பாக இருந்தார். இராஜாஜிக்குப் பெற்றோர் இட்ட பெயர் ‘ராஜகோபாலாச்சாரி’ (பக் 70)

இராஜாஜியின் தந்தையைச் சக்ரவர்த்தி அய்யங்கார் என்று எல்லோரும் அழைப்பர். **அவர் சமஸ்கிருத நூல்களைத் தெலுங்கில் எழுதிப் படித்துச்** சுமாரான ஞானம் பெற்றிருந்தார் (பக்9)

இராஜாஜி பட்டப்படிப்பில், தமிழில் தேர்ச்சியடைய வில்லை. சட்டக்கல்லூரியில் சேர்ந்த பின்பு அவர்கள் பட்டப் படிப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றால்தான் சட்டப்படிப்பில் தேர்வு எழுத முடியும் என்று அறிவித்தனர். மீண்டும் தமிழ்த் தேர்வு எழுதினார். மயிரிழையில் 46/

120 மதிப்பெண்கள் பெற்றுத்தேறினர். தன்னுடைய தந்தை யாரிடம் "**தமிழ்ப் பூதத்திடமிருந்து ஒரு வழியாக விடுபட்டு வந்து விட்டேன்**" என்று கூறினார். (பக் 18)

ஆந்திராவில் உள்ள குப்பம் கிராமத்தில் இராஜாஜியின் திருமணம் நடைபெற்றது. குப்பம் கிராமத்தில் தெலுங்கு பேசுவோரே அதிகமாக இருந்தனர். இராஜாஜியின் மனைவியின் பெயர் அலமேலு மங்கம்மாள் (பக்22)

**இராஜாஜியின் மனைவிக்குத் தெலுங்கு மட்டுமே எழுதப்படிக்கத் தெரியும். திருமணத்துக்குப் பின் இாஜாஜி அவருக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தார் (பக்45)**

இராஜாஜி வழக்குரைஞர் தொழில் நடத்துவதற்காக அவருடைய குடும்பம் 1900த்தில் சேலத்தில் குடி யேறியது.

இராஜாஜி 1952 இல் சென்னை மாகாண முதல மைச்சராக இருந்த போதும் ஆந்திரர்களுக்குச் சார்பாகவே நடந்து கொண்டார்.

வடக்கு எல்லை மீட்புக் குழுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கே. விநாயகம் (தி.க,தி.மு.க.வின் ஆதரவோடு), செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்றவர் ஆச்சார்யா கிருபாளனியின் 'கிஷான் மஸ்தூர் பிரஜா பார்ட்டியின்' (அதாவது விவசாயிகள் தொழிலாளர்கள் மக்கள் கட்சி) வேட்பாளராக அவர் போட்டியிட்டார்.

அந்த கட்சிக்குத் தமிழகத்தில் செல்வாக்கு இல்லை. 1952 தேர்தலில் தி.க, தி.மு.க இரண்டுமே காங்கிரசைக் கடுமையாக எதிர்த்தும், எதிர்கட்சிகளுக்கு ஆதரவாகவும் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்ததால்தான் கே. விநாயகம், சி.பா.ஆதித்தனார் போன்றவர்கள் கிஷான் மஸ்தூர் பிரஜா கட்சியில் இருந்தபோதிலும் வெற்றிபெற முடிந்தது.

கே. விநாயகம் திருத்தணியைச் சேர்ந்தவர். எம்.ஏ., பி.எல்., படித்து வழக்குரைஞராக இருந்தவர். அவரு டைய நிலப்பகுதி நேரு சர்க்காரால் ஆந்திராவுக்குக் கொடுக்கப்பட்டதால் அதை எதிர்த்து அவர் தீவிரமாகப் போராடினார். அவர்தான் ம.பொ.சி.யை வடக்கு எல்லைப் போராட்டக் குழுவுக்குத் தலைவராக 1953 இல் நியமித்தார். ம.பொ.சி. முதலமைச்சர் இராஜாஜியுடன் நெருக்கமாக இருந்ததால் வடக்கெல்லைப் பிரச்சனை யைச் சுமூகமாக முடித்து விட முடியும் என்ற நம்பிக் கையிலேயே கே. விநாயகம் அதைச் செய்தார். அது வரை தி.மு.க.வினரும் வடக் கெல்லைப் பிரச்சனையில் ஒன்றாகவே இருந்து போராடினர். ம.பொ.சி அப்போது குலகல்விக்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரம் செய்து வந்ததால் அவருடைய தலைமையை ஏற்க முடியாது என்று வடார்க்காடு மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.எல்.சி கிருஷ்ணசாமி செய்தி ஏடுகளுக்கு அறிக்கை யொன்றை அனுப்பினார். நம் நாடு. 12.2.1954 தி.மு.க. வடக் கெல்லைப் பிரச்சனையில் தனித்தே போராடும் என்றும் அறிவித்தார்.

ஆந்திர மாநில மசோதா விவாதத்தின் போது 15-7-1953 இல் சட்டசபையில் பேசிய விநாயகம் சித்தூர் பகுதியின் வரலாற்றை எடுத்துக் கூறிவிட்டு

"I cannot understand why the Government or the Members interested in the Andhara Bill should take objection. It narrates the history of the chittor district. After all it is a history of how the Tamillians were slowly made to appear as Telugus in my parts "

என்னுடைய பகுதியின் பிரச்சனையை அரசாங் கமோ, உறுப்பினர்களோ புரிந்து கொள்ள மறுப்பது ஏன் என்று எனக்குப் புரிய வில்லை. என்னுடைய பகுதியில் தமிழர்கள் எல்லாம் கொஞ்ச கொஞ்சமாகத் தெலுங்கர் களாக மாற்றப்பட்டு வருகிறார்கள். என்று வேதனை யோடு பேசினார்.

அப்போது குறிக்கிட்டு பேசிய முதலமைச்சர் இராஜகோபாலச்சாரியார்.

"It is a very good thing" இது நன்றாக இருக்கிறதே என்று கமண்ட் அடித்தார் (ஆதாரம்: சட்ட மன்ற விவாதங்கள் (பக் 153) நாள் 15.7.1953)

இராசாசி ஆந்திரர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டார். பெரியாரைப் பொறுத்தவரை தமிழரா? தெலுங்கரா? என்று பார்த்துப் போராடுவதில்லை. கொள்கை எதிரிகள் யாராக இருந்தாலும் எதிர்த்துப் போராடினார்.

**- தொடரும்**

## நீட் தேர்வு நிரந்தர விலக்கு மாநாடு

நீட் தேர்வு நிரந்தர விலக்கு மாநாடு சென்னை தேனாம்பேட்டை காமராசர் அரங்கில் 19.4.18 வியாழக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெற்றது.

தோழர்கள் வே.ஆனைமுத்து, கொளத்தூர் மணி, கோவை கு.இராமகிருட்டிணன், பொழிலன் வெள் ளையன் தியாகு, பழ.நெடுமாறன், கி.வீரமணி, நீதிபதி இராசன், இரவீந்திரநாத், வைகோ, நல்லக்கண்ணு, திருச்சி சிவா, அன்புமணி இராமதாஸ், தொல். திருமாவளவன், தி.வேல்முருகன், சீமான், பாரதிராஜா, வைரமுத்து, சத்தியராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவரும் நீட் தேர்வு தமிழகத்திற்குத் தேவை இல்லை என்று உரத்து முழங்கினர். இயக்குநர் வ.கௌதமன் நிகழ்வை ஒருங்கிணைத்தார். உலகத் தமிழ் அமைப்பு முன் னெடுத்த இந்நிகழ்வை தமிழ்நாடு-புதுச்சேரி அனைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்புத் தமிழர் உரிமைக்கான மாணவர்கள்-இளைஞர்கள் கூட்டமைப்பு இணைந்து நடத்தியன.

# புத்தரும் நதிநீர்ப் பிரச்சனையும்

இராமியா

புத்தரைப் பற்றி நமக்குக் கிடைக்கும் செய்திகளில் பெரும்பாலானவை உண்மைக்கு மாறானவையே. அவர் ஒரு பரம நாத்திகர். ஆனால் அவர் திருமாலின் ஒன்பதாவது அவதாரம் என்று கதை கட்டிக் கொண்டு இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர் ஒரு முரணற்ற லோகாயதவாதி அதாவது பொருள் முதல்வாதி. ஆனால் அவர் பெயரில் கணக்கற்ற ஆன்மீகக் கதைகள் உலவிக் கொண்டு இருக்கின்றன.

புத்தர் துறவியாவார் என்று சோதிடர்கள் சொன்னதால், அவ்வாறு ஆகிவிடாமல் தடுக்க அவரை வெளி உலகமே தெரியாமல் வளர்த்ததாக நமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். அவர் எதேச்சையாக ஒரு நாள் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்ததாகவும், இன்னொரு நாள் நோயாளி ஒருவரைப் பார்த்ததாகவும், இன்னொரு நாள் மரணம் எய்திய ஒரு மனிதனைப் பார்த்ததாகவும் அவற்றின் மூலம் இவ்வுலகின் "நிலையாமைத்" தத்துவத்தைப் புரிந்து கொண்டதாகவும் நமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். உலகின் நிலையாமையைக் கண்டு "மனம் கலங்கிய" அவர் இதற்கு விடை தேடும் பொருட்டுத் துறவு பூண்டார் என்றும், அதன் பின் ஒரு நாள் போதி (அரச) மரத்தடியில் திடீரென ஞானம் உதித்ததாகவும், தர்க்கவாதத்திற்குச் சற்றும் பொருத்தம் இல்லாத கதையை வலுக்கட்டாயமாக மக்களின் மனங்களில் திணித்து வைத்து இருக்கிறார்கள்.

ஆனால் அது உண்மையா? இல்லவே இல்லை. உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. புத்தர் துறவு பூண நேர்ந்த காரணத்தை அண்ணல் அம்பேத்கர் அவருடைய "புத்தமும் அவருடைய தம்மமும்" என்ற நூலில் தெளிவாக விளக்குகிறார்.

கபிலவஸ்து சாக்கியர்களின் தலைநகரம். அங்கே சாக்கிய மன்னர் சுத்தோதனரின் மகனாகப் பிறந்தவர்தான் புத்தர். பெற்றோர்கள் அவருக்கு இட்ட பெயர் கவுதம சித்தார்த்தர். கவுதம சித்தார்த்தர் மற்றவர்களைப் போல் தான் வளர்க்கப்பட்டாரே ஒழிய வெளி உலகம் தெரியாமல் வளர்க்கப்படவில்லை. அவருக்கு இருபது வயது நிரம்பிய உடன் சாக்கிய சங்கத்தில் உறுப்பினராக இணைக்கப்பட்டார். அவர் சங்கத்தில் சேர்க்கப்பட்டு எட்டு ஆண்டுகள் வரை பிரச்சினை இல்லாமல் காலம் சுமுகமாகவே சென்றது. அவருடைய இருபத்து எட்டாவது வயதில் ஒரு பிரச்சினை தோன்றியது.

சாக்கிய நாடும் கோலிய நாடும் அண்டை நாடுகள். இரு நாடுகளும் விவசாயத்திற்கு ரோகினி ஆற்றின் நீரைப் பகிர்ந்து கொண்டு இருந்தன. நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் இரு நாட்டினருக்கும் இடையே சச்சரவுகள் வருவதும் பேச்சு வார்த்தைகள் மூலமாகவோ சிறு சிறு மோதல்களினாலே தீர்வு காண்பதும் வழக்கமான ஒன்றாக இருந்தது. அந்த ஆண்டு சச்சரவு மிகப் பெரிதாகி, போர் தொடுக்கும் அளவிற்கு முற்றி விட்டது. இதைப் பற்றி விவாதிக்க, படைத்தலைவர் சங்கத்தைக் கூட்டினார். நடந்த சச்சரவுகளை விளக்கி விட்டு இதைத் தீர்க்கக் கோலியர்கள் மீது படை எடுக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் கவுதம சித்தார்த்தரும் அவருடைய நண்பர்கள் சிலரும் போர் தேவை இல்லை என நினைத்து விவாதித்தனர். வினாவிற்கு விடையும், விடைக்கு மேல் வினாக்களுமாக விவாதம் தொடர்ந்தது. இறுதியில் கவுதம சித்தார்த்தரின் அறிவுக் கூர்மையான விவாதம் கோலியர்களுக்குத் தண்ணீர் தர மறுப்பதும், அவர்கள் மீது போர் தொடுக்க முனைவதும் நியாயம் அல்ல என்று உணர்த்தியது.

ஆனால் படைத்தலைவர் விவாதத்தைத் திசை திருப்பி வாக்கெடுப்பு நடத்த வேண்டினார். அவ்விதமே வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் போர் நடத்தவே விரும்பினர். ஆனால் கவுதம சித்தார்த்தரால் இம்முடிவை ஏற்க முடியவில்லை.

சங்கத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முடிவு செய்தால், மற்றவர்களும் அதன்படி நடக்க வேண்டும். அப்படி நடக்க மறுப்பவர்களுக்குத் தண்டனை அளிக்கச் சங்கத்திற்கு அதிகாரம் இருந்தது. சங்க விதிகளின்படி, சங்கத்தின் முடிவுக்குக் கட்டுப்பட மறுப்பவரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம்; அல்லது அவரை நாடு கடத்தலாம்; அல்லது அவருக்கு மரண தண்டனை அளிக்கலாம்.

ஆனால் கவுதம சித்தார்த்தர் விஷயத்தில் தண்டனையை நிறைவேற்றுவதில் ஒரு சிக்கல் இருந்தது. சாக்கிய நாடு கோசலப் பேரரசின் கீழ் ஒரு சிற்றரசாக இருந்தது. கவுதம சித்தார்த்தர் அறிவிலும் அழகிலும் பண்பிலும் மிகச் சிறந்த மனிதராக இருந்தார். அவருடைய ஆளுமை கோசலப் பேரரசரை மிகவும் கவர்ந்து இருந்தது. பேரரசர் கவுதமர் மேல் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். இப்பொழுது அவருக்குத் தண்டனை அளித்தால் பேரரசர் நிச்சயமாகத் தலையிடுவார். அப்படித் தலையிட்டால் சங்கத்தின் முடிவு தவறு என்று உணர்ந்து சங்கத்தின் மீதே நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டார்.

இக்கட்டில் மாட்டிக்கொண்ட படைத்தலைவர் கவுதம சித்தார்த்தரிடம் பேரரசரின் அன்பைப் பெற்ற ஆணவத்தில் சங்கத்தை எதிர்க்கிறாயா எனக் கோபமாகக் கேட்டார். கவுதம சித்தார்த்தர் தனக்கு அவ்வித ஆணவம் இல்லை என்றும், இந்த இக்கட்டில் இருந்து மீள்வதற்கான தீர்வைத் தானே தருவதாகவும் கூறினார். சங்க விதிகளின்படி நாடு கடத்துவது ஒரு தண்டனை ஆகும் என்று சுட்டிக்காட்டி, அதற்கு ஈடாகத் தானே துறவு பூண்டு நாட்டை விட்டுச் சென்று விடுவதாகக் கூறினார். சங்கத்தைப் பொறுத்தமட்டில் அவரை நாடு கடத்தியது போல் ஆகிவிடும் என்றும், பேரரசர் சங்கத்தின் மேல் குறை காண முடியாது என்றும் விளக்கினார்.

இவ்வாறு கூறி, கவுதம சித்தார்த்தர் துறவறம் பூண்டு சென்றார். புத்தரின் துறவறம் இந்தச் சூழ்நிலையில் தான் நிகழ்ந்ததே ஒழிய, பார்ப்பனர்கள் கட்டிவிட்ட கதைகளின் போல் அல்ல.

# ஆதித்திராவிட மக்களின் விடுதலைப் போராளி-அயோத்திதாசர்

- மரு.க.சோமாஸ்கந்தன்

எழிலார்ந்த சென்னை மாநகரம் பறையர்களின் சேரிகளாகவும், மீனவர்களின் குப்பங்களாகவும் திகழ்ந்த காலத்தில் ஆங்கிலேயர்கள் இங்கு குடியேறினர்.19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் ஆங்கிலராட்சி சென்னைமண்டிலத்திலிருந்து தொடங்கப் பெற்றது.

அந்த ஆங்கிலர் ஆட்சியில் 1843 ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் 1861 ஆம் ஆண்டில் இந்தியன் பீனல்கோடு சட்டம் ஆகியவற்றின் மூலம் சண்டாளர்கள் என அழைக்கப்பட்ட தீண்டப்படாதத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்ட பூர்வ விடுதலை கிடைத்தது என்றாலும் நடைமுறையில் விடுதலை இல்லை;சமூக ரீதியில் அவர்கள் தொடர்ந்து அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். இந்து மேல்ஜாதியக் கொடுமைகளுக்கு அவர்கள் ஆட்பட்டு அவதிக்குள்ளாகி வாழ்க்கையை நடத்திவந்தனர்.

இந்நிலையில் 1845 ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள், மைலாப்பூரில் சித்த மருத்துவத் தொழில் புரிந்து வந்த தீண்டப்படாத சமூகத்தைச் சேர்ந்த கந்தசாமி என்பவரின் மகனாக அயோத்திதாசர் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் மகிமா நகரில் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காத்தவராயன்.என்பதாகும்.

### அயோத்திதாசரின் குடும்பப் பின்னணி


சென்னை மாகாண ஆட்சியராகத் தாமஸ் மன்றோ 1820 முதல் 1827வரை பணியாற்றினார். அவரிடம் கம்பனி நிர்வாகத்தின் பொறியாளராக ஜார்ஜ் ஆரிங்டன் பணியாற்றி வந்தார். அந்தப் பொறியாளரிடம் தாழ்த்தப் பட்ட சமூகத்தச் சார்ந்த கந்தப்பனார் வேலை செய்து வந்தார் இவர் அயோத்திதாசரின் பாட்டனார்.

தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவர்கள்.அந்த நாளில் சித்தமருத்துவத்தில் தேர்ந்தவகளாயிருந் துள்ளனர். மேலும் அவர்கள் இலக்கியம்,இசை, நாடகம் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினர். பல தமிழ் ஓலைச் சுவடிகளையும் போற்றிக் கண்ணெனக் காத்து வந்துள்ளனர்.

கந்தப்பனாரும் சித்த மருத்துவராகச் சிறந்து விளங்கி னார். அவரிடம் திருக்குறள், திருவள்ளுவமாலை, நாலடி நானூறு ஆகிய தமிழ் இலக்கிய ஓலைச் சுவடிகள் பாதுகாப்பாக இருந்தன.அவரின்சொந்த ஊர் கோவை அரசம்பாளையம் என்ற போதிலும் அவர் சென்னை மைலாப்பூரிலேயே பெரும்பாலும் வாழ்ந்து வந்தார்.

### திருக்குறள் நூல் பதிப்பித்தல்

சென்னையில் 1825 ஆம் ஆண்டில் தமிழ் ஓலைச் சுவடிகளை அச்சிலேற்றிப் பதிப்பிக்கும் நோக்கில் திருவாளர் பிரான்சிஸ் வைட் எல்லிஸ் அவர்களால் தமிழ்ச் சங்கம், நிறுவப்பட்டது.. அவர் பொறியாளர் ஜார்ஜ் ஆரிங்டன் அவர் களுடைய உற்ற நண்பர் ஆவார். எல்லிஸ் அவர் களிடம், கந்தப்பனார் தன் னிடமிருந்த திருக்குறள், நாலடி நானூறு ஓலைச் சுவடிகளை ஒப்படைத்து அச்சேற்றி நூலாக வெளி யிடும்படி கேட்டுக்கொண் டார். அப்பொழுது எல்லிஸ் அவர்களிடம் பழகிய பிராமண நண்பர்கள், கந்தப்பன் தீண்டப்படாத வகுப்பினன்; அவன் சொல்வதையும் கொடுப்பதையும் ஏற்க வேண்டாம், என்று அறிவுரை கூறியுள்ளனர். எனினும் அக்கெடுமதியாளரின் பொய்யுரைகளைப் புறந்தள்ளி, திருக்குறளையும், நாலடி நானூறையும் நூலாக அச்சிட்டு 1831 ஆம் ஆண்டு வெளியிட்டார்.



### கல்வி

காத்தவராயன் குருகுல முறைப்படி,சென்னை காசிமேட்டில் வசித்த வல்லக்காளத்தி வீ.அயோத்தி தாசரிடம் கல்வி பயின்றார். காத்தவராயன், தமிழ், பாலி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெரும்புலமை பெற்றார்.சித்த மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்ற மருத்து வர் ஆக விளங்கினார்.தன் ஆசிரியர் அயோத்திதாசர் மீது கொண்ட அளப்பரிய மதிப்பினால் காத்தவராயன் தன் பெயரை அயோத்திதாசர் என்று புனைந்து கொண்டார். அயோத்திதாசப் பண்டிதர் என்றே அதன்பின் அறியப்பட்டார்

அயோத்திதாசப் பண்டிதர் பாலி மொழியில் புலமை பெற்றதால் வேத மூல நூல்களை நன்கு பயின்று ஆய்ந் தார். ஆங்கிலத்தில் பைபிளையும் ஆழ்ந்து கற்றார். இசுலாம், சீக்கிய சமய நூல்களையும் தத்துவங்களையும் ஆழமாக ஆய்வு செய்தார்.

மக்கள் வாழ்வியல் நெறிமுறைகளை ஆய்ந்தார். பறையர் இனமக்களின் அவலத்திற்கான காரணங்களை ஆய்ந்தார்.ஆசையே துன்பங்களுக்குக் காரணம் எனப் புத்தர் புகன்றார்.பறையர் வாழ்வில் உயர்வடைதல் வேண்டும் என்ற ஆசையின்மையாலும், கல்வி மறுக்கப்பட்டதாலும் வளர்ச்சி குன்றி வீழ்ச்சியுற்றனர் என்று அயோத்திதாச பண்டிதர் உணர்ந்தார்.

### நீலகிரி வாழ்க்கை

அயோத்திதாசப் பண்டிதரின் தந்தை கந்தசாமி அலுவல் காரணமாகக் குன்னூருக்குக் குடி பெயர்ந்தார், அதனால் கல்வி கற்பதற்காகச் சென்னையில் வாழ்ந்து

வந்த அயோத்திதாசப் பண்டிதர் தன் இளமைக்காலத்தில் நீலகிரியிலுள்ள குன்னூரில் வாழ வேண்டிய தாயிற்று. நீலகிரியில் வாழ்ந்த காலத்தில் அயோத்திதாசப் பண்டிதர், ஆங்கில அரசினாிடம், நிலமற்ற தீண்டத்தகாத மக்களுக்கு விளை நிலங்களை வழங்கி அவர்களது ஏழ்மை நிலையைப் போக்கவேண்டும் என்று கோரினார். அவருடைய கோரிக்கையை ஏற்று பஞ்சமர்களுக்கு அரசு நிலம் வழங்கியது. அவ்விதம் வழங்கிய நிலங்களைப் பஞ்சமி நிலங்கள் என்று கூறினர்.

குன்னூரில் வாழ்ந்தோர் பெரும்பாலும் தாழ்த்தப் பட்டோரும், மலைவாழ் பழங்குடி மக்களுமேயாவர். இவர்கள் வெள்ளையரின் தேயிலை, காஃபித் தோட் டங்களில் அடிமைக் கூலிகளாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் அறியாமையிலும், ஏழ்மையிலும் உழன்று வந்தனர், இந்நிலையைப் பயன்படுத்திக் கிறித்துவ சமய ஊழியர்கள் இவர்களை மதமாற்றம் செய்து வந்தனர். இதனைக்கண்டு மனம் பொறாத அயோத்திதாச பண்டிதர் மதமாற்றத்தை எதிர்த்தார். அந்த மக்களிடம், நீங்கள் இம்மண்ணின் மைந்தர்கள்; சாதியும் தீண்டாமையும் சில தன்னலக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டவை. இதன் காரணமாய் நீங்கள் மதம் மாறக் கூடாது. மதம் மாறும் தீண்டப்படாதவர் தாய் நாட்டுப் பற்றும், தம் பண்பாட்டு உணர்வும் அற்றவர்களாக ஆகிவிடுவர் என்று கூறி உணர்வு ஊட்டி மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தினார்..

### 1870- அத்வைதானந்த சபை

எனவே தீண்டப்படாதவர்க்கு சிறந்த சமயக் கோட் பாடுகளை வடிவமைத்து நெறிப்படுத்துவதற்காக கி.பி. 1870 இல் அத்வைதானந்த சபை எனும் அமைப் பினைத் தோற்றுவித்தார். அவ்வமயம் அயோத்திதாச பண்டிதர் ஆதிசங்கரரின் அத்வைத தத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

(ஆதி சங்கரர் கி.பி.768 இல் கேரளத்தில் காலடியில் வைதீக நம்பூதிரி பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். காசியில் வேத விற்பன்னராகத் திகழ்ந்த விசுவநாதன் என்னும் தீன்டப்படாத இனத்தைச் சார்ந்த ஒருவரிடம் ஞானோபதேசம் பெற்று ஞானியானார். அவர் தன் குருவின் ஆணைப்படி 4 மடங்களை நிறுவினார். அவை இமயத்தில் பத்ரிநாத், குஜராத்தில் துவாரகை, ஒரிஸாவில் ஜெகந்நாதபுரி, மைசூரில் சிருங்கேரி ஆகியவை. அந்த மடங்களில் அத்வைத கோட்பாடுகள் புகட்டப்பட்டன. )

நீலகிரியில் சில ஏக்கர் நிலங்களை வாங்கினார். அந்நிலங்களை ஏழை எளிய மக்களிடம் அருளி பயிரிடச் செய்தார். அவ்விடத்தில் துளசிமடம் எனும் மடம் நிறுவி, நின்ற வடிவிலான புத்தர் சிலையை நிறுவினார் என அறியப்படுகின்றது. அந்த மடத்தில் தான் எழுதிய நூல் களுடன் பெரும் நூலகத்தை அமைத்தார் எனவும் தெரிய வருகின்றது. அவர் நீலகிரியை விட்டு அகன்ற பின்னர் அந்த மடமும் நிலங்களும் கவனிப்பாரின்றி வேறு ஒருவர் வசமாகி சீரழிந்தது என்று தெரிகிறது.

குன்னூரில் தோடர் பழங்குடிப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவருடன் இரங்கூனுக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. தசரதராமன் என்று பெயரிட்டு அழைத்தார். அக்குழந்தை சிறிது காலத்தில் இறந்துவிட்டது. அதன் பின் அவரது மனைவியும் இறந்துவிட்டார். அவர் மீண்டும் குன்னூர் திரும்பிவிட்டார். 10 ஆண்டுகள் இரங்கூனிலிருந்து விட்டு குன்னூர் வந்த அயோத்திதாசப் பண்டிதர் தனது உறவினர் இரட்டைமலை சீனிவாசன் தங்கை தன லெட்சுமியை திருமணம் செய்து கொண்டார். இருவரும் இணைபிரியாது கருத்தொருமித்து இல்லறம் எனும் நல்லறம் போற்றிவாழ்ந்தனர். அவ்விணையருக்கு, பட்டாபி ராமன், மாதவரம், ஜானகிராமன், இராஜாராமன் என்ற நான்கு புதல்வர்கள் பிறந்தனர். அயோத்திதாசப் பண்டிதர் புத்த நெறியில் திளைத்த பின்னர் பிறந்த இரண்டு புதல்விகளுக்கும் அம்பிகாதேவி, மாயாதேவி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

### 1881 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு

1881 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்புப்படி சென்னை மண்டிலத்தில் தீண்டப்படாதமக்கள் நூற்றுக்கு பதினைந்து விழுக்காடு என்ற அளவில் இருந்தனர். அவர்களைச் சாதிகளற்ற ஆதிதிராவிடர் என்றே பதிவு செய்யவேண்டும் என்று அயோத்திதாசப்பண்டிதர் கோரினார். அந்த மக்களையும் தங்களை ஆதிதிராவிடர் என்றே பதிவு செய்து கொள்ளும்படி வேண்டினார். அந்தக் காலம் மக்களிடையே சாதிவேறுபாடு மிகவும் வேரூன்றி யிருந்தது. மக்கள் ஒருவரை ஒருவர் சாதிப்பெயரைச் சொல்லியே அழைத்துக் கொண்டனர் சாதிதான் தமிழ் நாட்டு மக்களின் அடையாளமாக இருந்து வந்துள்ளது. ஆதலால் தீண்டப்படாத மக்களை பறையர் என்றே மேட்டுக்குடியினர் அழைத்து இழிவு செய்தனர். எனவே சாதிகளற்ற ஆதி திராவிடர் எனப் பெயர் மாற்றம் சமூகக் களத்திலும் அரசியல் களத்திலும் போராடுதற்கு அவசியமாக அமைந்திருந்தது.

1881 மக்கள் கணக்கெடுப்பின் போது தொடங்கி பின்னர் 1911 இல் மக்கள் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட காலம் வரை சாதியற்ற தொல்குடி மக்களின் அடையா ளத்தைப் பேண அயோத்திதாசப்பண்டிதர் கடுமையாகப் போராடியுள்ளார்.

இந்துக்களுக்கு மத்தியில் இந்துவல்லாமல் வாழ் பவர்கள் இத்தேசத்தின் பூர்வக்குடிகளாகும். இவர்கள் சாதிபேதமற்ற திராவிடர்களும் பௌத்தர்களுமாவர். இவர்களே இந்த மண்ணின் மைந்தர்களாவர். இவர் களுக்கு இந்துக்கள் சத்துருக்களே யாவர். என்றார்

சென்ற குடிமதிப்பெடுத்த காலத்தில் பறையனென்னும் பெயர் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே தோன்றிய சாதிப் பெயரென்று சென்ற சென்சஸ் கமிஷ்னர் தன் மக்கள் கணக்கெடுப்பு அறிக்கைப் பேரேட்டில் வெளியிட்டிருக்கின்றார்கள் இவை யாவையும் தற்கால மக்கள் கணக்கெடுப்பு ஆணையர் மேன்மை தங்கிய கேய்ட் அவர்கள் கண்ணுற்று மக்கள் கணக்கெடுக்கின் போது, தங்கள் அறியாமையாலும் அச்சத்தாலும் இந்துக்களுக்குப் புறம்பான பூர்வகுடியினரில் சிலர் பறையர்களென்றும் கூறுவார்கள். அவர்கள் யாவரையும் அப்பெயரால் குறிக்காது சாதி பேதமற்ற திராவிடர்களென ஒரே பெயரால் குறிப்பது உத்தமம். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்துக்கள் அடையும் சுதந்திரங்களைச் சாதி பேதமற்ற திராவிடர்கள் அடையவும் ஏதுவுண்டாகவும் என அயோத்திதாசப்பண்டிதர் எழுதியுள்ளார் (17.12.1910)

அதுமட்டுமல்லாது கிறித்துவர்களையும் இஸ்லாமியர்களையும் தவிர்த்து பிறர் அனைவரையும் இந்து என்றே பதிவு செய்தனர் 1861 முதல் 1891 வரை. இதனையும் அயோத்திதாசப்பண்டிதர் எதிர்த்தார்.

அயோத்திதாசப்பண்டிதர் காலத்தில் இந்துத்வம் மீட்டுருவாக்கம் செய்தகாலம். பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகள் மூலம் இந்துத்துவத்தை இந்துக்கள் திணித்தனர். தீண்டாமை காணாமை சாதியக் கொடுமைகளை அனுபவிக்கும் ஆதிதிராவிடர்கள் ஒரு போதும் இந்து அடையாளத்தை ஏற்கக் கூடாது என்றார், அயோத்திதாசப்பண்டிதர்.

தமிழகத்தில் அப்போது பக்தி இயக்கத்தின் மூலம் தமிழ்-சைவ மீட்டுருவாக்க முயற்சி நடந்தது. தமிழ்-சைவம் பிராமண எதிர்ப்பு பேசியது. சாதி ஒழிப்பு குறித்து மௌனம் சாதித்தது. அதனால் தமிழ்-சைவத்தோடு அயோத்திதாசப்பண்டிதர் இணையவில்லை.

**ஹென்றி ஸ்டில் ஆல்காட், பிளவாட்ஸ்கி சந்திப்பு**

ஹென்றி ஸ்டில் ஆல்காட் அமெரிக்கர். பல்கலைப் படிப்பினை முடித்த அமெரிக்கவிவசாயி. அமெரிக்க உள் நாட்டுப்போரில் பணிபுரிந்து கர்னலாகப் பதவி பெற்றார்.. போருக்குப் பின் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்

பிளாவட்ஸ்கி அம்மையார் ரஸ்யர், இவர் அகவை 17 இல் திருமணம் செய்துகொண்டவர். இல்வாழ்வில் நாட்டமின்றி தத்துவத் தேடலோடு பல நாடுகளில் சுற்றி வந்தவர்.

கர்னல் ஹென்றி ஸ்டில் ஆல்காட், பிளாவட்ஸ்கி அம்மையார் அவர்களை அமெரிக்காவில் சந்தித்தார். இருவரும் 1875இல் தியோசபிகள் சொசைட்டியை நிறுவினர். இருவரும் 1879இல் சென்னை வந்தனர். சென்னையில் அடையாறில் 1883 இல் பிரம்ம ஞான சபையைத் தோற்றுவித்தனர். ஓய்வுக்காக நீலகிரி வந்த கர்னல் ஆல்காட் அவர்களையும், அம்மையார் பிளாவட்ஸ்கியையும் தன் மைத்துனர் இரட்டைமலை சீனிவாசனுடன் 1882 இல் அயோத்திதாசப்பண்டிதர் சந்தித்து ஆல்காட் அவர்களுடன் நட்பு பாராட்டினார். கர்னல் ஆல்காட் புத்த நெறியில் ஈடுபாடு கொண்டிருந்தவர் என்பதால் அயோத்திதாசப்பண்டிதர் அவர்கள் அவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

பிரம்ம ஞான சபையின் ஆண்டுவிழா 1884 இல் கர்னல் ஆல்காட்டின் தலைமையில் நடைபெற்றது இந்த விழாவில் பல நாட்டவர்கள், பார்சிகள், வங்காளிகள் தமிழகப் பிராமணர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இவர்களுடன் இரட்டைமலை சீனிவாசனும், அயோத்திதாசப்பண்டிதரும் கலந்து கொண்டனர். அனைவரும் இணைந்து பிரிட்டிஷ் அரசுடன் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த ஓர் அமைப்பினை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அதன் விளைவாக1885 இல் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பே பின்னாளில் காங்கிரஸ் இயக்கமாக உருவாயிற்று. அயோத்திதாசப்பண்டிதர் பிரம்ம ஞான சபையின் தொடக்கமுதல் உறுப்பினர். கர்னல் ஆல்காட்டுடன் நெருங்கிய நண்பராக இருந்தார். காங்கிரசின் தொடக்க முதல் அயோத்திதாசப்பண்டிதரும் இணைந்து பணியாற்றினார். காங்கிரஸ் பண்பாட்டு இயக்கமாகவும், பின்னர் இந்தியற்கு வேலை கோரி மனுப்போடும் இயக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளது.

தன்னுடைய இன இழிவு நீங்கவும், வேலை வாய்ப்புகளைப் பெற்று ஈடேறவும் காங்கிரஸ் கட்சி பயன்படும் என நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அயோத்திதாசப்பண்டிதரின் நம்பிக்கைகள் ஊமை கண்ட கனவாயிற்று காங்கிரஸ் இந்துக்களின் இயக்கமாக-பிராமணருக்கான இயக்கமாக இருப்பதை உணர்ந்தார். காங்கிரஸ் இந்து ஆசார அனுஷ்டங்களைக் காக்கப் பாடுபடும் இயக்கம் எனத் தெளிந்தார். காங்கிரசின் செயல் முறைத் திட்டங்களை ஆய்ந்து எதிர்க்கத் தலைப்பட்டார் இந்நிலையில் இந்தியாவிற்கு விடுதலை கிடைத்தால் ஆங்கிலேயன் இடத்தில்-ஆட்சி அதிகாரத்தில் பிராமணர்களே அமர்ந்து கொள்வர் என்பதும், அவர் கையில் ஆட்சி மாறினால் ஆதிதிராவிடர் கதி என்னவாகும் என்பதும் அயோத்திதாசப்பண்டிதரின் நியாயமான அச்சமாகும். அதனால் இந்தியாவிற்கு உடனடியாக விடுதலை வேண்டாம் என்றார்- சாதிய ஆதிக்கம் சமுதாயத்தில் இருக்கும் வரை, சமுதாய ஏற்றத் தாழ்வுகள் நீங்கும் வரை விடுதலை வேண்டாம் என்றார். அதையும் மீறி சுதந்திரம் அளித்தால், அதனை மண்ணின் மைந்தர்களிடமே வழங்கவேண்டும். நேற்று குடியேறிய வந்தேறிகளைச் (ஆரியர்கள்) சுதேசிகள் எனக்கருதி ஆட்சியை வழங்கினால்நாடு நாடாயிராது சீரழிந்து கெட்டுவிடும் என்று எழுதினார்.

**பஞ்சமர் பள்ளிகள்**

கல்வி கற்க வாய்ப்பின்றி கடையர்களாக வாழ்ந்த இம்மண்ணின் மைந்தரான ஆதிதிராவிடர் ஆங்கிலேயர்

.வருகைக்குப் பின் தான், தம் காலில் நிற்கத் தலைப் பட்டனர் என்பது வரலாற்று உண்மை எனக் கண்டார். கர்னல் ஆல்காட்டுடன் ஏற்பட்ட நட்பினால் அவரின் துணையோடு 1892 இல் சென்னை நகரின் சேரிப் பகுதிகளில் பள்ளிகளை நிறுவி சேரிப் பிள்ளைகளுக்குக் கல்விக் கண் நல்கினார் அயோத்திதாசப் பண்டிதர். இந்தப் பள்ளிகள் அடையாறு, செள்ளாளர், தேனாம் பேட்டை, மைலாப்பூர் கோடம்பாக்கம் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. இவை கர்னல் ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன .இப்பள்ளிகளில் 1894 லேயே மதிய உணவு வழங்கவும் அயோத்திதாசப் பண்டிதர் ஏற்பாடு செய்திருந்தார் என்றறிகிறோம்.இப் பள்ளிகள், தரத்தில் மேட்டுக்குடி மக்களுக்காகவே ஏற் பட்டிருந்த பள்ளிகளுக்கு இணையாகவே இருந்துள்ளன எனப் பாராட்டி ஆங்கில நாளிதழ்கள் செய்திவெளியிட்டன.

### திராவிடர் கழகம்

ஆதிதிராவிடர் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆதிதிராவிடர் தலைவர்கள், அறிவுசான்ற பெரியோர் அனைவரும் தீவிரமாக சமூகசிந்தனையோடு செயலாற்றினர். அத்தகைய சான்றோர்களில் ஒருவர் ஜான் ரத்தினம். அவர் சென்னை வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அப்பெருமகன் 1882 லிருந்து திராவிடர் கழகம் என்ற அமைப்பை நிறுவி சமூகப் பணியாற்றி வந்துள்ளார். அவருடன் அயோத்தி தாசப் பண்டிதர்.இணைந்து திராவிடப் பாண்டியன் என்னும் இதழை 1885 இல் தொடங்கினார்.இந்த இதழுக்கு ஜான் ரத்தினம் அவர்கள் ஆசிரியராக இருந்தார். அயோத்திதாசப் பண்டிதர் துணை ஆசிரியர் பொறுப்பை ஏற்று ஆதி திரவிடமக்களின் எழுச்சிக்காகவும், விடுதலைக் காகவும் பாடுபட்டார்.1887 வரை இவ்விதழ் நடைபெற்று வந்துள்ளது. ஜான் ரத்தினம் 1887இல் மதிப்புறு மாகாண நீதிபதியாக பதவியேற்றவுடன் இதழை நடத்த இயல வில்லை.

### திராவிட மகா ஜனசபை

நீலகிரியில் அயோத்திதாசப் பண்டிதர் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்திட 1890 இல் திராவிட மகா ஜனசபையைத் தொடங்கினார்.

திராவிடர் என்ற சொல் ஆரியரல்லாத, ஆரியக் கலப்பில்லாத மண்ணின் மைந்தர்களான தமிழர்களைக் குறிப்பது என்றும், திராவிடர் என்ற சொல் ஆரியரல்லாத தூய தமிழர்களைக் குறிக்கும் தேசிய இனப் பெயர் என்றும் அயோத்தித் தாசப் பண்டிதர் குறிப்பிட்டார்.

இந்த அமைப்பின் முதல் மாநாடு 1-12-1891 இல் நீலகிரியில் நடைபெற்றது. அம்மா நாட்டில் தலைமை வகித்தவர் திராவிட மகா ஜனசபைத் தலைவர் அயோத்தி தாசப் பண்டிதர். தாழ்த்தப்பட்டோர் இந்தியாவில் நடத்திய முதல் மாநாடு. இம்மாநாட்டில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட இனமக்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஏற்ற வழிமுறைகள் குறித்து ஆய்வுகள் நடைபெற்றன. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பிரிட்டிஷ் அரசினருக்கு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டன.உடன் இந்தியக் காங்கிரஸ் இயக்கத்திற்கும் பத்து அம்சக் கோரிக்கை ஒன்றை அனுப்பியது.காங்கிரஸ் இயக்கம், அன்றிருந்த ஒரே அரசியல் இயக்கமாகும். ஆதலால் இந்தப் பத்து அம்சக் கோரிக்கையைப் பரிசீலித்து அரசிடம் விளக்கி காங்கிரஸ்நிறைவேற்றித் தரும் என மாநாட்டினர் நம்பினர்

### காங்கிரசுக்கு அனுப்பிய கோரிக்கைகள்

1. தீண்டப்படாத மக்களைப் பறையர் எனவிளித்தல் குற்றம் எனச் சட்டம் இயற்ற வலியுறுத்தியது
2. தீண்டப்படாத மக்களுக்குக் கல்வி வசதியளித்தல்
3. தீண்டப்படாத மக்களுக்குக் கல்வி உதவித் தொகை அளித்தல்
4. தீண்டப்படாத மக்களில் கற்றவர்களுக்குத் தடையின்றி அரசுப்பணி வழங்குதல்
5. உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்கல்
6. பொதுக்குளம், கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் உரிமை வழங்குதல்
7. பொது இடங்களில் நுழைய உரிமை
8. அரசு அலுவலகங்களில் தங்கு தடையின்றி அனுமதித்து நீதி அளித்தல்
9. கிராம முன்சீப் அலுவலகங்களில் நியமிக்கப்படுதல்.
10. சிறைச் சாலை சட்டம் 464 பிரிவை நீக்குதல் (அக் காலத்தில் சிறைச் சாலை விதி 464 வது சட்டத்தில் பறையர்களைச் சகல தாழ்ந்த வேலைகளைச் செய்விக்கலாம் என்று இருப்பதை நீக்கவேண்டும்)

ஆகிய கோரிக்கைகளைப் பொது விண்ணப்பமாக 21-12 1891 அன்று காங்கிரஸ் செயலாளர் எம்.வீரராகவாச் சாரியார் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. காங்கிரஸ் செயலாளர் அந்த விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட தற்கான ஒப்புதல் கடிதம் தராததோடு அவ்விண்ணப் பத்தின் மீது மேல் நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதன் மூலம் காங்கிரஸ் அனைவருக்குமான இயக்க மன்று என்றும், ஆதிக்கச் சாதியினரின் இயக்கமென்றும் நிருபனமாயிற்று

மேல் சாதி இந்துக்கள், திராவிட மகா ஜனசபையை, பறையர் மகா ஜன சபை என்றே அழைத்தனர். தமிழரின் இதழ்களையும் பறையன் பத்திரிக்கை என்று தொடவும் மறுத்தனர். ஆனால் அயோத்திதாசப் பண்டிதர் திராவிட மகா ஜனசபை மூலம் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆங்கில அரசினரிடம் கேட்டுப் பெறும் சலுகைகளைத் தாங்களும் திராவிடர்கள் தான் எனக் கூறிப் பயன் பெற்றனர். அதனையறிந்தஅயோத்திதாசப் பண்டிதர்

ஆதி திராவிடமகா ஜனசபை எனப் பெயர் மாற்றம் செய்தார் 1892 ஆம் ஆண்டு.1928 இல் இச் சபை அகில இந்திய ஆதி திராவிட மகா ஜன சபை எனப் பெயர் மாற்றம் பெற்றது.

1892 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் சென்னையில் விக்டோரியா நகர அவையில் சென்னை மகாசனசபை கூடியது, அயோத்திதாசப் பண்டிதரும், நீலகிரிப் பிரதி நிதியாக வீற்றிருந்தார், அயோத்திதாசப் பண்டிதர் தெய்வம் பொது எனக் கூறக் கேட்டிருக்கிறோம். ஆதலால் எம் குலத்தினரும்சிவாலயங்களிலும் விஷ்னு ஆலயங் களிலும் நுழைந்து வணங்கிட வழிசெய்தல் வேண்டும் என்று சபைத் தலைவரை நோக்கி விண்ணப்பித்தார். அப்போது கூடியிருந்த அனைவரும் ஒருமனதாய் எழுந்து நின்று கூச்சலிட்டு ஆலய நுழைவு விண்ணபத்தை எதிர்த்தனர். அப்போது தஞ்சைப் பிரதி நிதி சிவராம சாஸ்திரியார் எழுந்து, உங்களுக்கு மதுரை வீரன், காட்டேரி, கருப்பண்ணன் ஆகிய சாமிகளைக் கொடுத் துள்ளோம். சிவனும் விஷ்ணுவும் உங்களுக்கு உரியவை அல்ல என்றார். அதன்பின் அயோத்திதாசப் பண்டிதர், தங்கள் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியும், கிராமங்கள் தோறும் பள்ளிகளும் வேண்டும் என்றும், ஏழைகள் பயிர் செய்து பிழைத்திட நிலங்களும் வழங்கவேண்டும் என்றும் அரசினரிடம் பரிந்துரைத்து பெற்றுத் தர வேண்டும் என்று கோரினார். உடன் எல்லூர் பிரதிநிதி சங்கர் எழுந்து, இச் சமூகத்தார், நாட்டின் முதுகெலும்பு போன்று அனைவருக்கும் பயன்படுபவர் ஆனபடியால் அவர்க்கு வேண்டுவன செய்தல் வேண்டும் என்றார். அதன் பின் அனைவரின் முழு ஒப்புதலோடு ,பண்டிதரின் விண்ணப்பங்களை அரசிடம் சமர்ப்பித்தனர். அரசு அக்கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்து ஏற்று அவற்றை நிறைவேற்றியது.

### பௌத்தம் ஏற்றல்

தன் சமூகமக்களைத் தீண்டப்படாதவர் என்று இழிவு படுத்துவதாலும் நால்வருணத்தைத் தூக்கிப்பிடித்துச் சாதிய வேறுபாடுகளை வற்புறுத்துவதாலும் இந்து மதத்தை அவர் ஏற்கவில்லை.ஆதிதிராவிடமக்களின் வாழ்வை மீட்டெடுப்பதற்காகவும் சுதந்திரம் சகோதரத்துவம் சம உரிமைப் பெறவும் அயோத்திதாசர் பௌத்தத்தை ஏற்க முன்வந்தார்.

1898 இல் ஹென்றி ஆல்காட்டையும், அனகாரிகா தர்ம்பாலாவையும் சந்தித்துத் தானும் தம் மக்களும் பௌத்த நெறியைத் தழுவ இருப்பதாகத் தெரிவித்தார். அதனால், 1898 இல் இலங்கையில் நடைபெற்ற புத்தமா நாட்டிற்கு ஆல்காட்டுடன் அயோத்திதாசப் பண்டிதரும், அடையாறு ஆல்காட் பஞ்சமர் பள்ளியின் தலைமை ஆசிரியர் பி.கிருஷ்ணசாமியும் சென்றனர். இலங்கை சென்றபின்னர், அயோத்திதாசப் பண்டிதர் பௌத்த சமயத்தில் இணைந்தார். சென்னை திரும்பியதும் 1902 இல் இராயப்பேட்டையில் தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தை நிறுவினார், சென்னையில் இச்சங்கத்தின் கிளைகள் நிறுவப்பட்டன.இச் சங்க அமைப்புகளில் பல்லாயிரம் ஆதிதிராவிடர் உறுப்பினர்களாயினர்.

வாரந்தோறும் இச்சங்கத்தில் அறிஞர்களைக் கொண்டு பௌத்த நெறிகளை விளக்கச் செய்தார். மதத்தை நிறுவியவர் திருவிறக்க மாந்தர் (அவதாரப் புருஷர்) என்பர்.ஆனால் புத்தர் அவதாரப் புருஷர் அல்லர். பௌத்தம் மதம் அன்று; அது வாழ்க்கை நெறி;அதுவே ஆதித் தமிழரின் நெறியாக இருந்துள்ளது.புத்த நெறியில் கடவுள் இல்லை; சிலைவழிபாடுகளும் சடங்குகளும் கிடையா என்றும் விளக்கினர். புத்த நெறியைப் பரப்பு வதற்கு நாத்திக நாயுடு என அழைக்கப்படும் பேரா. இலட்சுமிநரசு நாயுடுவும், சிந்தனைச் சிற்பி சிங்காரவே லரும் அவருக்குத் துணையாக விருந்தனர்

### பண்டிதரும் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும்

இராயப்பேட்டை பௌத்த சாக்கிய சங்கத்தில் ஒரு நாள் சிங்காரவேலர் உரையாற்றும் போது விவிலியம் வரலாற்றுத் தொடர்பான நூல் அல்ல என்றும் வரலாற்று அடிப்படையில் விவிலியமும் புராணப் புரட்டே என்றும் பேசி முடித்தார். திரு.வி.க. அக்கூற்றினை மறுத்து சமய நூல்கள் புனிதமானவை யென்றும், இவற்றில் வரலாற்றுக்கோ பகுத்தறிவுக்கோ இடமில்லை யென்றும் கூறிக்கொதித்தெழுந்தார்.மற்றொரு நாள் அருங்கலைச் செப்பு என்ற தலைப்பில் அயோத்திதாசப் பண்டிதர் புத்த நெறிகளை விளக்கி உரை நிகழ்த்திய பின் பேரா. இலட்சுமி நரசு, திருவரங்கம் கோயில் ஒரு பௌத்தக் கோயிலே என்று வரலாறு, கட்டடக்கலை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பேசினார். அக்கோயிலில் பள்ளி கொண்டிருக்கும் அரங்க நாதன், அறவாணன் என்றும் அக்கோயிலின் மூலக் கட்டடம் புத்தர் பள்ளிக் கட்டடமே என்று சான்றுகளோடு பேசி நிறுவினார். திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக மாற்றிய கதையை தருக்கமுறையில் மறுத்துரைத்தார். அப்போது திரு.வி.க மத வெறியுடன் தன் நண்பர்களுடன் கலகம் விளைவித்தார். இந்நிகழ்ச்சியைத் தன் இறுதிக்காலத்தில் எண்ணி வருந்தியதாகத் திரு.வி.க. எழுதியுள்ளார். முதலில் மதவெறி கொண்டிருந்த திரு.வி.க பிற்காலத்தில் அயோத்திதாசர், இலட்சுமி நரசு, சிங்காரவேலர் ஆகி யோரின் பகுத்தறிவு கொள்கைகளையும் புத்த நெறி இயக்கத்தையும் பெரிதும் மதித்துப் போற்றினார்.6-4-1928 இல் பௌத்த சங்கக் கூட்டத்தில் திரு.வி.க. தமிழ் நூல்களில் பௌத்தம் என்ற தலைப்பில் உரையாற்றி யதிலிருந்து இவருடைய காழ்ப்புணர்வு நீங்கிவிட்டதை உணரலாம்.

### தமிழன் இதழ் தொடக்கம்

1906 ஆம் ஆண்டு சூன் திங்கள் 19ஆம் நாள், தன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பரப்புதற்கென்று

''ஒரு பைசாத் தமிழன்'' என்ற வார இதழைச் சென்னை இராயப்பேட்டையில்தொடங்கினார். தமிழ் மணம். பரவ விரும்பும் அனைத்துத் தமிழரும் ஆதரவு அளிக்கவேண்டும் என்று பணிவுடன் கோரினார். 26-8-1908 ஆம் ஆண்டு வாசகர்கள் விருப்பிற்கிணங்க தமிழன் என்று பெயர் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டது

இவ்விதழில் பௌத்த நெறிகளைத் தெளிவாக விளக்கி எழுதினார். புத்தரின் அறிவுரைகளைப் பூர்வத் தமிழொளி எனும் தலைப்பில் வெளியிட்டார். இத் தொடர் 1912 இல் பூர்வத் தமிழொளியாம் புத்தரது ஆதி வேதம் என்ற பெயரில் நூலாக வெளியிடப் பட்டது. இந்த இதழில் பண்டிதரின் முக்கியப் படைப்புகள் தொடர்ந்து வெளியிடப் பெற்றன. தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தில் உரையாற்றிய அறிஞர்களின் உரைகள் தமிழன் இதழில் வெளியிடப்பட்டன. இந்தியா, சுதேசமித்திரன் முதலான ஏடுகள் முன்னெடுத்த சுயராஜ்ஜிய அரசியலை விமரிசனம் செய்து கட்டுரைகள் வெளியாகின. இந்தியாவின் பொது மொழி இந்தி என்ற கருத்தினை எதிர்த்து பண்டிதர், இந்தி இந்து சாதிமதத்தோடு தொடர்புடையது. ஆதலால் அம்மொழிக்கு இந்தியாவின் பொதுமொழியாகும் தகுதி கிடையாது. ஆங்கிலமே எல்லா சார்பினருக்கும் பொருந்தும் மொழி. ஆகவே ஆங்கிலமே பொதுமொழியாகும் தகுதி பெற்றது என்று 1911ஆம் ஆண்டு தமிழனில் எழுதினார் பண்டிதர், அதே போன்று ஈனப் பறையர்கள் என்று பாரதி எழுதியதைக் கண்டித்து எழுதினார். பறையர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் ஆதித் தமிழர்கள். திராவிட இனத்தினர் என்றெழுதினார் இந்த இதழில் பெண்களுக்கெனத் தனியாக ஒரு பத்தியும் ஒதுக்கப்பட்டிருந்தது. அயோத்திதாசரின் ஆய்வுகள் தமிழன் இதழில் வெளிவந்து திராவிடர் இன எழுச்சிக்கு வித்திட்டது.


பௌத்த மறுமலர்ச்சியாளரான அயோத்திதாசப் பண்டிதரின் மறைவுக்குப் பின்னர் அவர் புதல்வர் பட்டாபிராமன் என்பாரை ஆசிரியராகக் கொண்டு தமிழன் 17-6-1914 முதல் 26-8-1915 வரை வெளிவந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு 7-7-1926 முதல் 27-6-1934 வரை கோலார் தங்கவயல் பண்டிதமணி. கோ. அப்பாத்துரை அவர்களை ஆசிரியராகக் கொண்டு தமிழன் வெளி வந்தது.

தீண்டப்படாத இனமக்களுக்கு சமஉரிமையும், சமநீதியும், சமவாய்ப்பும், சுதந்திரமும் கிடைத்திட அயராது பாடுபட்ட அறிவு ஆசான் அயோத்திதாசப் பண்டிதர் 1914 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகளைப் போற்றி ஏற்போம். அவர் போற்றிய பௌத்த நெறிகளை நிலைபெறச் செய்வோம். நாம் மொழியால் தமிழர் களாகவும் இனத்தால் திராவிடர்களாகவும் வாழ்வோம்!

❖

# மனித உரிமைக்காவலர் இராஜேந்தர் சச்சார் மறைந்தார்



மனித உரிமைப் போராளியும் இந்திய இசுலாமியர்களின் அவலநிலையை வெளி உலகிற்குத் தன் அறிக்கை மூலம் உணர்த்தியவரும், தில்லி உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவருமான இராஜேந்தர் சச்சார் தன் 94ஆம் அகவையில் 2018 ஏப்பிரல் 20 அன்று தில்லியில் மறைவுற்றார்.

இப்போது பாக்கித்தானில் உள்ள லாகூரில் பிறந்து வளர்ந்த இராஜேந்திர சச்சார் தேசப்பிரிவினையின் போது தன் கண்முண்ணே இந்தக்கள் கொன்று குவிக்கப்படுவதைக் காணப் பொறுக்காமல், இந்தியாவுக்கு வந்தவர். தில்லிக்கு வந்துசேரும் வழியில் இசுலாமியர்கள் இரத்த வெள்ளத்தில் மிதப்பதைக் கண்ணெதிரே கண்டவர். மதத்தின் பெயரிலான இப்படுகொலைகள் ஆறாத வடுவாக அவர் உள்ளத்தில் இருந்தது. எனவேதான் 2005ஆம் ஆண்டு இந்திய இசுலாமியர் நிலைகுறித்து ஆராய நடுவண் அரசு அமைத்த ஆறு பேர் கொண்ட குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றார். 2006 ஆம் ஆண்டு சச்சார் தலைமையிலான குழு அரசிடம் அளித்த அறிக்கை உலக அளவில் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. சச்சார் குழு அறிக்கையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளில் இசுலாமியர் 3.2 விழுக்காடு மட்டுமே உள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

சச்சார் அறிக்கையில், ''இசுலாமியர்கள் தாங்கள் 'தேச விரோதிகள் அல்ல,' 'பயங்கரவாதிகள் அல்ல' என்பதை நாள்தோறும் மெய்ப்பிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர். அதனால் அவர்களால் சமூக-பொருளாதார நிலைகளில் பெரிய அளவில் வளர முடியவில்லை. பொது வெளியிலும் அரசுப் பொறியமைவாலும் எப்போதும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் தாங்கள் பார்க்கப்படுவதாக மருகுகிறார்கள். இது அவர்களுடைய ஆழ்மனதை அழுத்தத்துக்கு உள்ளாக்குகிறது'' என்று இசுலாமியர்களின் அவலநிலையை விளக்கியுள்ளார். மோடி ஆட்சியில் இசுலாமியர் மீதான வெறுப்பு மனநிலை திட்டமிட்டு வளர்க்கப்படும் நிலையிம் சச்சார் அறிக்கையின் இன்றியாமையாமை மேலும் வலுப்பெறுகிறது.

மரணதண்டனைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் எழுப்பியவர் சச்சார். பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் மரண தண்டனையை நீக்கப் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டார். 1986 முதல் 1995 வரை மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தலைவராக இருந்தார். ஈழத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டதை இனப்படுகொலை என்று கண்டித்தார். மதச்சார்ப்பின்மையில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்த மனித உரிமைக் காவலராகத் திகழ்ந்த இராஜேந்திர சச்சாரின் இறப்புப் பேரிழப்பாகும்.

# வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

## கி.இரா.பாலாஜி - பிரியா



வேலூர் மாவட்டம், வாலாசாப்பேட்டை ம.பெ.பொ.க. தோழர் கி.இராமச்சந்திரன்-இரா.மேகலா இணையரின் மகன் பாலாஜிக்கும், வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் காந்திநகர் து.செல்வகுமார்-செ.உமாமகேஸ்வரி இணையரின் மகள் பிரியாவிற்கும் திருமணவிழா 22.4.2018 ஞாயிறு காலை 7.30 மணிக்கு திருப்பதியில் நடைபெற்றது. திருமண வரவேற்பு விழா 25.4.18 புதன் மாலை 7 மணிக்கு வாலாசாப்பேட்டை பாலாஜி திருமணக் கூடத்தில் நடைபெற்றது. மா.பெ.பொ.க. தோழர்கள் மோ.சி.சங்கர், சா.குப்பன், ப.வெங்கடேசன், வாலாசா வல்லவன் மற்றும் தோழமை இயக்கத்தினரும் ஆசிரியப் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.1000/- வழங்கப்பட்டது.

## அன்பரசி - க.பாலாஜி



சீர்காழி தோழர் மா.முத்துச்சாமி அவர்களின் இளைய மகனும், மா.பெ.பொ.க.நாகை மாவட்டச் செயலாளர் முத்து.அன்பழகனின் தம்பியுமான முத்து.இரணியன்-மகாலெட்சுமி இணையரின் இளையமகள் இ.அன்பரசி, பி.இ., க்கும் நெய்வேலி டவுன்ஷிப் வெ.கருணாநிதி-விஜயராணி மகன் க.பாலாஜிக்கும் 22.4.18 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நாகை மாவட்டம சீர்காழி **M.A.L. A/C** மகால் திருமண மண்டபத்தில் வாழ்க்கைத்துணைநல ஒப்பந்தவிழா மயிலாடுதுறை எ.வி.சி.கல்லூரி மேநாள் பேராசிரியர் முனைவர் த.செயராமன் தலைமையில் நடைபெற்றது. நெய்வேலி நாடார் சங்க சிறப்புத் தலைவர் டி.வேல்சாமி நாடார் சங்கத்தலைவர் பி.திருமால் கொழுந்து நாடார், பொருளாளர் டி.ராஜமாரியப்பன் ஆகியோர் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். செம்பனார்கோயில் கலைமகள் குழுமத்தின் நிறுவனர் தாளார் க.நெடுஞ்செழியன்-செந்தமிழ்ச்செல்வி, மா.பெ.பொ.க. சார்பில் கலச இராமலிங்கம், துரை சித்தார்த்தன், திருச்சி கலியபெருமாள், கோ.மு.கருப்பய்யா, கருப்புச்சட்டை கோ.செயராமன், வடக்குமாங்குடி பா.மோகன், கே.வி.கே.சேகர் ஆகியோர் நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார்கள். மணமக்கள் சார்பில் ரூ.1000/- சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டது.

## தமிழ்ச்செல்வன் - தீபா





20.04.2018 அன்று, திருவேற்காடு, பாலாஜி மகால் திருமண மண்டத்தில், திரு.கோ.தங்கவேல்-தனித் தமிழ்நாடு இணையரின் மகன் தமிழ்ச்செல்வனுக்கும் திரு.தயாளன்-ஜெயந்தி இணையரின் மகள் தீபாவிற்கும் இனிதே திருமணம் நடைபெற்றது. வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சமுதாய அறிஞர் வே.ஆனைமுத்து அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

திருமண நிகழ்ச்சிக்கு சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் டாக்டர் பொற்கோ அவர்கள் தலைமை ஏற்றுத் திருமணத்தை நடத்தி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். திருமிகு.புலவர் செந்தலை கவுதமன் அவர்கள் சமுதாயத்தில், பெரியார், தமிழ்மறவர் வை.பொன்னம்பலனார் ஆகியோர் ஆற்றிய பணியை விரிவாக விளக்கி மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினார். திருமண நிகழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.1000 வழங்கப்பட்டது.

## பா.ரஞ்சித்குமார் - சி.சரண்யா

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், முருக்கன்குடி கிராமம் வீ.பாலுச்சாமி-திரிபுரசுந்தரி-மருதாம்பாள் அவர்களின் மகன் பா.ரஞ்சித்குமார் அவர்களுக்கும் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம் பிலிமிசை கிராமம் மு.சின்னத்தம்பி ராணி அவர்களின் மகளுமான சி.சரண்யா அவர்களுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா பெரம்பலூர் சின்னமணி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 26.3.2018 திங்கள் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

## பிரபாவதி - சரவணன்

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை, ம.மருது-உமா பார்வதி இணையரின் மகள் பிரபாவதிக்கும், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம், ஓசூர் கிராமம் மறைந்த வீராசாமி-இலட்சுமி இணையரின் மகன் சரவணன் ஆகியோருக்கு பங்குனித் திங்கள் 5ந் நாள் 19.3.18 அன்று வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா நடைபெற்றது.

அதன் வரவேற்புவிழா 22.3.18 அன்று உளுந்தூர்பேட்டை மணமகள் இல்லத்தில் தொ.எழில் நிலவன் தலைமையில் நடைபெற்றது. ம.மருது வரவேற்புரையாற்றினார். கோ.லோகநாதன், சா.சங்க கொளஞ்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மணமக்களை வாழ்த்தி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் ஒருங்கிணைப்புப் பேரவையின் மாநில தலைவர் ஜி.கே.மணி, மாநிலச் செயலர் சி.வெங்கடேசன் மாவட்டத் துணைச் செயலர் நா.நரசிங்கம், சீனு, ஆறுமுகம் ஆகியோர் பேசினார்கள்.

த.மாசிலாமணி, த.அப்பாவு, மு.மாரிமுத்து அன்பழகன், பலராமக்கண்ணன், ரா.வெங்கிடேசன், த.ரவீந்திரன், சீனு.சண்முகம், எழில் உதயன், நா.வெண்ணிலா ஆகியோர் விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

மணமகன் சரவணன் நன்றி கூறினார். சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக மணமக்கள் சார்பாக ரூ.200/- வழங்கப்பட்டது.

## போ நீ

அழிவுசெய் அரக்கா போ நீ
ஆள்கிற சனியே போ நீ
இழிவுடை மனத்தா போ நீ
ஈனனே இடும்பா போ நீ!

உலகெலாம் பழிக்கும் போ நீ
ஊர்சுற்றும் உலக்கை போ நீ
எமையெலாம் ஏய்ப்பாய் போ நீ
ஏழையை வதைத்தாய் போ நீ

ஐயமில் திருடா போ நீ
ஒற்றுமை குலைத்தாய் போ நீ
ஓலத்தை வளர்த்தாய் போ நீ
ஔவையின் வசைபோல் போ நீ

கலகமே செய்தாய் போ நீ
சகலரும் வெறுத்தார் போ நீ
ஞமலியாய் அலைந்து போ நீ
தகுதியே இல்லான் போ நீ

நம்பிக்கைக் கெடுத்தாய் போ நீ
பதவிக்கே படுத்தாய் போ நீ
மதவெறி விலங்கே போ நீ
யாவையும் அழித்தாய் போ நீ

வசைகொண்டு வாழ்ந்தாய் போ நீ
வஞ்சகா கேடா போ நீ!
திசையெட்டும் காறித் துப்பும்
திமிரனே போ நீ! போ நீ!

- பாவலர் வையவன்

## திராவிட இயக்க கொள்கை மறவர் சா.கணேசன் மறைவு



திராவிட முன்னேற்றக் கழகத்தன் மூத்த உறுப்பினரும் 1970களில் சென்னை நகர மேயராக விளங்கியவருமமான சா.கணேசன் அவர்கள் 13.4.18, செவ்வாய் இரவு மறைவுற்றார். பெரியாரின் கொள்கையிலும் பொதுவுடைமைச் சிந்தனையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். எப்போது எளிமையாக வாழ்ந்தவர். மேயராக இருந்தபோதுகூட அரசுப் பேருந்தில் பயணம் செய்தவர். எப்போதும் சிவப்பு துண்டு அணிந்திருப்பவர். தோழமை இயக்கங்கள் நடத்தும் கூட்டங்கள், மாநாடுகளில் தவறாமல் கலந்து கொள்ளும் பண்புடையவர். 14.4.2018 புதன் மாலை அவருடைய இறுதி நிகழ்வில் தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் உள்பட ஏராளமானார் கலந்து கொண்டனர். ம.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் க.முகிலன், கலசம், வாலாசா வல்லவன் ஆகியோர் கலந்து கொண்டனர். அன்னாரது மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நமக்கு எப்படி இவர்களால் நலன்கள் கிடைக்கும்?

கைபர் கணவாய் வழியாக வந்தேறிய ஆரியர்கள் இந்திய நாகரிகத்தைக் கண்டு வியந்து அனைத்து நல்ல பழக்கங்களையும் அவர்கள் நம்மிடமிருந்த கற்றுக்கொண்டு அவர்களிடமிருந்த கெட்ட பழக்கவழக்கங்களை (மது அருந்துதல், பிறன் மனைவி நாடல், சூதாடுதல்... போன்ற) நமக்குக் கற்றுக்கொடுத்து இன்றளவும் நம்மை அஃறிணை யாகப் பார்த்து வருபவர்கள் ஆரியர்களே. தாழ்த்தப்பட்ட வர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் உயர் பதவிகளில் இருந்தால் அவர்களைச் செயல்படாவிடாமல் ஊறுவிளைப்பது, குற்றம் சொல்லிக் களங்கம் விளைவிப்பது அல்லது வெகுமக்களுக்கு விரோதச் செயல்களை இவர்களைக் கொண்டு செயல்படுத்தி எதிர்ப்பை உண்டாக்குவது போன்ற தீங்குகளைச் செய்வது போன்றவை ஆரியர்களின் செயலே ஆகும். 3 விழுக் காட்டிற்கும் குறைவாக உள்ள ஆரியர்கள் 97 விழுக்காடு உள்ளவர்களை ஆட்சி செய்வது நம்மிடையே உள்ள தன்னலக்காரர்களும் கருங்காலிகளுமே காரணமாகும்.

நாமும் நமக்கு நன்மை செய்யும் மானமிகு மற்றும் மாண்புமிகு மனிதர்களைக்கண்டு அவர்களுடன் ஒன்று பட்டுச் செயல்படுவோம். 93 வயதிலும் இடப்பங்கீட்டுக்கு போராடும் அய்யா வே.ஆனைமுத்து அவர்களின் எண்ணம் வெற்றிபெறப் பாடுபடுவோம். **- உழவர் மகன் ப.வ.**

## ஆதிக்கம் செலுத்தும் ஆளும் வர்க்கத்தின் கருத்துகள்

"ஆளும் வர்க்கத்தின் கருத்துகளே ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆளும் கருத்துகளாக இருக்கின்றன. அதாவது, சமுதாயத்தில் பொருள்வகையில் எந்த வர்க்கம் ஆளும் சக்தியாக உள்ளதோ, அதே வர்க்கம்தான் அதே சமயம் அறிவாற்றல் துறையில் ஆளும் சக்தியாக விளங்குகிறது. பொருள்வகை உற்பத்திச் சாதனங்களைத் தன் கைவசம் வைத்திருக்கும் வர்க்கமே, அக்காரணத்தாலேயே, பொதுவாகச் சொல்லப் போனால் சிந்தனைப் படைப்புச் சாதனங்களையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத் திருக்கிறது. இதனால் சிந்தனைப் படைப்புச் சாதனங்கள் இல்லாதவர்களின் கருத்துகள் ஆளும் வர்க்கததிற்குக் கட்டுப்பட்டவையாகின்றன. ஆளும் கருத்துகள் என்பன உண்மையில் ஆதிக்கம் செலுத்தும் பொருள்வகை உறவுகளின் கருத்து வெளிப்பாடேயன்றி வேறல்ல".

**- காரல் மார்க்ஸ்,** ஜெர்மன் சித்தாந்தம் நூல்

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மே-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| மருத்துவர் **சோமாஸ்கந்தன்** | கோவை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மே-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

## மகவு பிறந்ததன் மகிழ்வாக

மரு.சத்யா-மரு.விடுதலை விரும்பி இணைய ருக்கு 7.4.2018 அன்று ஆண் மகவு பிறந்ததன் மகிழ்வின் அடையாளமாக மகவின் தாத்தா மு.பாலகுருசாமி சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- அளித்தார்.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**